# KINGDOM OF JUDAH

# யூதா ராட்சிய வியாக்கியானம்

OFFICE OF THE REGISTRAR
1 AUG 1928
MADRAS

# யூதாராட்சிய வியாக்கியானம்.

இது.

கனம். கானன் செல் ஐயர், D.D.,

எழுதியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 AUG 1928
MADRAS

எஸ். பரஞ்சோதி ஐயர், B.A., தமிழில் மொழிபெயர்த்தது.

MADRAS

S. P. C. K. DEPOSITORY

1928

600 005
223489

PRINTED AT THE
DIOCESAN PRESS, MADRAS
1928—B4662

## இந்திய திருச்சபைக் குருமாருக்கு.

பிரகாசிப்பர் குருமாரும்
பேசும் தம் ஜீவ்யத்தால் போதிப்பரே;
புத்ரர், பெற்ளேர் வணங்கவும்;
சகலரும் உம்மைத் தொழுவரே,
உம்மைத் தொழுகையில்
அன்பாம் நெருப்பினில்
தம்மை என்றும் தகிப்பரே.

KEBLE,
(தமிழ்ப்படுத்திய கவி).

# யூதா ராட்சியம்

## பிரிவினையின் காரணங்கள்.

(1ராஜா xi.43—xiv. 31; 2நாளா. ix. 31—xii.16).

ரெகொபொவாம் தன் தகப்பன் சாலமோனுக்குப்பின் அரசனானான். ஆனால் சாலமோன் அரசாண்ட ராட்சியத்தைவிட அவனுடைய ராட்சியம் வெகுசுருக்கம். அவன் அரசாட்சியின் தொடக்கத்தில் பெரிய பிரிவினை உண்டாக, தனித்த யூதா ராட்சியத்தின் சரித்திரம் தொடங்கினது. இப்பிரிவினையால் லபித்தபலன் நெடுங்காலம் எட்டினதால் அதற்குரிய காரணங்களை விசாரித்தறிவது அவசியம். அதன் அயல்காரணம் யூதாவின் அரசனாகிய ரெகொபெயாமின் அவிவேகமான நடபடிகளும் ரெகொபொவாமின் கலகமுமே. இதனால் இஸ்ரவேல் ராட்சியமென்றும் யூதா ராட்சியமென்றும் வெவ்வேறு ராட்சியங்கள் உண்டாயிற்று. இதன் ஆதிகாரணங்களை அறியவேண்டுமானால் வெகுகாலத்திற்குமுன்னுள்ள சரித்திரத்தை விசாரிக்க வேண்டும்.

தாவீது சாலமோன் அரசர் காலத்தில் எபிரேய ஜனங்கள் ஒரு பெரிய ராட்சியத்தை ஸ்தாபித்தார்கள். அது ஸ்திரமாயும் செல்வப்பெருக்குள்ளதாயும் இருந்தது. அது வெகுகாலம் நிலைத்திருக்குமென்று வெளிக்குத் தோன்றினது, என்றாலும் ஐக்யத்தாழ்ச்சியின் விதைகள் அதில் மறைந்திருந்தது. கானான்தேசத்தில் படையெடுத்துப் பிரவேசித்தபோது ஒவ்வொரு கோத்திரமும் தன் தன் காரியத்தைப் பார்க்கநேரிட்டது. சகல கோத்திரங்களுக்குப் பொதுவான அதிபதியுமில்லை, ஒருமைப்பாடான யாதொரு நடபடியுமில்லை.

யூதாவும் சிமியோனும் தெற்கேபோய் அங்கே குடியிருந்து தேசத்தின் மற்றபாகத்து க்ஷேமத்தில் யாதொரு உரிமையும் பாராட்டினதில்லை. தேபோராளின் ஸ்தோத்ர கீதத்தில் யூதாவின் பேரில்லை. மற்றக் கோத்திரத்தார் யூதாவுக்கு வடக்கும் யோர்தானுக்குக் கிழக்குமாகக் குடியேறினார்கள். வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் சில கானானியபட்டணங்கள் எல்லைக்குறியாக இருந்தது. ஆதிகாலத்திலும்கூட வடக்குக்கும் தெற்குக்கும் இஸ்ரவேல் யூதா என்ற வித்யாசமான பேர்கள் வழங்கினது.[1]

பெலிஸ்தியரால் நேரிட இருந்த மோசத்தை நீக்குவதற்கு பென்யமீன் கோத்திரத்தானாகிய சவுலின் கீழ் சிலகாலம் எல்லாரும் ஐக்யத்துடன் போர் செய்தார்கள். என்றாலும் அவன் தாவீதை உபத்ரவப்படுத்தினதால் யூதா மனுஷருடைய பக்தம் குன்றிப்போனது. அவர்களில் அனேகர் தாவீது தப்பி ஓடினபோது அவனோடு கூடப்போய்ச் சேர்ந்துகொண்டார்கள். அம

1 1சாமு. xi. 8; xvii. 52; 2சாமு. xi, 11; 1ராஜா i. 35; iv. 20, 25

லேக்கியனை முறியடித்தபின், கொள்ளைப்பொருளில் ஒருபாகத்தை யூதாவின் மூப்பர்களுக்கு வெகுமதியாக அனுப்பினான். (1சாமு. xxx.26). சவுல் மரணமானவுடனே யூதாப்புத்திரர் தாவீதை அரசனாகத் தெரிந்துக்கொண்டார்கள். (2சாமு. ii.4). பென்யமீன் கோத்திரத்தார் சவுல் குடும்பத்திற்கு பக்தமுள்ளவர்களாய் இஸ்போசேத்தை அரசனாகத் தெரிந்துக்கொண்டார்கள். (2சாமு. ii.10). அப்சலோமின் கலகத்தில் தாவீது எருசலேமை விட்டுப் புறப்பட்டுப்போனபோது சீமேயி அவனைப் பின்தொடர்ந்து சபித்தான். இவன் பென்யமீன் கோத்திரத்தான், 'சவுல்வீட்டு வம்சத்தான்.' (2சாமு. xvi.5). தாவீதை அரசனாக அபிஷேகம்பண்ணின விஷயத்தில் யூதாமனுஷர் தங்களை ஆலோசிக்கவில்லை என்று இஸ்ரவேல் மனுஷர் முறையிட்டார்கள். 'இஸ்ரவேலே, நீங்கள் அவரவர் உங்கள் கூடாரங்களுக்குப் போய்விடுங்கள்' என்று கலகம் எழுப்பினது சேபா. இவன் பென்யமீன் கோத்திரத்தான். (2சாமு. xx 2). இதற்குப்பின் தாவீது வெற்றிநிறைந்த தன் போர்களால் ராட்சியத்தை ஒரே ஐக்யமுள்ளதாக்கினான். இப்போர்கள் விசேஷமாய் வடக்குக் கோத்திரத்தாருக்கு அனுகூலமாயிருந்தது. என்றாலும் எப்ராயீம் யூதாக் கோத்திரத்தாருக்குள்ள பொறாமை மறைந்து நிலைகொண்டிருந்தது.

யாக்கோபு யோசேப்புக்குக் கொடுத்த ஆசீர்வாதம் புகழ்ச்சியும் க்ஷேமமும் நிறைந்ததாய் இருந்தது. அது மற்றக் கோத்திரங்களுக்குக் கிடைத்ததை விட மேலானதாய் இருந்தது. யோசேப், எப்பிராயீம்–மனாசே என்ற இரண்டு கோத்திரம் அடங்கியதாயிருந்தது. இந்தக் கோத்திரங்களுக்குக்கிடைத்த மத் [illegible] வல்லமை ஐசுவரியத்தினாலும், இந்த ஆசீர்வாதம் அவர்களுடைய மேன்மையைக் காட்டுகிறது.

பேர்போன அருங்கிரியைகளைச் செய்த பெரியதலைவர்கள் இந்தக் கோத்திரங்களைச்சேர்ந்தவர்கள். இவர்கள் யோசுவா, பாராக், தேபோராபள், கிதியோன், சாமுவேல், சவுல் முதலியவர்களாம். இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரங்களாலும் அரசனாக்கப்பட்ட தாவீது (2சாமு. v.1). தான் செய்த போரின் வெற்றிகளால் ஜாதி அனைத்தையும் வெளிப்பார்வைக்கு ஒரே ஐக்யமாய் வைத்துக்கொண்டிருந்தான்; ஆனால் அப்சலோமின் கலகம் முடிந்தபின், இருபட்சமும் இருந்த பழைய எதிரித்தனம் திரும்பத் தலைகாட்டினது. (2சாமு. xix. 41. 3). எப்ராயீம் கோத்திரத்தார் விசேஷமாய் இந்த விரோதத்தை அனல் மூட்டிக்கொண்டிருந்தார்கள். யாக்கோபின் ஆசீர்வாதம் பெரியகாரியங்களைச் செய்வதற்குத் தைரியம் கொடுத்தது. அப்படியே எப்ராயீம் கோத்திரத்தானாகிய யோசுவாவின்கீழ் இஸ்ரவேலர் கானான் தேசத்தை ஜெயித்தார்கள். தேசத்தில் மேன்மையான ஸ்தானதைப் பெற்றுக்கொண்டு முக்கியமான நடபடிகளில் தாங்கள் தலைமையாயிருக்க விரும்பினார்கள். அனேக வருஷங்களுக்குமுன் அபிமலேக் என்ற தங்களரசன் சிக்கேமில் அரசாண்டான் என்பதை மனதில் வைத்துக்கொண்டார்கள். மீதியானியருக்கு விரோதமான யுத்தத்தில் கிதியோன் தங்களை அழைக்கவில்லை என்று முறைப்பாடுபண்ணினார்கள். அப்சலோமின் மரணத்திற்குப்பின் அரசனை எருசலேமுக்குத் திரும்பக்கொண்டுவருவதில் யூதமனுஷர் தங்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை என்று குறைகூறினார்கள். (2சாமு. xix. 40–3). பரிசுத்த சீலோ தங்கள் நாட்டிலிருந்தது, சாமுவேல் எப்ராயீமலை

லேவியன். எப்ராயீம் பென்யமீன் கோத்திரத்தோடு நெருங்கிய சம்பந்தம் உடையதாயிருந்ததால், பென்யமீன் கோத்திரத்து சவுல் அரசனுவதற்கு யாதொரு தடைசொல்லப்படவில்லை; இஸ்போசேத்தும் அவனுக்குப்பின் பட்டத்திற்கு வருவது சம்மதமாயிருந்தது. (2சாமு. ii.9). ஆனால் யூதாக் கோத்திரம் மேன்மையடைவதும் தங்கள் சொந்த சீலோ, சீக்கேம் நகரங் களுக்கு மேலாக தாவீது எருசலேமை சிலாக்கியப்படுத்துவதினால் தங்கள் கௌரவம் கெட்டுப்போவதும் தங்களால் சகிக்க முடியவில்லை. உடபடிக் கைப்பெட்டி யோசுவாவினால் சீலோவில் வைக்கப்பட்டது. தருணம் வந்த போது தாவீது அதை எருசலேமுக்குக் கொண்டுபோனான். இப்படியாக வடகோத்திரத்தார் ராஜாங்கத் தலைநகரை மாத்திரமல்ல வேதமார்க்கத் தலை நகரையும் இழந்தார்கள். இது மெத்த மனவருத்தமான காரியம். தேவன் 'யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார்; எப்பிராயீம் கோத்திரத்தை அவர் தெரிந்துக்கொள்ளாமல் யூதாக்கோத்திரத்தையும் தமக்குப் பிரியமான சீயோன் பர்வதத்தையும் தெரிந்துக்கொண்டார்,' (சங். lxxviii. 67-8). என்று தாவீது மேன்மைபாராட்டினது அவர்களுக்கு இன்னும் அதிக வருத்த மாயிருந்தது. தாவீதின் துரைத்தனத்திலும் சாலமோன் அரசாட்சியின் தொடக்கத்து மாட்சிமையிலும் அவர்கள் மனச்சலிப்பு கீழ் அடங்கியிருந்தது, என்றாலும் சமயம் வரும்போது தலைகாட்டினது. சாலமோன் பழைய கோத்திர எல்லைகளைப் புறக்கணித்து தேசத்தை நாடுகளாகப் பிரித்து இப்படி யாகக் கோத்திரவித்தியாசங்களை ஒழிக்கப் பிரயாசப்பட்டான். இந்த நாடு களின் மேல் உத்யோகஸ்தரை நியமித்தான். அவர்கள் கடமை, மாசந்தோ றும் ராஜகுடும்பத்திற்கு வேண்டிய ஆகாரத்தை சவதரிப்பதே. (1ராஜா. iv.7). இந்த நிபந்தனைக்கு யூதா விலக்கப்பட்டிருந்தது. தன் கட்டடங் களுக்காக சாலமோன் அமஞ்சி ஆட்களைக் கட்டாயம் பண்ணினான். (1ராஜா. v.13–17; 2 நாளா. ii.17,18). அவனுடைய வியாபாரவிஷயங்களைப்பற்றி தேசத்தின் பிரபுக்களுக்கு யாதொரு உரிமை இருந்ததில்லை. வேற்று விக்ர காராதனையை உட்புகுத்தது மிகுந்த இடறலாயிருந்தது. துரைத்தனத்தை மத்யஸ்தானத்தில் ஸ்தாபித்ததும் அதன் கொடுங்கோன்மையும் (1ராஜா. xi.4). தங்கள் குடும்பத்தலைவனே தங்கள் வழிகாட்டியாயிருக்க வழக்கப்பட்ட ஜனங்களுக்கு விபரீதமாயிருந்தது. சுயாதீனத்தின் ஆவி வெகு பலமாயிருந் தது; இத்தோடுகூட எப்ராயீமுக்கும் யூதாவுக்கும் உள்ள பழைய கோத்திரப் பொறாமை எப்போதும் நிலைகொண்டிருந்தது.

எப்ராயீமுக்கு யூதாவைப்பற்றியிருந்த பொறாமை, சாலமோனின் கொடுங்கோன்மை, அவன் எகிப்திய விக்ரகவணக்கத்தை ஆதரித்தது,— இவைகள் பிரிவினைக்கு ஆதிகாரணங்கள். வடராட்சியத்திற்கு தீருசீதோ னுடன் சமாதான உடபடிக்கை பிரியமாயிருந்தபடியால், சாலமோன் எகிப் திய விகரகவணக்கத்தை ஆதரித்தது பெரிய இடறலாயிருந்தது. ஆனால் 'சாலமோன் துரைத்தனத்தை மத்யஸ்தானத்தில் ஸ்தாபித்ததும், கோத்திர வித்யாசங்களை அழித்ததும், கோத்ரத்தலைவர்களிடத்திலிருந்து துரைத்தனத் தைப்பிடுங்கி ராஜாவின் விசாரணைக்காரருடைய கரங்களில் ஒப்புவித்ததும், பாரமானவரியும் பிரிவினைக்கு முக்கியகாரணம்.' பிரிவினை கட்டாயம் வர வேண்டியது. ரெகொபொவாமின் மூடத்தனமான நடக்கை அதற்கு நற் றருணமாயிருந்தது. காலம் பருவமானபோது அதற்குரிய மனுஷனும் தோன் றினான்.

## யூதா ராட்சியம்.

### ரெகொபொவாம்.

தன் தகப்பனுடைய மரணத்திற்குப்பின், ரெகொபொவாம் தான் அரசனாய் அங்கிகரிக்கப்படுவதற்கென்று பழைய தலைநகராகிய சிக்கேமில் வந்து சேர்ந்தான். பெருமைநிறைந்த எப்ராயீம் உள்பட சகல இஸ்ரவேலரும் அங்கே கூடினார்கள். அரசனாக அங்கிகரிக்குமுன் தங்கள் சங்கடங்களைச் சொல்லி அதற்கு நிவர்த்திதேடினார்கள். பாரமான வரி, ராஜாவின் அரமனைக்கு ஆகாரம் சவதரிப்பது, கட்டாயவேலை இவைகள் நிறுத்தப்பட வேண்டுமென்று கேட்டார்கள். (1ராஜா. xii. 4). ரெகொபொவாம் தன் மாறுத்தரவுக்கு ஜனங்களை மூன்றுநாள் பொறுத்துவரச்சொன்னான். அவன் தகப்பன்காலத்திலுள்ள முதியோரான ஆலோசனைக்காரர் இந்த ஜனங்களுக்கு இணங்கி உத்தரவுகொடுப்பது நியாயமும் வெகு யுக்த்தமுமாயிருக்கிறதென்று ஞானமான ஆலோசனை சொன்னார்கள். அப்புறம் தன்னோடு வளர்ந்த வாலிபரிடத்தில் ஆலோசனைகேட்டான். இவர்கள் அரசருடைய சலாக்கியத்தைப்பற்றி மிதமிஞ்சின எண்ணமுள்ளவர்கள். 'சோம்பேறிகளான பிரபுக்கள் சிரத்தைகெட்ட ஜனசங்கத்திற்குரிய சுகபோகங்களை அனுபவித்து அகங்காரத்தினால் உண்மையும் சுத்தமானதுமான ராஜபக்த்தத்தை இழந்துபோனவர்கள்'. இப்படிப்பட்டவர்களுடைய ஆலோசனையை அங்கிகரித்து 'என் தகப்பன் உங்கள் நுகத்தைப் பாரமாக்கினார், நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களை சவுக்குகளினால் தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினால்[1] தண்டிப்பேன் என்று ஜனங்களுக்குக் கடினமான உத்தரவுகொடுத்தான்'. (1ராஜா. xii. 8–15). இப்படியாக அவன் முதியோருடைய ஆலோசனையைப் புறக்கணித்தான். அதாவது நீங்கள் கீட்படிவதற்கென்று என் தகப்பன் கையாடின முறைகள் சாதாரணமானவை, நான் கையாடுவது அசாதாரணமானவைகளாயிருக்கும். அப்படிப் பாச்சிகை விழுந்தவுடனே எப்பக்கத்திலுமிருந்து பின்வரும் வார்த்தைகள் ஆரவாரித்தது.

> தாவீதோடே எங்களுக்குப் பங்கேது?
> ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரம் இல்லை;
> இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு;
> இப்போது தாவீதே, உன் சொந்தவீட்டைப் பார்த்துக்கொள்.

இது, போர்செய்வோம் என்ற பயமுறுத்தல் அல்ல, தலையிடாதே, என்ற எச்சரிப்பு.

இதற்குப்பின் பகுதிவிசாரிப்புக்காரனாகிய அதோராமை அந்த ஜனங்களிடத்தில் பேசுவதற்கு அனுப்புவித்தான். பாரமான வரி வசூலிப்பு ஜனங்களுடைய முறைப்பாட்டிலொன்று. ஆகையால் அதோராம் இதுவிஷயத்தில் அவர்களுடைய மனசைச் சரிபண்ணக்கூடும் என்று நினைத்தான். ஆனால் எவர்களுக்கும் வரிவாங்குகிறவனைப்பற்றி எவ்வித எண்ணிக்கையும் கிடையாது. நடந்துமுடிந்த காரியம் எவ்வளவோ முக்கியமானதென்று அறியாத மூடனாயிருந்தான்ரெகொபெயாம். அந்த ஜனங்கள் முன்புக்கு

1. இதற்கு முள்சவுக்கு என்று பேர். குற்றவாளிகளைத் தண்டிப்பதில் பிரயோகிக்கப்பட்டது; ஆணிகள் அடர்ந்த தோலினால் செய்யப்பட்ட சவுக்கு.

அதோராமின் சமுகம் கசப்பையும் அருவருப்பையும் மூட்டிற்று. அவர்கள் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

யூதாவைவிட இஸ்ரவேலின் பாவம் பெரிதாயிருந்தது. ஆகவே இஸ்ரவேல் யூதாவைவிட நூற்றிருபதுவருஷத்திற்குமுன் சிறையாகக்கொண்டு போகப்பட்டார்கள். அதன் ராஜாக்கள் யெரொபெயாமின் வழிகளில் நடந்தார்கள். ஆகாஸ், அகசியா, யோராம் அரசர்காலத்தில் பாகால்வணக்கம் ராட்சியத்தின்மார்க்கமாய் ஏற்படுத்தப்பட்டது. யூதாவில் ஐந்து அரசர் பேர்பெற்ற தெய்வபக்தியுள்ளவர்கள்.—ஆசா, யோசபாத், உசியா, யோத்தாம், எசேக்கியா. மற்ற எட்டு அரசரில், ரெகொபெயாம் சிறிதுகாலமும், யோவாஸ் அமசியா நீண்டகாலமும் பக்த்தியுள்ளவர்களாய் நடந்தார்கள். இஸ்ரவேலில் அரசாண்டவர்கள் பற்பல வம்சத்தைச்சேர்ந்தவர்கள். யூதாவில் எல்லாரும் ஒரே வம்சவரிசையில் வந்தவர்கள். ஆகவே யூதாவின் தெய்வபக்தியின் ஸ்திதி இஸ்ரவேலைவிட மேலானதாயிருந்தது. எருசலேம் தேவாலயமும் அதில் சம்பந்தப்பட்ட விஷயங்களும் தெய்வபக்தியை மேன்மையாய்க் காப்பாற்றுவதற்கு அனுகூலமாயிருந்தது.

ரெகொபொவாம் எருசலேமுக்குத் திரும்பினபின் தன்னைவிட்டு மருளவிழுந்த கோத்திரத்தாருக்கு விரோதமாக திரள்சேனையைச் சேர்த்தான். கர்த்தர் செமாயா தீர்க்கத்தரிசியை அனுப்பி, இது கர்த்தரால் நடந்தகாரியம், நீங்கள் உங்கள் சகோதரரோடு யுத்தம்செய்யவேண்டாம் என்[illegible]தார். (2 நாளா. xi. 2–4). என்றாலும் யெரொ[illegible] தன்னைத்தாக்குவான் என்றெண்ணி சில பட்டணங்களை அர[illegible]படுத்தி அதில் பண்டசாலைகளையும் யுத்த ஆயுதங்களையும் சவகரித்து [illegible] அனேக [illegible]யா, பக்தியுள்ள இஸ்ரவேலர், வடராட்சியத்திலிருந்து புறப்பட்டு எருசலேமில் குடியேறினார்கள். இது மிகுந்த அனுகூலமாயிருந்தது. ராட்சியத்தின் பிரஜைகள் அதிகரித்ததும் தவிர அவர்கள் தங்கள் சன்மார்க்க செல்வாக்கினால் தெய்வபக்தியை மேன்மையாய்க் காப்பாற்ற அரசனும் ஜனங்களும் மூன்றுவருஷமாய் 'தாவீது சாலமோனின் வழிகளில் நடந்தார்கள்'. அரசனுக்கு அனேக புத்திரர் இருந்தார்கள். அவர்களில் அபியாவைத் தனக்குப்பின் பட்டத்திற்குவரத் தெரிந்துகொண்டான். மற்றப்புத்திரர் பொறாமைகொண்டு கலகம்பண்ணுதபடி அவர்களைத் தேசத்துப்பட்டணங்களில் அதிகாரிகளாக நியமித்து அவர்களுக்குவேண்டிய ஆகாரத்தைச் சவதரித்து அவர்களுக்கு அனேகப் பெண்களையும் தேடினான். இப்படியாக எல்லாம் நலமாகக்காணப்பட்டது. ராஜாவும் ஜனங்களும் தங்கள் மார்க்கக்கடமைகளை நிறைவேற்றுவதில் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்தார்கள். தேசம் சமாதானமாயிருந்தது. ஆனால் ராட்சியம் தன்கையில் உறுதியாய் ஸ்தாபிக்கப்பட்டதென்று கண்டபோது கர்த்தரை நெகிழ்ந்து, அவனும் அவன் ஜனங்களும் தங்கள் பிதாக்களைவிடச் சீர்கெட்டு, மலைச்சிகரங்களில் மேடைகள் அல்லது கோவில்களை உண்டாக்கினார்கள். மேலும் துன்மார்க்கமான செய்கைகளைச்செய்து ஜாதிகளின் எல்லா அருவருப்புகளையும் நடத்தினார்கள். (1 ராஜா. xiv. 22–4). இப்படியாகத் தேவனைக் கோபமூட்ட, தண்டனை தீவிரமாய் அவர்களைத் தொடர்ந்தது.

எகிப்தின் அரசனாகிய சீஷாக் திரள்சேனையுடன் தேசத்தின்மேல் படையெடுத்து சில அரணான பட்டணங்களைப்பிடித்து எருசலேமில் பிர

வேசித்து தேவாலயத்திலும் அரமனையிலும் பொக்கிஷங்களைக் கொள்ளையிட்டான். சீஷாக்கின் படையெடுப்பு யெரொபெயாமுக்கு அனுகூலமாய் இருந்தது. தனது சத்துவம் குறைந்ததால் ரெகொபொவாம் வடராட்சியத்தைக் கீட்படுத்துவதற்கு ஏலாமற்போனான். என்றாலும் எல்லைகளில் யுத்தம் நடந்துகொண்டுவந்தது. (1 ராஜா. xiv. 30). சீஷாக் படையெடுத்ததின் ஒரு நோக்கம் தன் சினேகிதன் யெரொபொவாமுக்கு உதவிசெய்வது. ஆனால், நாளாகமக்காரன், 'நற்பலனும் தீர்ப்பலனும் இம்மையிலேயே லபிக்கும்' என்ற கோட்பாடுடையவராய் அரசனும் ஜனங்களும் தேவனுடைய கட்டளைகளை மீறிநடந்ததால் இந்த இடுக்கண் நேரிட்டதென்று சொல்லுகிறான். செமாயா தீர்க்கதரிசி திரும்பவுந்தோன்றி ஜனங்கள் தேவனைப் புறக்கணித்தபடியால் அவர்களுக்கு இந்த விபத்துநேரிட்டது என்று சொல்லுகிறான். தீர்க்கதரிசியின் கடிந்துகொள்தலினால் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி 'கர்த்தர் நீதியுள்ளவர்' என்று அறிக்கையிட்டார்கள். இதற்குப்பின் தேவனுடைய கடைசித்தீர்ப்பு சொல்லப்படுகிறது. சிறிதுகாலத்திற்குப்பின் மீட்புண்டாகும்; என்றாலும் அவர்கள் சீஷாக்கின் ஊழியக்காரராகவேண்டியது; அதாவது எகிப்தின் அரசனைத் தங்களுக்குமேலான அரசனாக ஒப்புக்கொள்ளவேண்டியது. இவ்விதமாய் தேவனுடைய லேசான நுகத்தையும் அஞ்ஞானக் கொடுங்கோன்மையையும் எதிர்வைத்து உணர்ந்துகொள்வார்கள்.

யூதாவில் 'நற்காரியங்கள் காணப்பட்டதென்று' நாளாகமக்காரன் சங்கதியை முடிக்கிறான். ஆகையினால் நியாயமாய் வரவேண்டிய ஆக்கினை இரக்கமாய் விலக்கப்பட்டது. இப்படியாக யூதாவின் முதலரசனுடைய பதினேழு வருஷ ஆளுகை மந்தமாய் முடிந்தது. அரசன் எருசலேமில் தன் பிதாக்களோடு அடக்கம்பண்ணப்பட்டான்.

### அபியா. (1 ராஜா. xv. 1–8; 2 நாளா. xiii. 1–22).

அபியா, ரெகொபெயாமுக்குப் பிரியமான மனைவி மாக்காளின் புத்திரன். அவன் தன் தகப்பனுக்குப்பின் அரசனானான். அவன் மூன்றுவருஷம் அரசாண்டான். ராஜாக்களில் அவனைப்பற்றிக் கண்டிருப்பது சுருக்கம்; நாளாகமத்தில் விரிவாய்ச் சொல்லியிருக்கிறது. ராஜாக்களில் அவன் தன் தகப்பனுடைய பாவங்களில் நடந்தானென்றும் அவனுடைய இருதயம் கர்த்தருக்குமுன் நேர்மையாய் இருந்ததில்லை என்றும் கண்டிருக்கிறது. சீஷாக் கொள்ளைகொண்டு போனவைகளுக்குப் பதிலாக சில பணிமுட்டுகளை தேவாலயத்திற்கென்று பிரதிஷ்டைபண்ணினான். யெரொபொவாம், பாஷா, சிம்ரி என்ற அரசர்களுக்குப்பின் அரசாள புத்திரரில்லை. ஆகையால் அரசாட்சி வேறு வம்சங்களுக்கு மாறினது. அபியாவின் பாவத்திற்கு இதே தண்டனை வரவேண்டியது. என்றாலும் 'தாவீதினிமித்தம் தனக்குப்பின் தன் குமாரனைவைப்பதற்கு கர்த்தர் எருசலேமில் அவனுக்கு ஒரு விளக்கைக் கடாட்சித்தார்'. இஸ்ரவேலில் 250 வருஷங்களுக்குள் ஒன்பது வம்சத்திலிருந்து அரசர் வந்தார்கள். யூதாவில் ஒரே வம்சவரிசையிலுள்ளவர்கள் நாலுநூற்றாண்டு அரசாண்டார்கள். தாவீதுக்கும் அவன் புத்ராருக்கும் ராட்சியம் ஒரு உப்பு உடம்படிக்கையால்[1] கொடுக்கப்பட்டது. இப்படியாகத்

1. லேவி ii. 13ல் ஒரு பலி உறுதிப்படுவதற்கு உப்பு அவசியம் என்று சொல்லியிருக்கிறது. ஆகவே 'உப்பு உடம்படிக்கை' என்பதன் அர்த்தம் உண்மையும் நிலைவரமுமான உடம்படிக்கையாம் (எண். xviii. 19).

தாவீதின் தெய்வபக்தி அநேக தலைமுறைகளாய் அவன் சந்ததியார்மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது.

நாளாகமம், அபியாவின் ஆளுகையில் நன்மையானவைகளை எடுத்துச் சொல்லுகிறது. யெரொபெயாமுடன் யுத்தம் நேரிட இருந்த சமயத்தில் இஸ்ரவேல் மனுஷருடன் பேசிக்கொள்ளத் தெரிந்துக்கொண்டான். அவர்களைத் தன் ஆட்சிக்குள் திருப்பத்தவறினால் அவர்கள் தன்னை மும்முரமாய் எதிர்க்காமலிருக்க விரும்பினான். ராட்சியம் தாவீதுக்கு என்றென்றைக்கும் கொடுக்கப்பட்டது என்பதை அழுத்திப்பேசுகிறான். ஆனால் கர்த்தருடைய கற்பனைக்குக் கீழ்படிந்தால் அப்படியாகும் என்பதை மறைத்துக் கொள்ளுகிறான். (சங்.cxxxii.12). யெரொபெயாமின் பாவங்களை இடித்துரைத்து தன் பாவங்களை மறைத்துக்கொள்ளுகிறான். அவன் பேசினவைகள் சிரேஷ்டமாயிருந்தபோதிலும் அவைகள் களங்கமற்ற மனசுணர்ந்த பேச்சென்று சொல்லத்தகாது. அபியா தானும் விக்ரகவணக்கத்தை ஆதரித்தான் என்றறிந்த யெரொபொவாமுடைய சேனையின் மனசு இந்தப் பேச்சினால் இளகவில்லை. அப்போது நேரிட்ட யுத்தத்தில் யெரொபொவாம்சேனை மடங்கடிக்கப்பட்டது. மிகுதியான சங்காரம் உண்டாயிற்று. அபியா சில பட்டணங்களைப் பிடித்துக்கொண்டு ஸ்திரமடைந்தான்.

## ஆசா. (1 ராஜா.xv.9–24; 2 நாளா.xiv.2–xvi.14).

ஆசா தன் தகப்பன் அபியாவுக்குப்பின் பட்டத்திற்குவந்தான். அவன் அரசாண்டகாலம் ஐம்பத்தொருவருஷம். இந்தக்காலத்தில் இஸ்ரவேலில் நாலுவம்சங்களைச்சேர்ந்த எழுபேர் அரசாண்டார்கள். தேசம் பத்துவருஷம் அமைதியாயிருந்ததென்றும் அதற்குப்பின் இருபதுவருஷம் சமாதானம் இருந்ததென்றும் சொல்லியிருக்கிறது. ஆசாவின் அரசாட்சி தொடக்கத்தில் இஸ்ரவேலில் ராஜாக்கள் ஒருவர்பின் ஒருவர் துரிதமாய்வந்தார்கள். தங்கள் சுயராட்சியத்தைத் தொந்தரவுகளினால் யூதாவைத்தாக்கக் கூடாதவர்களாயிருந்தார்கள்.

யெரொபொவாம் யூதாவுக்குச் செய்தபடியே பாசாவும் யூதாவுக்கு விரோதமாய்ச் சண்டைகள் நடப்பித்தான். எருசலேமுக்கு ஆறுமைலுக்கு வடக்கே ஒரு மலைமேல் ராமாவைக்கட்டி யாதொருவரும் எருசலேமுக்குப் போகாமலும் அதிலிருந்துவராமலும் தடுத்தான். இப்படியாக யூதாவுக்கு வடராட்சியம் எப்போதும் மோசத்தை உண்டாக்கக்கூடியதாயிருந்தது.

இரண்டு ராட்சியமும் ஒன்றாய் ஐக்யமாகும் என்ற நம்பிக்கை அற்றுப் போயிற்று. தேசம் அந்நிய சத்துருக்களுக்கு விலகி ஸ்திரமாயும் க்ஷேமமாயும் இருக்கவேண்டுமானால் தேசத்தில் மெய்த்தேவபக்தி உறுதியாய் நிலைத்திருக்கவேண்டுமென்று தீர்க்கத்தரிசிகள் மிகவும் தெளிவாய்க்கூறி அறிவித்தார்கள். ஆசா இந்த போதனையை மனதில் வைத்துக்கொண்டு ‘தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச்செய்தான்.’ (2 நாளா.xiv.2). தனது பெரிய முற்பிதாவாகிய தாவீதின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினான். அந்நியதேவர்களின் பலிப்பீடங்களை அழித்து தூண்கள் (அதி. தி. சொருபங்கள்) அல்லது மாசிபாக்களை உடைத்து தோப்புகள் அல்

லது அஷராக்களை [1] வெட்டிப்போட்டான். விக்ரக ஆராதனைநடந்த மேடைகளும் அகற்றப்பட்டது. சூரிய விக்ரகங்களையும் அகற்றினான். தன் தாய் ராணியாகிய மாகாளின் செல்வாக்கு வெகு தீமையானதாயிருந்ததால் அவளை உத்யோகத்திலிருந்து அகற்றி அவளுடைய கோவிலையும் அழித்துப்போட்டான். ஆசா நடப்பித்த இந்த தீரமானசெய்கைகள், தன் சீர்திருத்தங்களை நடப்பிப்பதற்கு வெகு ஊக்கமாயிருந்தான் என்று காட்டுகிறது. அவளுடைய மாவிக்ரகத்தையும் உடைத்து கிதரோன் ஆற்றிலே தகனித்தான். இது எருசலேமுக்குக் கிழக்கில் ஒரு அசுசியான இடம். இங்கேதான் பாகால் வணக்கத்தில் பிரயோகித்த தட்டுமுட்டுகளையெல்லாம் யொசியா தகனித்தான். (2 ராஜா. xxiii. 4). ஜனங்களில் நல்லவர்களெல்லாரும் ஆசாவுக்குத் துணையாயிருந்தார்கள். 'அவனுக்கு முன்பாக ராஜ்யம் அமரிக்கையாயிருந்தது.' (2 நாளா. xiv. 5). தீர்க்கத்தரிசிகளும் அவனுக்கு ஆதாரவாயிருந்தார்கள். அவர்களில் ஓதேதின் குமாரன் அசரியாவை விசேஷித்துச் சொல்லியிருக்கிறது.

தேசத்தில் காணப்பட்ட தெய்வபக்தியின் துயரமான ஸ்திதியை நாளாகமக்காரன் விவரிக்கிறான். (2 நாளா. xv. 3–6). அனேககாலமாய் யூதாவில் மெய்த்தேவவணக்கமில்லை. பிரமாணம் (தோரா) இல்லாமலும் அதைப் போதிக்க ஆசாரியன் இல்லாமலும் இருந்தது. தோராவைச்சேர்ந்த எல்லா விஷயங்களிலும் விசேஷமாய் சன்மார்க்கத்திலும் சடங்குகாரியங்களிலும் வழிகாட்டுவது ஆசாரியனுடைய கடமை. அப்படிப்பட்ட வழிகாட்டி இல்லாததனால் சன்மார்க்க நடக்கை வெகு தாழ்வாய் இருந்தது. தேசத்தில் நடந்த சண்டைசச்சரவு ஜனங்களின் சமாதானத்தைக் கெடுத்து மனச்சலிப்பையும் துன்பத்தையும் கொண்டுவந்தது. தீர்க்கத்தரிசி இதையெல்லாம் அறிந்திருந்த போதிலும், அவனுடைய விசுவாசம் உறுதியாயும் நம்பிக்கை ஊக்கமாயுமிருந்தது. அவன் யூதாவுக்குச் சொன்னவார்த்தைகள் நாமும் கவனித்துத் தியானிக்கத்தக்கது. [illegible] ருந்தால், அவருங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத்தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களேயாகில், அவர் உங்களை விட்டுவிடுவார். நீங்களோ உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள்; உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு என்றான்.' (2 நாளா. xv. 2, 7).

இப்படியாக வைதீக லௌகீக அதிகாரிகள் இணங்கி கிரியைசெய்ய, இந்த ஐக்கியம் ஆசா மிக ஊக்கமாய் நடத்தின சீர்திருத்தலுக்கு வெகு அனுகூலமாயிருந்தது. யூதா பென்யமீனிலும் தன் தகப்பன் இஸ்ரவேலில் பிடித்த பட்டணங்களிலும் காணப்பட்ட விக்ரகங்களை அகற்றினான். அப்புறம் ஜனங்களையெல்லாம் கூடிவரச்செய்தான். எப்ராயீம் மனாசேயிலுமிருந்து சிலமனுஷர் வந்தார்கள். வந்துகூடின சிமியோன் மனுஷர் யூதாவின் எல்லைக்கு அப்பாலுள்ளவர்கள். அவர்கள் பலிகளைச்செலுத்தி அவர்

1. மாசிபா என்பது ஒரு தூண். அது ஒரு தேவனுக்கு அடையாளம். பலிப்பீடத்திலிருந்தது. பிற்காலத்தில் அந்தத் தேவனின் சொருபமே நிறுத்தப்பட்டது. அஷெரா என்பது ஒருமரத்தூண் அல்லது அடிமரம். ஒரு அஞ்ஞானக்கோவில் பக்கத்தில் விக்ரகத்திற் கடையாளமாக, விசேஷமாய் அஸ்தரோத் விக்ரகத்திற் கடையாளமாக நிறுத்தப்பட்டது, அல்லது பாலிக் வணக்கத்தின் சடங்குகளைச் சேர்ந்ததாயிருக்கலாம். அஷரிம் என்பது அதி. திருப்புதலில் தோப்பு என்று தப்பிதமாய்த் திருப்பியிருக்கிறது. ஒரு ஜாதி உண்டானது என்ற என் புஸ்தகத்தின் 29ம் பக்கம் பார்க்க.

கள் பிதாக்கள் வனாந்தரத்தில் ஆண்டவரோடுபண்ணின உடன்படிக்கையைப் புதுப்பித்தார்கள். இதுதான் முதல்தடவையாய்ப் புதுப்பித்தது; இரண்டாம்தடவை யோசியாவின்காலத்தில் நடந்தது. (2 நாளா xxxiv. 13). மூன்றாம்தடவை நெகேமியாவின்காலத்தில் (நெகே. x. 28–39).

ராட்சியத்தின் புறம்பான காரியங்கள் கலக்கத்தைக் கொடுக்கத்தக்கதாயிருந்தது. எத்தியோப்பியனாகிய சேரா முதலவது தேசத்தைத் தாக்கினான். இவன் எகிப்திய அரசன் என்பது சிலர் கொள்கை. அது எப்படியிருந்தாலும் சரி, அந்தப் பெரிய சேனையுடன்வந்த 300 ரதங்கள் எகிப்திலிருந்து வந்தது. இப்படித் தாக்குவதற்கு பாசா தூண்டிவிட்டிருக்கலாம். ரெகொபெயாம் எகிப்திற்குச் செலுத்திக்கொண்டிருந்த கப்பத்தை ஆசா கொடுக்கமாட்டேன் என்று மறுத்திருக்கலாம். மேலும் ஆசா சுயாதீனத்தை விரும்பி யூதாவில் அரணானபட்டணங்களைக்கட்டினது எகிப்திய அதிபதிக்குப் பொறாமையாயிருந்திருக்கலாம். அப்படிப்பட்ட வல்லமையுள்ள சேனையைக் கண்டவுடன் கலங்கி ஆசா தேவனைநோக்கி மன்றாடினான். 'கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலமற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசானகாரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும்; உம்மைச்சார்ந்து, உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராகவந்தோம். கர்த்தாவே, நீர் எங்கள் தேவன்; மனுஷன் உம்மை மேற்கொள்ளவிடாதேயும் என்றான்.' (2 நாளா. xiv. 11). கர்த்தர் கிருபையாய் விண்ணப்பத்தைக்கேட்டு எத்தியோப்பியரை முறியடித்தார். பூரணஜெயம் கிடைத்தது. மிகுந்த கொள்ளையுடன் ஆசாவும் சேனையும் எருசலேமுக்குத் திரும்பினார்கள். இத்தருவாயில்தான் அசரியா அரசனைச் சந்தித்து சந்தோஷமான செய்தியைக்கூறி அறிவித்தான். இதற்குப்பின் யூதா பென்யமீன்மனுஷரும் வடராஜ்யத்து எப்ராயீம் மனாசேயிலுள்ள அந்நிய மனுஷரும் ஒன்றாய்க்கூடினார்கள். எல்லாரும் மிகவும் களிகூர்ந்து மிகுந்த பக்திவினயத்துடன் தேவனுடன் உடபடிக்கை பண்ணினார்கள். தேவன் 'அவர்களுக்கு வெளிப்பட்டு' அவர்களுக்கு இளைப்பாறுதலைக் கடாட்சித்தார்.

பாஷா தென்ராட்சியத்தைத் தாக்கி எருசலேம்பாதைக்குக் காவல்கோட்டையாக ராமாவைக்கட்டினான். ஆசா கர்த்தர்பேரில் நம்பிக்கையற்றவனாய் சிரியாவின் அரசனாகிய பெனாதாத்தை உதவிக்கழைத்தான். பாஷா யூதாவைத்தாக்கி மோசம்செய்யக்கூடாதபடி பெனாதாத் பாஷாவுடன் செய்திருக்கும் சிநேக உடபடிக்கையைத் தவிர்க்கும்படிக்கேட்டு அவனுக்குத் தேவாலயத்திலும் அரமனையிலுமுள்ள பொக்கிஷங்களிலுமிருந்து வெகுமதியை அனுப்பினான். பெனாதாத் இதற்கிணங்கி வடராட்சியத்தைத் தாக்கி அனேக பட்டணங்களைப்பிடித்தான். அப்போது பாஷா ராமாவைவிட்டு நீங்கினான். உடனே ஆசா அதைப்பிடித்து நிர்மூலம்பண்ணி அதன் உத்திரங்கள் முதலியவைகளால் தன் ராட்சியத்தின் வடஎல்லையைப் பாதுகாப்பதற்கு கேபா, மிஸ்பா என்னும் பட்டணங்களைக் கட்டினான். இதைக்குறித்துத்தான் நாளாகமக்காரன் ஆசா அரணிப்பான பட்டணங்களைக்கட்டித் தன் சேனைக்குப் போர்வீரரைச் சேகரித்தான் என்று சொல்லுகிறான். (2 நாளா. xiv. 6–8).

ஆசா முன் கர்த்தரைப் பூரணமாய் நம்பியிருந்ததைவிட்டு மருளவிழுந்ததினிமித்தம் ஞான திருஷ்டிக்காரனாகிய ஆனானி அவனை மிகவும் கடிந்து

கொண்டான். அவன் தேவனை நம்பியிருந்தபோது கர்த்தர் அவனை எத்தியோப்பியர் கையிலிருந்து விடுவித்தாரென்றும், தமக்கு முன்பாக உத்தம இருதயமுள்ளவர்களைக் காப்பாற்றுவதற்கு 'அவருடைய கண்கள் பூமியெங்கும் சுற்றி உலாவுகிறதென்றும்' (சகரி. iv.10). சொன்னான். அப்போது ஆசா கோபமூண்டு தீர்க்கதரிசியை விலங்கிட்டு சிறையிருத்தினதுமன்றி ஜனங்களில் சிலரையும் நிஷ்டூரம் பண்ணினான்.

ஆசா, கடைசியாக தன் பாதங்களில் கொடிய வியாதியுண்டாகி வாதிக்கப்பட்டான். எக்லிசியாஸ்ற்றிக்கசில் (xxxviii. 9–14) வியாதியஸ்தன் முதலாவது தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணி, பாவத்தை விட்டுநீங்கி அப்புறம் வயித்தியனைத் தேடவேண்டும் என்றிருக்கிறது. ஆசா முதலாவது செய்யவேண்டிய கடமையைப் புறக்கணித்து தன் ஜீவனை இழந்தான். வழக்கமான சடங்குகளுடன் தன் சொந்தக் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான். அவனுக்காக பெரிய தகனம் செய்யப்பட்டது. பிரேததகனம் என்பது அதனர்த்தமல்ல, பரிமளவர்க்கம் தகனிக்கப்பட்டது.

'யூதா ராஜாங்க சரித்திரங்களின் மத்தியில்வரும் ஆசாவின் ஆளுகை ஒரு சிரேஷ்டமான காலாரம்பத்தைத் தொடங்குகிறது. அப்போது ராட்சியம் தனக்குக்கிடைத்த மேலான பதவியை உணர்ந்து மெய்த்தேவபக்தியை விருத்திசெய்வதற்குத் தனக்கு உன்னத வல்லமையும் நீடித்தகாலமும் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று விசுவாசித்தது'. xx ம். சங்கீதம் இப்போது எழுதப்பட்டதென்றும், போருக்கு புறப்பட இருக்கும் அரசன் பக்திவினயமான பலியைச் செலுத்தும்போது அது ஆசாரியர் லேவியரால் பாடப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. இவைகளெல்லாம் புராதன தெய்வபக்தியின் சிரேஷ்டத்தையும் உத்தம ஆவியையும் தேவனாகிய கர்த்தர் பேரிலுள்ள அசைக்கக்கூடாத உறுதியான நம்பிக்கையையும் காட்டுகிறது.

ஆசா அரசாட்சியின்தொடக்கத்தில் ராட்சியம் மிகவும் குன்றிப்போயிருந்தது; ஆனால் அரசாட்சி செய்யும்போது, மோசே தாவீதின்காலத்தில் தில் மகா வல்லமையாய் விளங்கின தேவாதிபத்யம் ஒருக்காலும் அழியாது என்கிற நம்பிக்கை ஓயாமல் வளர்ந்துகொண்டிருந்தது. மேசியா சம்பந்தமான இந்த நம்பிக்கை தாவீதின் ஆளுகை அழியாதென்று நம்பினது. இந்த நம்பிக்கை யூதா ராஜாங்கத்தில்மாத்திரம் நிறைவேறக்கூடும்.

## யோசபாத்.

(1 ராஜா xxii. 41–2; 2 ராஜா viii. 16; 2 நாளா. xvii. 1–xx. 37).

யோசபாத் தன் தகப்பன் ஆசாவுக்குப் பின்வந்தான். யுத்தத்தில் தகப்பனைப்போல் தைரியசாலி. தகப்பனைவிட துணிந்த பிரயத்தனங்களால் தகப்பனுடைய தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றினான். ராட்சியத்திற்கு உள்ளும் புறம்புமான காரியாதிகளை தீர்க்கத்துடன் கொண்டு செலுத்தினான். 'தன் தகப்பனாகிய தாவீது முன்னாட்களில் நடந்தவழிகளில் நடந்தான்' என்று சொல்லியிருக்கிறது. (2 நாளா. xvii. 3). செப்ற்றுவஜெின்றில் தாவீது என்ற பதம் இல்லை. ஆகவே அது ஆசா என்றிருக்கவேண்டியது. அவனுடைய முன்வழிகள் நன்றாயிருந்தது. அப்படியே 2 நாளா. xx. 32லும் 1 ராஜா. xxii. 43லும் 'அவன் தன் தகப்பன் ஆசாவின் எல்லாவழிகளிலும்

நடந்தான்' என்று தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. அரணான பட்டணங்களிலும் தேசத்திலெங்கும் தாணுவங்களைவைத்து தன் ராட்சியத்தின் யாது காப்பை ஸ்திரப்படுத்தினான். அவன் எப்ராயீமிலிருந்து பிடித்த பட்டணங்களும் அதற்கே அனுகூலமாயிருந்தது. தன் குமாரர் சோம்பிதங்கள் ஜீவ்யத்தைப் பெரும்போகத்தில் கழியாதபடி அவர்களை அரணான பட்டணங்களில் பொறுப்பான உத்யோகங்களில்வைத்தான். தன் பிதாக்களின் தேவனுக்கு பக்தமாயிருந்து இஸ்ரவேலின் கிரியைகளைப் பின்பற்றாதிருந்தான் என்று அவனுக்குப் புகழ்ச்சியாய்ச் சொல்லியிருக்கிறது. ஆகவே கர்த்தர் அவனுடைய ராச்சியத்தை ஸ்திரப்படுத்தினார். அவனுடைய பிரஜைகள் அவனை மிக கண்யமாய் எண்ணி அவனுக்கு ஏராளமான வெகுமதிகளைக் கொண்டுவந்தார்கள். அவனுடைய இருதயம் கர்த்தருடைய வழிகளில் தைரியப்பட்டு சிரேஷ்டமடைந்தது. அவன் மேடைகளையும் தோப்புகளையும் அகற்றினான். அதற்காக ஏகூ தீர்க்கதரிசி அவனைப் புகழ்ந்துகொண்டான். (2நாளா.xix.3). அவைகள் அழிக்கப்பட்டது மிகுந்த அவசியமாயிருந்தது. ஏனென்றால். ஏகோவாவின் வணக்கம ஸ்தாபகமாயிருந்த ஸ்தலங்களிலும் கூட அஞ்ஞானக்கொள்கைகளும் வழக்கங்களும் தடுக்கப்படாதபடி புகுந்துகொண்டது.

விக்ரகாராதனைக்குக் காரணமாகிய அறிவீனம் அகற்றப்படவேண்டுமென்றும் நியாயப்பிரமாணம் கற்பித்த தெய்வபக்தி தேசமெங்கும் போதிக்கப்படவேண்டுமென்றும் யோசபாத் தீர்மானித்தான். நீதிநியாயம் செய்வதிலும் சீர்திருத்தல் அவசியம் என்று கண்டான். தேசத்தின் ஒவ்வொரு பட்டணங்களுக்கும் போய் நியாயப்பிரமாணத்தை விஸ்தரிக்க ஆட்களை நியமித்தான். நியாயப்பிரமாணத்தைப் போதிப்பதற்கு உரிமைப்பட்ட லேவியருடன் உயர்ந்த அந்தஸ்துள்ள அதிகூதனையும் அனுப்பினான். தேசாந்தர வேதமார்க்கப் போதகர் ஏற்படுத்தப்பட்டது இதுதான் முதல் தடவை: யொசியா, எஸ்றாவின்காலங்களில் கூடிவரவழைக்கப்பட்ட திரள் ஜனங்களுக்கு நியாயப்பிரமாண வாசிக்கப்பட்டது. (2ராஜா.xxiii.2; நெகே.viii.3–8). 2நாளா.xix.5–11ல் அவர்களுடைய ... விவரித்துச்சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு அரணானபட்டணங்களிலும் நியாயாதிபதி... நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் சிறு...களிலுள்ள விசாரணைக்காரரையும் மேல் விசாரணைசெய்தார்கள்.

மேலும் யோசபாத் 'கர்த்தருடைய நியா...களைக்குறித்தும் விவாத விஷயங்களைக்குறித்தும் விசாரிக்கும்படி,' எருசலே... லேவியரையும் ஆசாரியரையும் நியமித்தான். அது நியாயப்பிரமாணத்தில் சட்டங்களில்லாத காரியங்களைக்குறித்தும் தேசாசார வழக்குகளைக்குறித்தும் மேல் நியாயத்தீர்ப்பைக் கூறுவதற்கு மேலான நியாயஸ்தலமாம். அவர்கள் மனுஷனுக்குப் பயப்படாமல் கர்த்தருடைய பட்சத்தில்நின்று நேர்மையும் உண்மையுமான இருதயத்தோடு நியாயம் தீர்க்கவேண்டும். ராஜாக்களின் புஸ்தகத்தில் இந்த ஏற்பாட்டைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் நாளாகமக்காரன் பிரமாணத்திலும் அதைப்போதிக்கும் லேவியர்பேரிலும் தாபமுள்ளவராய் இந்த ஏற்பாட்டை சிரேஷ்டப்படுத்திச் சொல்லுகிறார். இஸ்ரவேலில், தீர்க்கதரிசிகள், மிகுந்த உபத்ரவமடைந்தபோதிலும் மெய்த் தேவபக்தியின் ஆவியையும் வல்லமையையும் அழிந்துபோகாமல் காப்பாற

ரினர்கள். ஆனுல் இக்காலத்து யூதாசரித்திரத்தில் இரண்டு தீர்க்கதரிசிகள் மாத்திரம் இருந்தார்கள். பிரதான ஆசாரியனுகிய அமரியா கர்த்தருக்கடுத்த எல்லா நியாயத்திலும், அதிகூஷதனுகிய செபதியா ராஜாவுக்கடுத்த எல்லா நியாயத்திலும் மேலான நியாயாதிபதிகளாயிருந்தார்கள்.

துரைத்தனத்துக்கடுத்த விஷயத்தில் 'கர்த்தரைப்பற்றிய பயம் தேசமெங்கும் பரவினது' என்று வாசிக்கிறோம். ஆசா கீழ்ப்படுத்தின பெலிஸ்தியரும் அரபியரும் கப்பங்களேயும் செம்மரியாட்டு வெள்ளாட்டு மந்தைகளேயும் கொண்டுவந்தார்கள். இப்படியாக யோசபாத் மகா க்ஷேமமடைந்து கோட்டைகள், பண்டசாலேப் பட்டணங்களேயும் கட்டி ஒரு திரளான சேனேயையும் சேகரித்தான். இப்படிச் சேமமாயிருக்கையில் இஸ்ரவேல் அரசனேடு சினேக உடன்படிக்கையை நாடினுன். சீதோன்பட்டணத்து வியாபாரத்தில் பங்குபெற்றுக்கொள்ளவேண்டுமென்பது ஒரு நோக்கம். அரபியா இந்தியா தேசங்களோடு வியாபாரம் செய்வதற்கு எசியோன் கேபேரில் ஒரு கப்பல்படை உண்டாக்கினுன். யூதாவும் இஸ்ரவேலும் அந்நியஜாதியோடு வியாபார சம்பந்தமாய்ப் பண்ணிக்கொண்ட உறவு துரைத்தன விஷயமாயும் அனுகூலமாயிருந்தது. தன் சத்துருவால் மிகவும் நெருக்கப்பட்ட ஆகாபுக்கு மிகவும் அனுகூலமாயிருந்தது. ஆனுல் யோசபாத்தின் நோக்கம் தெரியவில்லே. சீரியாவின் வல்லமை வளர்ந்துகொண்டுவருகிறதென்று பயந்தானே, அல்லது இரண்டு ராட்சியத்திற்குமுள்ள பிளப்பு ராஜவம்சங்களில் கொள்வினே கொடுப்பினேகளால் நிவர்த்தியாகலாமென்று நினேத்தானே தெரியவில்லே. என்னவானுலும் சரி அவன் செய்தது பெரியதப்பிதம், அதற்காக ஏகூ தீர்க்கதரிசி அவனேக் கடிந்துகொண்டான். 'துன்மார்க்கனுக்குத் துணேநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களே நீர் நேசிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது' என்ருன். (2நாளா.xix.2).

யோசபாத் தன்னிடத்தில் வந்தபோது மகாசந்தோ[illegible]துடன் ஏற்றுக்கொண்டு ஜனங்களெல்லாருக்கும் ஒரு உ[illegible]பெ[illegible]லவைத்து சகலரும் மிகவும் களிகூர்ந்தா[illegible] அத்தருணத்தில் ஆகாபி[illegible] குமாரத்தி அத்தாலி[illegible], யோசபாத்தின் குமாரன் யோராமை வி[illegible]கம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டது. அத்தருணத்தில் ராமே[illegible]கிலியாத்தில் சீரியாவுக்கு விரோதமாய் சண்டைசெய்ய ஆகா[illegible]றப்பட இருந்ததினுல் தன்னேடு போகும்படி யோசபாத்தைக் கே[illegible]கொண்டான். சீரியாவின் வல்லமை தாழ்த்தப்படுவது இர[illegible] ராட்சியத்திற்கும் அனுகூலம் என்று அபிப்பிராயப்பட்டு [illegible] என்று சம்மதித்தான். என்ருலும், கர்த்தருடைய சித்தத்தை அறியவேண்டுமென்று ஆகாபைக் கேட்டுக்கொண்டான். அப்படியே ஆகாப் நானூறு தீர்க்கதரிசிகளே வரவழைத்தான். இவர்கள் யெரொபொவாம் ஸ்தாபித்த கன்றுக்குட்டி வணக்கத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம். அவர்கள் ஆகாபின் விருப்பத்தை அறிந்தவர்களாய் யுத்தம் ஜெயமாய் முடியும் என்று அறிவித்தார்கள். யோசபாத் மனத்திருப்தியற்றவனுய் நாம் விசாரிப்பதற்குக் கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவருமில்லேயா என்று கேட்க ஆகாப் ஒருவன் இருக்கிறுன். ஆனுல் அவன் சத்துரு, நான் அவனேப் பகைக்கிறேன் என்ருன். அவனே இட்டுக்கொண்டு வருவதற்கு அனுப்பப்பட்ட மனுஷன் இளக்க நெஞ்சனுய், மிகாயாத் தீர்க்கதரிசியை, முந்தினவர்கள் சொன்னதற்கு

இணக்கமாய்ச் சொல்லும்படிக் கேட்டுக்கொண்டான். இரண்டு அரசரும் ராஜ உடையைத் தரித்து சிங்காசனங்களில் உட்கார்ந்து மிகாயாவின் வரவுக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். இதற்குள்ளாக சிதேக்கியா என்ற ஒரு மனுஷன் வல்லமைக்கடையாளமாகிய இரும்புக் கொம்புகளையுண்டாக்கி ஒரு முன்னடையாளச் செய்கையால் ஜெயம் இரண்டு அரசருடையதாகும் என்று காட்டினான். அப்புறம் மிகாயா உட்பிரவேசித்து, 'போங்கள், ஜெயமாகும்' என்றான். தீர்க்கதரிசியின் எழனமான தொனியை ஆகாப் கவனித்து உண்மையைச் சொல்லும்படிக் கேட்டான். மிகாயா அவர்கள் சண்டையில் தோல்வியடைந்து மிகுந்த அபாயத்திற்குட்படுவார்கள் என்றான். ஆகாப் மிகாயாவை உடனே சிறையில் போடுவித்தான்.

யுத்தத்திற்குப்போகாமல் நின்றுபோவதற்கு ஆகாபுக்குத் தைரியமில்லை. என்றாலும் மிகாயாவின் தீர்க்கதரிசனத்தை நம்பினபடியால் வேஷமாறி யுத்தத்தில் பிரவேசித்தான். யாதொருவனையும் இலக்குவையாமல் எய்யப்பட்ட ஒரு அம்பு ஆகாபின் மேல்பட்டு அவனைக் காயப்படுத்திற்று. உடனே அவனுடைய காயத்தைக் கட்டுவதற்கு அவன் ராணுவத்திற்கு வெளியே கொண்டுபோகப்பட்டான். என்றாலும் அவன் தைரியசாலியானதால், ராணுவத்திற்குத்திரும்பி தன் ரதத்திலிருந்துகொண்டு தன் போர்ச்சேவகரைத் தைரியப்படுத்திக்கொண்டிருந்தான். அவனுடைய சேனை சிதறடிக்கப்பட்டது, அவனும் மரித்தான். அவனுடைய உடல் சமாரியாவுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கே அடக்கம்பண்ணப்பட்டது. ரத்தம் தோய்ந்த ரதத்தை நகரத்திற்கு வெளியே கழுவினார்கள். அரசனுடைய ரத்தத்தை நாய்கள் நக்கினது. அஷெராவின் தாசிகள் ரத்தம் கலந்த தண்ணீரில் ஸ்நானம்பண்ணினார்கள். தன் தேசத்திற்காக நன்றாய்ப் போர்செய்து அதில் அனேகக் கட்டடங்களை கட்டின அரசனுக்கு இது துயரமான முடிவு; ஆனால் அவன் ஒரு ராட்சியத்தை உண்டாக்கினபோதிலும் அதை நீதியோடரசாளவில்லை. யோசபாத் ராஜ உடையைத் தரித்திருந்தபடியால், வில்வீரர் அவனை நெருங்கிவந்தார்கள். தன் தளகர்த்தர் தன்பக்கம் வரும்படி சத்தமிட்டான். அந்த சத்தத்தால் அது ஆகாபின் சத்தமல்லவென்றறிந்து யோசபாத்தைவிட்டுப் போய்விட்டார்கள்.

யோசபாத் தன் ஜீவன்தப்பி எருசலேமுக்குத் திரும்பி தேசமெங்கும் சுற்றுப்பயணம்பண்ணி விக்ராகாராதனையை அதம்பண்ணி ஜனங்களைத் தங்கள் பிதாக்களின் தேவனண்டைக்குத் திருப்பி பல இடங்களிலும் நியாயாதிபதிகளை நியமித்தான். ஆனால் புறம்பானகாரியங்கள் ராஜ்யத்தின் சமாதானத்தைக் கெடுத்தது. மோவாபியர், அம்மோனியர் அம்மோனியருக்கு அப்புறத்து மனுஷர் எல்லாரும்சேர்ந்து யோசபாத்தின்மேல் யுத்தஞ்செய்யப் புறப்பட்டார்கள். இந்தத் திரளான சேனையைக்கண்டு யோசபாத் தன் ராட்சியத்தின் சகல ஜனங்களையும் வரவழைத்து 'கர்த்தருடைய உதவியைத் தேடும்படி உபவாசத்தைக்கூறினான். சகலரும் சேர்ந்துவந்தபோது யோசபாத் தேவாலயத்தின் ஒரு அறையில் நின்றுகொண்டு தன் மாட்சிமையான ஜெபத்தைப்பண்ணினான். (2 நாளா. xx. 6–11). கர்த்தர் கிருபையாய் இந்த தேசத்தை சுதந்தரமாய்க்கொடுத்து அதில் குடியேறப்பண்ணினர். அபாயம் வரும்போது அவரிடமாய்த் திரும்பினால் அவர் தங்கள் அழுகையைக் கேட்பார். அப்படிப்பட்ட அபாயம் இபபோது சேர்ந்திருக்கிறது. கர்த்தர் கொடுத்த சுதந்தரத்திலிருந்து தங்களைத் துரத்திவிட இந்தத் திரள்சேனை வந்தி

ருக்கிறது. தாங்கள் செய்யக்கூடியது இன்னவென்று தெரியவில்லை; ஆனால் 'தங்கள் கண்கள் கர்த்தரை நோக்குகிறது.' புருஷர், ஸ்திரிகள், சிறுகுழந்தைகள் முதலிய சகல ஜனங்களும் இந்த உருக்கமான விண்ணப்பத்தில் சேர்ந்துகொண்டார்கள். இதற்குக் கிருபைநிறைந்த உத்தரவு கடாட்சிக்கப்பட்டது. கர்த்தருடைய ஆவி யகாசியேல்மேல் இறங்க அவன் எழுப்புதலானசெய்தியைத் தெரிவித்தான். (2 நாளா. xx. 14–7). திரள்சேனை தங்களுக்கெதிராய் வந்தபோதிலும் அவர்கள் கலங்காதிருக்கவேண்டும், போர் தங்களுடையதல்ல, கர்த்தருடையது. அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் அமரிக்கையாய் நின்று கர்த்தருடைய ரட்சிப்பைப் பார்க்கவேண்டியதே. கர்த்தர் தங்களோடிருக்கிறார். இந்த வார்த்தைகளைக் கேட்டபோது யோசபாத்தும் ஜனங்களும் தாழவிழுந்து கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள். இஸ்ரவேலின் பாடகர் உரத்தசத்தத்துடன் கர்த்தரைத் துதிப்பதற்கு எழுந்து நின்றார்கள். விண்ணப்பமும் ஸ்தோத்திரமும் ஒன்றாய் உன்னதத்திற்கேறினது. அபாயம் கடந்துபோனதென்றும் கர்த்தர் தமது ஆவியின் ஏவுதலினால் யகாசியேல்மூலமாய் அறிவித்தசெய்தி நிறைவேறிற்றென்றும் பூரண நம்பிக்கைகொண்டார்கள். மறுநாள் யோசபாத்தின் சேனை புறப்படுகையில் கர்த்தரைப் பூரணமாய் நம்புங்கள் என்று திரும்பவும் சொல்ல, கீதவாத்தியக்காரர் சேனைக்குமுன்சென்று 'கர்த்தரைத் துதியுங்கள். அவருடைய கிருபை என்றென்றைக்குமுள்ளது' என்று பாடினார்கள். வைக்கப்பட்ட பதிவிடைகள் மகா சித்தியுள்ளதாயிருந்தது. எதிரிகளை நடுக்கம்பிடித்தது. தங்களைச்சேர்ந்த சேனைகளில், விசேஷமாய் ஏதோமியர்பக்கத்தில் (2 நாளா xx. 23). சதியென்று சந்தேகித்து ஒருவரையொருவர் கொல்லத்தொடங்கினார்கள். ஒருவரும் தப்பவில்லை. யூதா மனுஷருக்குத் திரள்கொள்ளை கிடைத்தது. அவர்களில் ஒருவரும் மடியவில்லை இந்தப் பெரியஜெயம் கிடைத்த பள்ளத்தாக்கு, அதுமுதல் 'ஆசீர்வாதத்தின் பள்ளத்தாக்கு' (பொராக்கா) என்றழைக்கப்பட்டது. மகா கெம்பீரத்துடன் எருசலேமுக்குத் திரும்பினார்கள். துதியின்கீதங்கள் பாடப்பட்டது, தம்புரு, சுரமண்டலங்கள் பூரிகைகளுடன் சேர்ந்து மகா பூரிப்பானசத்தமாய்த் தேவனுடைய ஆலயத்தில் தொனித்தது. இந்தச்செய்தி எங்கும் பரம்பினபோது, சூழ இருக்கும் ஜாதியாரமேல் கர்த்தரைப்பற்றிய பயமுண்டாக, யோசபாத்தின் ராட்சியத்திற்கு அமைதியும் இளைப்பாறுதலுமுண்டாயிற்று. இந்தப் பெரியசம்பவம், அடுத்த தலைமுறையில் யோவேல் தீர்க்கதரிசிக்கு ஒரு மானதக்காட்சியைச் சவதரித்தது. அதைக் கண்ணுக்குமுன் வைத்துக்கொண்டு சூழ இருக்கும் அஞ்ஞானிகள் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பை விவரித்தான். அவர்கள் அழிவின் பள்ளத்தாக்கில் சேர்ந்துகூடினது அவன் கண்ணுக்குத் தோன்றிற்று. அரிவாளுக்குப் பக்குவமான தானியவயல்களைப்போல் அவன் கண்ணுக்குக் காணப்பட்டார்கள் "திரள்ஜனங்கள், திரள்ஜனங்கள், தீர்மானத்தின் (யோசபாத்) பள்ளத்தாக்கில். (யோவேல். iii. 2)".

பின்னும் ஒருதரம் யோசபாத் மூடத்தனமாய் நடந்துகொண்டான். இஸ்ரவேலரசனாகிய அகசியாவுடன் சினேகம்பண்ண, அவன் இவனைத் தர்சீசுக்குப்போவதற்குக் கப்பல்கள் செய்வதில் இழுத்துவைத்துக்கொண்டான். இதினிமித்தம் தீர்க்கதரிசி யோசபாத்தை மிகவும் கடிந்துகொண்டான். கப்பல்களும் உடைந்துபோயிற்று. யோசபாத்தின் கப்பலோட்டிகள் உபாயம் தவறினவர்களானதால் இப்படியாயிற்று. வேறு கப்பல்களைச் சரிபண்ணி,

அதில் தன் கப்பலோட்டிகளும் சேர்ந்துபோகவேண்டுமென்று அகசியா யோசபாத்துக்கு ஆலோசனை சொல்ல, யோசபாத் அதற்குச் சம்மதியாமல், எலியேசர்மூலமாய்த் தேவனுடைய கோபத்தை உணர்ந்தவனாய்த் தன் கப்பல் சேதத்தை தாழ்மையுடன் ஒப்புக்கொண்டான். கடைசியாய் முடிவுகாலம்வர. அந்த நல்ல அரசன் மரித்து தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களோடு அடக்கம் பண்ணப்பட்டான்.

'தன் தகப்பனைப்போல தைரியசாலி, ஆனால் அவனைவிட ஊக்கமான பிரயாசி; தகப்பனைப்போல எகோவா பக்தமுள்ளவன்; ஆனால் தன்னை ஆண்டு நடத்தின தேவாதிபத்தியத்தைப்பற்றியும் தன் கடமைகளைப்பற்றியும் மிகவும் விரிந்த அபிப்பிராயமுள்ளவன்; தன் தேசத்தின் சரித்திரத்தில் அவனரசாண்ட இருபத்தைந்து வருஷங்களும் மிகவும் ஜொலித்துப் பிரகாசிக்கிற ஒருபாகமாயிருந்தது.'

## யோராம். (2ராஜா.viii.16–24;2நாளா.xxi.1–20).

ஆகாபுக்கும் யேசபேலுக்கும் நாலு பின்சந்ததியார் அக்கிரமக்காரரான அரசர்களானார்கள். யோராமும் அகசியாவும் இஸ்ரவேலிலும் யோராமும் அவன் குமாரன் அகசியாவும் யூதாவிலும் அரசரானார்கள். நாம் கவனிக்க வேண்டியது பின் சொல்லப்பட்ட இரண்டுபேரும் அவர்கள் ஆட்சியின்கீழ் யூதா மிகவும் குன்றிப்போயிற்று. மார்க்கநிலை தவறுதலும் துரைத்தனமோசமும் இந்தக்காலத்தில் விசேஷமாய்க் கவனிக்கத்தக்கது. யோராம் அத்தாலியாளை விவாகம் பண்ணினதால் இரண்டு ராட்சியமும் சிநேகமாய் ஐக்யப்படும் என்ற நம்பிக்கை வீணும் வியர்த்தமாயும் முடிந்தது. நியாயத்தைவிட உபாயத்தை சிரேஷ்டமாய்ப் பிரயோகித்ததால் அதற்குரிய நாசத்தைக் கொண்டுவந்தது. அத்தாலியாள் தன் தாய்க்குரிய தீயலக்ஷணங்களையும் தன் தகப்பனுக்குரிய தந்திரங்களையும் சுதந்தரித்துக்கொண்டாள். தன் பெற்றோரில் எதாவது அற்பசொற்ப நன்மைகள் காணப்பட்டால் அவைகளில் யாதொன்றும் அவளிடத்தில் தலைகாட்டவில்லை. அவளுடைய புருஷன் முற்றிலும் அவளுக்குள் அடங்கிப்போனான். அவனுடைய சகோதரர் அவனைவிட நல்லவர்களாயிருந்தார்கள் (2நாளா.xxi.13) என்று சொல்லியிருப்பதனால் அவளுடைய தீமையான செல்வாக்கு புருஷனை ஆண்டதேயன்றி அ... தாருக்கு எட்டவில்லை என்றறியலாம்.

இப்படித் தனமனைவியின் அகங்காரசித்தத்திற்கு அவன் அடங்கிப்போனதால், பாகால் வணக்கம் திரும்பக் கொண்டுவரப்பட்டு, கர்த்தருடைய வீட்டின் பணிமுட்டுகள் விக்கிரகவணக்கச்சடங்குகளில் உபயோகிக்கப்பட்டது. (2நாளா.xxiv.7) மலைமேல் மேடைகள் சிரேஷ்டமாய் பூசிக்கப்பட்டது. யூதா இஸ்ரவேல் மனுஷர் எகோவாவைப் புறக்கணித்து, விக்ரகத் தொழும்பராகக் கட்டாயம் பண்ணப்பட்டார்கள். கர்த்தர் தாவீதுடன் பண்ணின உடபடிக்கையை நினைத்து அவனுக்கும் அவன் புத்திரருக்கும் என்றென்றைக்கும் ஒரு விளக்கை[1]க் கடாட்சிப்பேன் என்று வாக்குப்பண்ணினபோதிலும் (2நாளா.xxi.7) அரசன்பேரிலும் அவன் தேசத்தின்மேலும் கொடிய தண்டனை நேர்ந்தது.

1. விளக்கு என்கிற பதம் 'ஒரு மனுஷனுடைய ஜீவியத்தைக் குறிக்கும் அடையாளம். அவன் பின்சந்ததியார் தழைத்திருந்தால் அது அவனுடைய ஜீவியத்தை ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கும் தீபம்போலிருக்கும்' பீகவியாக்யானம் 320ம் பக்கம்.

யோசபாத்தின் ஸ்திரமான அரசாட்சியின்கீழ் ஏதோம் கப்பம்கட்டும் ராட்சியமாயிருந்தது. இப்போது அது கலகம்பண்ணி சுயாதீனத்தை அடைந்தது. தென்மேற்குத் திசையிலுள்ள பெலிஸ்தியரும் அரபியரும் யோராமுக்கு விரோதமாய்க் கர்த்தரால் ஏவப்பட்டார்கள். அவர்கள் தேசத்திற்குள் நெடுந்தூரம்வந்து அரமனைக்குரியவைகளைக் கொள்ளையிட்டு அரசனுடைய மனைவிகளையும் கடைசிப் புத்திரன்தவிர அவனுடைய மற்றெல்லாக் குமாரரையும் சிறைப்படுத்திக்கொண்டுபோனான். தன் மக்கள் சுயாதீனப்பிரியராகி தனக்கெதிரிடை விரோதம் செய்வார்களென்று பயந்து தன் மக்களில் ஆறுபேரையும் இஸ்ரவேலின் பிரபுக்களில் சிலரையும் யோராம் கொன்றுபோட்டான். (2நாளா.xxi.3–4) அது மிக நிஷ்டூரமானசெய்கை. அனேக நூற்றாண்டுகளுக்குப்பின் துருக்கிசுல்தான்கள் அப்படிச்செய்தார்கள்.

இரண்டுவருஷம் கடந்தபின் அவனுடைய கொடியவியாதியால் மரித்தான். அத்தாலியாள் ராஜசபையில் சிலரைத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டபோதிலும் இந்த அக்ரமக்காரனான அரசன் மரித்தபோது ஜனங்கள் துக்கப்படவில்லை. 'விரும்புவாரில்லாமல் அவன் இறந்துபோனான்' என்று நாளாகமக்காரன் சொல்லுகிறார். 'செப்ற்றுவஜென்ற்று அவன் புகழ்ச்சியின்றி நடந்தான்' என்று சொல்லுகிறது. அவன் ராஜகல்லறைகளில் அடக்கம் பண்ணப்படவுமில்லை, வழக்கமான சுகந்தவர்க்கத்தகனம்பண்ணி அவனுக்குக் கருமாதி செய்யவுமில்லை.

### அகசியா. (2ராஜா.viii.25–ix.14–28;2நாளா.xxii.1–9).

அரபியர் யோராமின் மூத்தகுமாரரையெல்லாம் கொன்றுபோட்டார்கள். ஆகையால் எருசலேமின் ஜனங்கள் அவனுடைய இளையகுமாரனை அரசனாக்கினார்கள். அவன் ஒரு வருஷம்மாத்திரம் அரசாண்டான். அவன் ஆ[illegible] வீட்டாருடைய வழிகளில் நடந்தான். அவன் தாய் அத்தாலியாள் அ[illegible]டைய துர்ப்போதனைக்காரியாயிருந்தாள். பாகால் பூசாரியாகிய மாத்தானுக்கு [illegible] [illegible]சாரியனைவிட அதிக செல்வாக்கிருந்தது. பிரதான ஆசாரியனுடைய உத்யோ[illegible]த்தைப்பற்றிய கண்யம் அற்றுப்போயிருந்தது. தன் தாய்மாமன் யோராமாகிய இஸ்ரவேலரசன் சிரியாவுக்கு வி[illegible]ச்செய்த யுத்தத்திலே தானும் சேர்ந்துகொண்டான். யுத்தத்திலே யோராம் காயப்பட்டதால காயத்தை ஆற்றுவதற்கு யெஸ்ரயேலுக்குப்போனான். அவனுடைய சுகத்தை விசாரிப்பதற்கு அகசியாவும் அங்கே போனான். இரண்டு அரசர்களும் தங்கள் ஸ்தானத்தை விட்டுவிட, யேகூ சேனையை நடத்தினான். அவன் பழிக்கஞ்சாக் கன்னெஞ்சன். அகசியா சமாரியாவுக்கு ஓடி ஒளிக்க அங்கே அவனைக் கண்டுபிடித்துக்கொன்று அவன் ஒரு ராஜகுமாரனென்று சொல்லி அவனை அடக்கம் பண்ணினார்கள். யோராமைச்சந்தித்து அவனோடுகூட ஏகூவுக்கு விரோதமாய்ப் போனதால் இது அவனுக்குத் தேவதண்டனையென்று நாளாகமக்காரன் சொல்லுகிறார். ஏகூ ஆகாபின் குடும்பத்தை நாசமாக்கினதுமன்றி அகசியாவுடைய சகோதரர் மக்களையும் கொன்றான். அந்த சகோதரர் அரபியர்கையால் மடிந்தவர்கள். 'அப்படியே அரசாள்வதற்குப் பெலன்கொள்ளத்தக்க ஒருவரும் அகசியாவின் குடும்பத்திற்கு இல்லாமற்போயிற்று.' (2நாளா.xxii.9). அவனுடைய அரசாட்சி துக்கிக்கத்தக்கதல்ல, அவனுடைய அரசாட்சியில் யூதா மிகவும் குன்றிப்போயிற்று.

## யோவாஸ். (2ராஜா.xi.1–xii–13; 2நாளா.xxii.10–xxiv–27).

அரபியர், எகூ., யோராம் இவர்களால் ராஜகுடும்பத்தார் கொன்றுபோடப்பட்டதால், யூதாவின் ராஜாங்கத்துக்கு தூரபாத்யஸ்தர்மாத்திரமிருந்தார்கள். அத்தாலியாள் தன் குமாரனுடைய மரணத்தைக் கேள்விப்பட்டவுடனே, ராஜகுடும்பத்தைச்சேர்ந்த சகல பாத்யஸ்தரையும் சங்கரித்தாள். ஆனால் அகசியாவின் சகோதரி யோசபாள் தன் சகோதரனுடைய பாலகனாகிய யோவாசை எவரும் அறியாமல் ஒரு பள்ளி அறையில் ஒளித்துவைத்துக் காப்பாற்றினாள். அது எவரும்போக அவசியமில்லாத இடம். யோசபாளின் கணவன் யோய்தா தேவாலயத்தின் பிரதான ஆசாரியனாயிருந்தான். ஆகையால் அந்தப் பாலகனை ஆலயத்தில் ஒரு அறையில் ஒளித்துவைத்து ஆறுவருஷம் பத்ரமாய்க் காப்பாற்றினார்கள். ஒரு ஸ்திரியின் யூகமும் விவேகமும் இன்னொரு ஸ்திரியின் கொடிய நிஷ்ரேத்தை வியர்த்தமாக்க, ராஜபக்தமுள்ள ஓர் ஆசாரியனுடைய தைரியமும் பொறுமையும் சேர்ந்து ராஜவங்கிஷத்தில் மீந்திருந்த ஒரே சுதந்தரவாளியைப் பத்ரமாய்க் காப்பாற்றினது. அப்போது துரைத்தனம் பண்ணினதோ அத்தாலியாள். இதற்குமுன் எந்த ஸ்திரியும் ராணியாயிருந்ததில்லை. ஆறு நீண்டவருஷம் அவள் துரைத்தனம் பண்ணினாள். தன்தாய் ஏசபேலைப்போல் மகா கெட்டிக்காரியாயிருந்திருக்க வேண்டியது. ஒரு இரக்கமற்ற நிஷ்ரேஸ்திரி, பாதிபினிஷிய ஸ்திரியாகிய விக்ரகத்தொழும்பி, யூதாவின் காரியாதிகள்மேல் துரைத்தனம் பண்ணினால், அது எவ்வளவாய்த்தாழ்ந்து குன்றிப்போனதென்று நிதானித்துக்கொள்ளலாம். யூதாவின் நம்பிக்கை ஒரு பாலகன்மேலிருந்தது. அப்பாலகனைக் காப்பாற்றின யோய்தா தன் உபாயங்கள் க்ஷேமமாய் முடியத்தக்ககாலம் வருமட்டும் வெகு பொறுமையுடன் காத்திருக்கவேண்டியிருந்தது. யூதாப்புத்ரர் அத்தாலியாளைப்பற்றி முற்றிலும் மனஞ்சலித்து வெறுப்படையுமட்டும் காத்திருக்கவேண்டியது. அத்தாலியாளுக்கு அனுகூலமாயிருந்தவர்களனேகர். பாகால் வணக்கம் பரிசுத்த பட்டணங்களில் ஆரவாரமாய் நடந்தது. ராஜசபையில் பினிஷியர் செல்வாக்குள்ளவர்களாயிருந்ததால் யூதா ஒரு பினிஷியநாடுபோலாச்சுது. ஆகவே ஜனங்களுக்கு வெறுப்பும் மனக்கடுப்புமுண்டாக இந்த நிந்தைகளையெல்லாம் நீக்கத் தருணம்வந்தது.

அப்போது யோய்தா யூதாவின் பட்டணங்களுக்கு அதிபதிகளையனுப்பி லேவியரையும் இஸ்ரவேலின் தலைவரையும் தருவித்தான். காவலாளரோடுகூட இன்னும் வேறு நம்பிக்கையுள்ள மனுஷரனேகர் தன் சமீபத்திலிருப்பதவசியமென்று யோய்தா கண்டான். அது ஓய்வுநாள். அப்போது ராஜகாவலுக்குரிய ஐந்து வகுப்புகளில் ஒரு வகுப்புமாத்திரம் அரமனைக்காவல் செய்ய, மற்ற நாலும் முறைநீங்கி யாதாமொரு விசேஷித்த கடமைகள் செய்ய சுயாதீனராயிருந்தது. ஒரு வகுப்பு ஒலிமுகவாசலிலும், இன்னொன்று சூர் என்ற (2ராஜா. xi.6) அஸ்திபாரவாசலிலும் நிறுத்தப்பட்டார்கள். நம்பிக்கையுள்ள சிலமனுஷர் ஓடுகிறவர்கள் என்ற காவல்காரர்பின் நிறுத்தப்பட்டார்கள். இந்தக் காவல்காரருக்கு அரமனை அருகாமையில் குடியிருக்குமிடம் இருந்தது. ஓடுகிறவர்கள் ஒருவேளை துரோகிகளாய்த் திரும்பி வீட்டுக்குள் புகுந்துவிடாமல் ஒரு தடுக்கலாக இப்படிச் செய்யப்பட்டது. ஆலயக் காவல்காரராகிய லேவியருக்கு அதிபதிகளாக காவலாளருடைய அதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். இந்த லேவியருடைய முறைகள் முடிந்த

வுடனே அவர்களை வீட்டிற்கனுப்பிவிடுவதற்குப்பதிலாக யோய்தா அவர்களை நிறுத்திவைத்துக்கொண்டபடியால் அவர்களுடைய தொகை ஏராளமாயிருந்தது. ஓய்வுநாட்பண்டிகைக்காக திரள்ஜனங்கள் ஆலயப்பிரகாரங்களில் கூடிவந்திருந்தார்கள்; என்றாலும் நடக்கப்போகிற தின்னதென்றறியாதிருந்தார்கள். சடங்குப்படி சுத்தமுள்ளவர்களாயிருந்ததால் ஆசாரியரும் லேவியருமாத்திரம் ஆலயத்திற்குள்வர இடம் பெற்றார்கள். அதிபதிகளுக்கு யோய்தா ஈட்டி, பரிசை, கேடகங்களைக் கொடுத்தான். இவைகள் தாவீதால் சத்துருக்களிடத்திலிருந்து பிடித்து ஆலயத்தின் ஜெயசின்னமாக வைக்கப்பட்டது. இப்போது தாவீதின் சுதந்தரவாளியைக் காப்பாற்றுவதற்கு உபயோகிக்கப்பட்டதென்று குறித்துக்காட்டினது. ஆலயத்தின் பிரகாரத்தில் பலிப்பீடம் வாசல் மண்டபத்திற்கு முன்னாலிருந்தது. அதிலிருந்து, வலதிடது மூலைகள்மட்டும் ஆயுதமணிந்த இரண்டுவரிசை மனுஷர் நிறுத்தப்பட்டார்கள். ஆகவே திரிகோணமான இந்த இடத்தின் தலைப்பில், யோவாஸ்வந்து நிற்கும்போது அவன் பத்ரமாய்ப் பாதுகாக்கப்படுவான். முன்னெச்சரிப்பாக எடுத்துக்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள் வெகு பிரயாசையுள்ளதாயிருந்தது.

நாடகக்காட்சிபோன்ற சம்பவம் தொடங்குவதற்கு இப்பொழுது எல்லாம் ஆயத்தமாயிருந்தது. யோய்தா அரசனைக்கொண்டுவந்து அவன் சிரசின்மேல் கிரீடத்தைத் தரிப்பித்து பிரமாணத்தின் ஒருபாகமாகிய சாட்சியின் ஆகமத்தை கிரீடத்தின்மேல் வைத்தான். உண்மையோடும் நீதியோடும் அரசாள்வது அரசனுடைய கடமையென்றும் அரசன் பிரமாணத்திற்குமேலல்ல, கீழடங்கினவனென்றும் இது அடையாளமாய்க் காட்டினது. அப்புறம் யோய்தாவும் அவன் புத்ராரும் அவனை பரிசுத்ததைலத்தால் அபிஷேகம்பண்ணி அவனை ராஜா என்றுகூறி அறிவித்தார்கள். ஜனங்கள் சந்தோஷத்துடன் கைகொட்டி 'ராஜா வாழ்க', என்றார்கள். வெள்ளிப்பூரிகைகளின் சத்தத்தையும் பாடகரின் கீதங்களையும் ஜனங்களுடைய சந்தோஷ ஆரவாரத்தையும் அத்தாலியாள்கேட்டு காரணத்தை அறிவதற்கு தன் ராஜ மகத்வத்திற்குத்தகுந்த காவலோடு ஆலயத்திற்குப் புறப்பட்டாள். அவள் வந்தபோது, கடந்த ஆறுவருஷங்களிலும் தன் கனவிலும் எண்ணாத ஒரு பால்ய அரசன் வழக்கம்போல தூண்பக்கத்தில் நிற்பதையும் ஜனங்களின் அதிபதிகள் ஆசாரியர் லேவியர் அனைவரும் அவனைப் புடைசூழ்ந்து நிற்பதையும் கண்டு பயந்துநடுங்கித் தன் உடைகளைக்கிழித்து 'சதிசதி' என்று சத்தமிட்டு ஓடித்தப்பிக்கொள்வதற்குத் திரும்பினாள். அப்போது யோய்தா அவளை வரிசைகளின் ஊடே ஆலயப்பிரகாரங்களுக்கு வெளியேதுரத்தி, அரமனைக்கு ஏகும் திறந்தபாதையிலே அவளைக் கொன்றுபோடவும் அதிபதிகளுக்குக் கற்பித்தான். 'அத்தாலியாளைப் பட்டயத்தால் கொன்றபின்பு நகரம் அமரிக்கையாயிற்று.' (2 நாளா. xxiii. 21).

அப்பொழுது யோய்தா தாங்கள் கர்த்தருடைய ஜனமாயிருக்கும்படி ராஜபிரதிநிதியாகிய தானும் சகல ஜனங்களும் ராஜாவும் உடன்படிக்கைபண்ணிக்கொள்ளும்படி செய்தான். (2 நாளா. xxiii. 16). 2 ராஜா. xi. 17 ல் உடன்படிக்கை கர்த்தருக்கும் அரசனுக்கும் ஜனங்களுக்கும் செய்யப்பட்டதென்றிருக்கிறது. இந்த வித்யாசங்களுக்குச் சமாதானம் நாளாகமத்தில் பார்க்கலாம். அங்கே பிரதான ஆசாரியன் கர்த்தருடைய பிரதிநிதியாய் அர

சனும் ஜனங்களும் பிரமாணத்திற்குக் கீட்படியவேண்டும் என்ற உடன்படிக்கையை ஏற்றுக்கொள்கிறுன். பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளின் மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாய்த்திறந்து அதிலுள்ள பிரதிஷ்டைபண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகாலுக்காகச் செலவுபண்ணியிருந்தார்கள். அந்தப் பாகால்கோவில் பக்கத்திலிருந்தது. ஜனங்கள் மிகுந்த வைராக்கியம்கொண்டு அந்தக் கோவிலுக்குள்பாய்ந்து, இனிக் கவைக்குதவாதபடி பொடிப்பொடியாய் உடைத்து, அதன் பிரதான பூசாரியாகிய மாத்தானையும் அவ்விக்ரகப் பலிப்பீடத்தின்முன் கொன்ருர்கள்.

யோய்தா, கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, தாவீதின் வீட்டை அழியாமல் காப்பாற்றினதினிமித்தம் பிரதான ஆசாரியன் என்கிறபட்டம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இது ஆரோன், ஏலி, சாதோக் என்பவர்களுக்கு முதலாய்க் கொடுக்கப்படவில்லை. இப்போது நடப்பிக்கவேண்டிய முதல் காரியம் ஆலயத்தையும் அலக்ஷியம்பண்ணப்பட்ட யேகோவா ஆராதனை ஒழுங்குகளையும் புதுப்பிப்பதே. அப்புறம் ஆலயத்தைச் சுத்திகரித்துப் பழுதுபார்ப்பதற்கு ஆசாரியர் விசாரணைக்குள் உத்யோகஸ்தர் நியமிக்கப்பட்டார்கள். பலிகளைச்சேர்ந்த காணிக்கைகள் பிரமாணத்தில் கற்பித்திருக்கிற பிரகாரம் இருக்கவேண்டும்; ஆராதனைக்குரிய கீதவாத்தியங்கள் தாவீதின் சட்டதிட்டப்பிரகாரம் இருக்கவேண்டும். இந்தக் காரியங்கள் முடிந்தவுடனே, யோய்தா, அதிபதிகள், களிகூரும் ஜனங்கள்சகிதம், பால்ய அரசனை, ஆலயத்திலிருந்து அரமனையிலிருக்கும் பெரிய நியாயஸ்தலமண்டபத்திற்கு இட்டுக்கொண்டுபோய் 'ராட்சியத்தின் சிம்மாசனத்தின்மேல் உட்காரவைத்தார்கள்'.

ஆசாரியனுகிய யோய்தாவின் நாளெல்லாம் யோவாஸ் கர்த்தரின் பார்வைக்கு நலமானதைச்செய்தான். (2 நாளா. xxiv. 2) யோய்தா அவனுடைய விவாககாரியங்களை ஒழுங்குபண்ணி அவனுக்கு நலமான மனைவிகளைக் கொண்டுவந்தான். ஆனுல் மேடைகள் நீக்கப்படவில்லை. ஜனங்கள் இன்னும் அவைகளில் பலிசெலுத்தி தூபங்காட்டினுர்கள். (2 ராஜா. xii 3) அவைகளுக்கு விரோதமானபிரமாணம் அப்போது தெளிவாய்த் தெரியவில்லை. அவைகளில் நடந்த ஆராதனை விக்ரக ஆராதனையாய் இராதபோதிலும், அப்படிமாறுவது நடக்கத்தக்கது. மேடைகளில் ஆசாரியரும் இருந்தார்கள். ஆனுல் அவர்கள் ஆலயத்தில் பலியிட இடம்பெறவில்லை, என்ருலும் புளிப்பில்லா அப்பத்தில் பங்குபெறுவதற்கு உத்தரவுபெற்ருர்கள். அடுத்த காரியம் ஆலயத்தைப் பழுதுபார்ப்பது. அத்தாலியாளின் மக்கள் அதற்குள் பலவந்தமாய்ப் பிரவேசித்து அதில் கற்களைப்பிடுங்கி பாகால்கோவிலைக் கட்டினுர்கள். தேசத்தின்மேல் சத்துருக்கள் படையெடுத்தபோது, நல்ல அரசருமுதலாய் தேவாலயப்பொக்கிஷங்களை வெகுமதியாய்ச் செலுத்தி லஞ்சம் கட்டினுர்கள். தன் பால்ய வருஷங்களை அதன்மதிலுக்குள் செலவழித்த யோவாஸ் தனக்குத் தருணமும் சத்துவமும் வந்தபோது 'கர்த்தருடைய வீட்டைப் பழுதுபார்ப்பதற்கு மனநிர்ணயம்பண்ணினுன்' என்பது ஆச்சரியமல்ல. இதற்குப் பணங்கள் அவசரம். அவைகளைச்சேகரித்த விபரம் 2 ராஜா. xii. 4 பின்வசனங்களிலும் 2நாளா. xxiv. 5 பின்வசனங்களிலும் கண்டிருக்கிறது ராஜாக்களில் காணிக்கைகள் ஆலயத்தோடு சம்பந்தப்பட்டது. ஆகையால் எருசலேமில் சேகரிக்கப்பட்டது. நாளாகமத்தில் அவைகள்

யூதாவின் பட்டணங்களில் சேகரிக்கப்பட்டது. எருசலேம் காணிக்கைகள் பிரதிஷ்டைசெய்யப்பட்ட பொருட்கள். அதாவது ஆலய ஆராதனை விஷயத்திற்காகக் கொடுத்தபணம். 'இது வழங்கும் நாணயம்'. இரண்டாவது வகை 'ஒவ்வொரு மனுஷனும் மதிக்கப்பட்ட' பணம். அதாவது அபராதங்களும் பிரார்த்தனைகளும். இவைகளால் வரக்கூடியதொகை இவைகளென்று உத்தேசித்த பணம். மூன்ருவதுவகை, மனச்சுயாதீனமாய்க் கொடுக்கும் காணிக்கை. இதை 'அவரவர் தம்தம் மனதிலே நியமித்திருக்கும் எல்லாப்பணம்' என்று விவரித்திருக்கிறது. இவைகளெல்லாவற்றுடன் லேவியர்தேசத்துப் பட்டணங்களிலிருந்து கொண்டுவந்த பணமுங்கூட்டப்பட்டது. ஆசாரியரும் லேவியரும் ஆலயம் பழுதுபார்ப்பதைத் துரிதமாய் நடத்தவேண்டுமென்று அரசன் கேட்டபோதிலும் அவர்கள் என்னகாரணத்தினுலோ 'அதைத் துரிதப்படுத்தவில்லை.' யோய்தாவுக்கு ஆள் அனுப்பிக்கேட்க, ஆசாரியரும் லேவியரும் பணத்தைப் பெற்றுக்கொண்டபோதிலும் வாங்கின நோக்கத்திற்காகச் செலவழிக்கவில்லை என்று கண்டான். அரசன் அவர்களை வெகுசாந்தமாய்க் கடிந்துகொண்டான். பணத்தை அபகரித்துக்கொண்டார்களென்று குற்றஞ்சாட்டவில்லை. இனிமேல் தங்கள் சிநேகிதரிடத்திலிருந்து பணம் பெற்றுக்கொள்ளவேண்டியதுமில்லை; பழுதுபார்க்கும் வேலையை மேற்பார்க்கவேண்டியதுமில்லை என்றுசொன்னுன். இந்தவிஷயத்தில் எவ்விதபொறுப்பையும் எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை என்றும் சொன்னுன். இந்த ஒழுங்குக்கு அவர்கள் சம்மதித்தார்கள். அரசனுடைய கட்டளைப்படி ஒருபெட்டி உண்டாக்கி அதன்மூடியில் ஒரு துவாரம்போட்டு ஆலயத்தின் வாசலுக்குவெளியே வைக்கப்பட்டது. இது சகலருக்கும் பிரியமானதால் பெட்டியில் திரளானபணம் போடப்பட்டது; நாடோறும் லேவியர் பெட்டியை அரமனைக்குக்கொண்டுபோக அங்கே சம்பிரதியும் பிரதான ஆசாரியனும் பெட்டியில்போடப்பட்ட பணத்தைக் கணக்கிட்டு, பழுது பார்ப்பதை மேல்பார்த்த கண்காணிகளுக்குக் கொடுத்தார்கள். அவர்கள் அதை வேலையாட்களுக்குக் கொடுத்தார்கள். மீதிப்பணத்தால் ஆலயத்திற்குப் பொன்வெள்ளித் தட்டுமுட்டுகள் செய்தார்கள். குற்றநிவாரணகாணிக்கைகளும் பாவநிவாரணகாணிக்கைகளும் ஆசாரியர் எடுத்துக்கொள்ளலாம். ரம்மியமான நம்பிக்கை திரும்ப உண்டாக யோய்தாவின் மீந்தகாலமெல்லாம் அரசனுக்கும் ஆசாரியருக்கும் யாதொரு பிணக்குவரவில்லை. யோய்தா நூற்றமுப்பது வயசானபோது காலஞ்சென்ருன். அவன்செய்த எல்லாவற்றிற்கும் சகல ஜனங்களும் அவனை மகாகண்யமாய் எண்ணி ராஜாக்களின் கல்லறையில் வெகுமாட்சிமையுடன் அவனை அடக்கம்செய்தார்கள்.

எருசலேமில் ஒரு அஞ்ஞானகூட்டத்தார் இருந்தார்கள். யோய்தாவின்காலத்தில் தாங்கள் விரும்பினபடிச் செய்யமுடியவில்லை. ஏனென்ருல் அவன் ஆலயத்தைவிசாரிக்கும் உத்யோகஸ்தனை ஏற்படுத்தினுன். (2 ராஜா. xi. 18; யெரே. xxix. 26). இப்போது அவன் மரித்துப்போனபடியால் தங்களுக்கு அரச சிநேகம்கிடைக்கும் என்று நம்பினுர்கள். நகரத்தின் தலைவரும் யூதாவின்பிரபுக்களும் அத்தாலியாளுக்குத் துணையாயிருந்தவர்கள். அவளுடைய மதக்கோட்பாடும் ஆராதனைமுறைகளும் கனவான்கள் பின்பற்றத்தக்கவை என்று பாராட்டினுர்கள். அரசனுக்குத் தலைகுனிந்து நயவசனத்துடன் ராஜவணக்கம்செய்தார்கள். 'ஆலயப்புதுப்பித்தல் சம்பந்தமாய் ஆசாரியருடைய சமுசயமான நடக்கையைப்பற்றி வெறுப்படைந்தவனுயும்,

தன்னைவளர்த்த தகப்பனுக்குதான் இனிக்கடமைப்பட்டவனல்ல என்று ணர்ந்தவனாயும் தன்னை அவர்கள் கரத்திற்குள் ஒப்புவித்தான்.' அவர்கள் திரும்ப அஷரிமையும் விக்ரகங்களையும் சேவித்தார்கள். கர்த்தர் கோபமூண்டவராய் அவர் அவர்களிடத்தில் தமது தீர்க்கத்தரிசிகளை அனுப்ப, அவர்கள் அவர்களுடைய மதப்பிரஷ்டத்தை மிகவும் கடிந்துகொண்டார்கள். அவர்களோ அதற்குச் செவிகொடுக்கவில்லை. அப்பால் யோய்தாவின் குமாரன் சகரியா புறப்பட்டு ஜனங்களுடைய மீறுதல்களினிமித்தம் கடிந்துகொண்டு, கர்த்தர் அவர்களைக் கைவிட்டதினால் அவர்கள் தழைப்பதில்லை என்றறிவித்தான்.

அரசன் கோபங்கொண்டு, யோய்தா செய்தவைகளையெல்லாம் மறந்தவனாய், அவனுடைய குமாரனும் தன் விளையாட்டுத்தோழனுமான சகரியாவைக் கொன்றுபோட்டான். சகரியா சாகையில் 'கர்த்தர் இதைப்பார்த்து இதற்குப் பதிலளிப்பாராக' என்று ஜெபித்தான். இந்த விண்ணப்பம் சீக்கிரம் கேட்கப்பட்டது. 2 நாளா. xxiii. 11 ஐயும் xxiv. 25 ஐயும் ஒத்திட்டுப் பார்த்தால் காரியம் வெகு துயரமாய் முடிந்ததென்று தெரிகிறது. யோய்தாவின் குமாரரும்சேர்ந்து அவனுக்குக் கிரீடம்சூட்டினார்கள். அவர்களுடைய ரத்தப்பழியினிமித்தம் யோவாஸ் தன் சொந்தவேலையாட்களால் கொலையுண்டான். (2 நாளா. xxiv. 25). அரசன் வெகு ஈனமாய்த் தாழ்ந்துபோனான்; அத்தாலியாளுடைய நிஷ்டூரசுபாவம் தன் பௌத்ரனில் திடீரென்று வெடிக்க அவன் யோய்தாவின் குமாரனுக்குச்செய்த தன் நிஷ்டூரசெய்கையின்மூலமாய் அவள் (அத்தாலியாள்) பழிவாங்கிக்கொண்டாள். இந்தக் கொடியசெய்கை நீடித்தகாலங்களாய் மனுஷருடைய மனசில் பதிந்திருந்தது. நமது ஆண்டவர்காலத்திலும் வெகுநடுக்கத்துடன் அது ஜனங்களுடைய ஞாபகத்தில்வந்தது. (மத். xxiii. 35) இது நடந்தது ஒரு ஓய்வுநாளென்றும் அது பாவநிவர்த்தியின் பெரிதானநாளென்றும் அந்த ரத்தக்கறை துடைக்கக்கூடவில்லையென்றும் பாரம்பரை சொல்லுகிறது. தால்மூடில் பின்வருமாறு சொல்லியிருக்கிறது. நேபுராசதன் என்னும் ஓர் பாபிலோனிய தளகர்த்தன் தேவலயத்தில் பிரவேசித்து அந்த இடத்தில் ரத்தம் குமிளிக்கிறதைக் கண்டான். அது பலிப்பீடத்தில் பலியிடப்பட்ட ஜெந்துக்களின் ரத்தம் என்று சொன்னார்கள். கன்றுகள், ஆட்டுக்குட்டிகள், செம்மறிக்கடாய்கள் இவைகளைத்தருவித்து வெட்டுவித்தான். ஆனால் அவைகளின் ரத்தம் குமிளிக்கவில்லை. 'காரியத்தின் உண்மையை எனக்குத் தெரிவிக்காவிட்டால் உங்கள் சதையை இரும்புவாரிகளால் கிழித்துப்போடுவேன்' என்றான். அதற்கு அவர்கள், 'உம்மாலே நாங்கள் அடைந்திருக்கும் பொல்லாப்பையெல்லாம் முன்னறிவித்த ஒரு ஆசாரியனாகிய தீர்க்கத்தரிசி கொலையுண்டான். அது அவனுடைய ரத்தம்' என்றார்கள். அவன் 'நான் அவனைச் சாந்தப்படுத்துவேன்.' என்றுசொல்லி ரபிக்கள் இளமையான ஆசாரியர், பள்ளிப்பிள்ளைகள் இவர்களை அந்த இடத்தில் சங்கரித்தான். அந்த ரத்தம் இன்னும் குமிழித்தது. அவன் இன்னும் அனேகரைச் சங்கரித்து, 'சகரியாவே, சகரியாவே, உன் ஜனத்தில் சிரேஷ்டமானவர்களை நீ அழித்துப்போட்டாய். அவர்களெல்லாரையும் நான் அழித்துப்போட விரும்புகிறாயா?' என்றான். அப்போது அது குமிழியாமல் எல்லாம் அமரிக்கையாயிருந்தது. நேபுராசதன் தான்சிந்தின ரத்தத்தையெல்லாம் நினைத்து மனந்திரும்பி யூதமார்க்கத்தைச் சேர்ந்துகொண்டான்.

ராஜாக்களின் சரித்திரக்காரன் சகரியாவின் கொலையைப்பற்றிய கிளைச் சரித்திர விஷமாய் ஒன்றும் சொல்லவில்லை; ஆனால் அதற்குப்பின்வந்த ஆபத்தைப்பற்றிச் சொல்லுகிறான். சீரியா தேசத்தரசனாகிய ஆசகேல் வட ராஜ்யத்தில் ஜெயமான போர்செய்து காத் பட்டணத்தைப் பிடித்து எருச லேமுக்கு விரோதமாய் வந்து அதன் சேனையை மடங்கடித்தான். 'அவர் கள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுவிட்டபடியால், கர்த் தர் மகாபெரிய சேனையை அவர்கள் கையில் ஒப்புக்கொடுத்தார். (2நாளா. xxiv.24). ஆசகேல் தேவாலயத்திலும் அரமனையிலுமுள்ள திரண்ட திரவியத்தை வெகுமதியாய்ப் பெற்றுக்கொண்டு தன் தேசத்திற்குத் திரும்பி னான். அப்புறம் அரசன்மேல் நீதியான தண்டனை வருகிறது. அவன் தனக்குச் சமீபத்தில் நேரிட்ட துன்பத்தைப்பற்றித் துயரப்பட்டுக்கொண்டி ருக்கும்போது அவனுடைய வேலைக்காரர் அவனுக்கு விரோதமாய் துராலோ சனைசெய்து அவனைக் கொன்றார்கள். நாளாகமக்காரன், அவன் எருசலே மில் அடக்கம்பண்ணப்பட்டான், ஆனால், ராஜகல்லறைகளிலல்ல என்று சொல்லுகிறான். 'ராஜாக்களில் தன் பிதாக்களோடே தாவீதின் நகரத்தில்' அடக்கம் பண்ணப்பட்டான் என்றிருக்கிறது. தன் பிதாக்கள் அடக்கம் பண்ணப்பட்ட நகரமாகிய எருசலேமிலே என்பது பிந்தின அர்த்தம்.

யோய்தாவின் விசாரணையின்கீழ் ஆசாரியர் மிகுந்த செல்வாக்குள்ள வர்களாயிருந்தார்கள். விளைச்சல் அற்றுப்போனதினிமித்தம் ஆலயத்தில் போஜனபலியும் பானபலியும் இல்லாததனால் யோவேல் தீர்க்கதரிசி அவர்க ளைப் புலம்பி, அழச்சொல்லுகிறார். கர்த்தரைவிட்டு விலகினதினிமித்தம் அது அவர்கள்மேல் வந்ததண்டனை. அவர்கள் ஜனங்களைத் தருவித்து அவர் கள் மனந்திருப்புவதற்கென்று பக்திவினயமான உபவாசத்தைக் கூறவும் அழுகையோடும் புலம்பலோடும் கர்த்தரிடத்திற்குத் திரும்பவும் ஏவுகிறான். மனந்திரும்புதலில்லாவிட்டால் உபவாசத்தில் பிரயோசனமில்லை. ஆகை யால் யோவேல் தீர்க்கதரிசி சொல்லுகிறார்:—'நீங்கள் உங்கள் வஸ்திரங்களை யல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்'. (ii.13). கிழிக்கப்பட்ட வஸ்திரம் ஒரு காரியத்தைக் குறிக்கிற அடையா ளம். தேவனுக்கேற்கும் பலி நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இரு தயம், அதை அவர் புறக்கணியார்; (சங்.Li.17). அப்புறம் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். (யோவேல் ii 21) எங்கும் க்ஷேமமுண்டாகும், தேவனுடைய ஆவி ஊற்றப்படுவதால் குறிக்கப்படும் சகல ஆசீர்வாதங்களும் தகுந்தகாலத்தில் உண்டாகும். தன் காலத்திலிருந்த மனுஷர் துன்பத்திலும் அங்கலாய்ப்பிலும் இருந்தபோது இந்த யூதாவின் தீர்க்கதரிசி கூறி அறிவித்த எச்சரிப்பும் நம்பிக்கையும் நிறைந்த செய்தி இதுவே.

### அமசியா. (2 ராஜா xiv.22; 2நாளா.xxv.1–28).

யூதாராட்சியம் தாவீதின் வம்சத்திற்குரியதாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தென்பது சகல மனுஷருடைய மனசிலும் அழுந்தப் பதிக்கப்பட்டிருந்ததால் எந்தத் துரோகிகளும் அதைக் கவிழ்த்துப்போட முடியாது. ஆகவே யோ வாசுக்குப்பின் அவன் குமாரன் அமசியா பட்டத்திற்குவந்தான். அமசியா

ஸ்திரமும் ஜாக்கிரதையுமுள்ள மனுஷனுயிருந்து யூதாவின் அதிர்ஷ்டநஷ்டங்களை நிவர்த்திசெய்யப் பிரயாசப்பட்டான். 2 ராஜாக்களில் (xiv.3–4) 'அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் தன் தகப்பனுகிய தாவீதைப்போலல்ல; தன் தகப்பனுகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்தான்' என்று சொல்லியிருக்கிறது. என்றாலும் மேடைகள் அகற்றப்படவில்லை, ஜனங்கள் இன்னுமதில் ஆராதித்துக்கொண்டிருந்தார்கள் என்ற குறைவும் சொல்லியிருக்கிறது. நாளாகமக்காரன் (2நாளா xxv.2) அவன் செம்மையானதைச் செய்தபோதிலும், 'முழு மனதோடல்ல' என்று தெளிவாய்க்காட்டுகிறார். (வச.14–16). நாளாகமக்காரன் யோவாசின் மார்க்கப் பிரஷ்டத்தையும் சகரியாவின் கொலையையும் எண்ணி தான் எழுதின புகழ்ச்சிக்குக் குறைவாய் 'தன் தகப்பனுகிய யோவாஸ் செய்தபடியெல்லாம் செய்தான்' என்று சொல்வில்லை

அவன் பட்டத்திற்கு வந்தவுடனே தன் தகப்பனைக் கொன்றவர்களைச் சங்கரித்தான். ஆனால் மிகுந்த இரக்கத்துடன் அவர்கள் பிள்ளைகளைத் தப்பவிட்டான். உபாகமம் xxiv.16ல் பிதாக்களுக்குப் பதில் பிள்ளைகள் சாகவேண்டாம், அவனவன் செய்த பாவத்திற்காக அவனவன் கொலைசெய்யப்படவேண்டும் என்றிருக்கிறது. யோசுவா ஆகானுடைய ஆண் பெண் மக்களைச் சங்கரித்தான். (யோசு vii.25). ஆனால் அப்போது உபாகமத்திற்குரிய பிரமாணம் ஸ்தாபிக்கப்படவில்லை; இப்போதோ ஒரு மேலான ஆவி தொடங்கிப் பரவினது. (யெரே.xxxi.30). அப்புறம் ஒரு பெரிய சேனையைச் சேகரித்தான். அதன் ஒருபாகம் வடராட்சியத்திலிருந்து வந்த நூற்றிருபது வெள்ளிதாலந்து சம்பளச்சேவகர். கர்த்தர் இஸ்ரவேலோடில்லாததால் ஒரு தீர்க்கதரிசி அவர்கள் சேவகம் தகாதென்று எச்சரிக்க, கொடுத்தபணம் நஷ்டமாகுதே என்று சங்கடப்பட்டபோதிலும் அவர்களை அனுப்பிவிட்டான். அவர்கள் கோபத்துடன் திரும்பினார்கள்.

யோராம் அரசன் காலமுதல் ஏதோமியர் தன்னரசாகி யூதாவின் தென்பாகத்தில் எப்போதும் தொந்தரவு கொடுத்துக்கொண்டிருந்தார்கள். (ஆமோஸ் i.11) ஓயாமல் இப்படிப் 'பீறிக்கொண்டிருப்பதை' அடக்குவதற்கு அமசியா தீர்மானித்தான். சவக்கடலுக்குத் தெற்கேயிருந்த உப்பு பள்ளத்தாக்கிலே பெரிய வெற்றி அடைந்தான். அதில் பதினாயிரம்பேரைச் சங்கரித்தான். ஏதோமியர் கன்மலையின் பிளப்பிலே ஒரு பிரதான நகரத்தைக் கட்டியிருந்தார்கள். அது சேலா அல்லது கன்மலையென்றும் பிற்காலத்தில் பெத்ரா என்றும் அழைக்கப்பட்டது. அது அரணான இடம். ஒபதியா தீர்க்கதரிசி அதை ஏதோமின் பெருமை என்றும் இதில் யார் எங்களை அசைக்கக்கூடும் என்று சொல்வதுமான இடம் என்று சொல்லுகிறான். (ஒபேத் i 3). அமசியா அதைப் பிடித்துக்கொண்டான். அவன் சிறைபிடித்த பதினாயிரம் பேரும் அப்பட்டணத்திற்குள்ளிருந்த சேனை. அப்படிப்பட்ட பட்டணத்தை எதிர்த்துப் போர்செய்து பிடித்துக்கொள்வது மகா சிரேஷ்டமான வெற்றி. அந்த ஸ்தலத்தை அமசியா 'தேவனால் கீட்ப்படுத்தப்பட்டது' என்றர்த்தங்கொள்ளும் ஜொக்தியேல் என்று பேரிட்டுக் களிகூர்ந்துகொண்டாடினான். அப்புறம் அக்காலத்து மிலேச்ச வழக்கப்பிரகாரம், அந்தச் சிறைகளை தங்கள் மலைமேலிருந்து கீழே தள்ளும்படி கட்டளையிட்டான். அப்படியே அவர்கள் மடிந்தார்கள்.

இதற்குள்ளாக அனுப்பிவிடப்பட்ட சம்பளச் சேவகர் தங்கள் வழியிலே யூதாவின் பட்டணங்களைத் தாக்கி அவைகளுக்குள் மூவாயிரம் மனுஷரைச் சங்கரித்து மிகுந்த கொள்ளைப் பொருட்களையும் கைப்பற்றினார்கள். அமசியா தகுந்த ஆலோசனைசெய்து இஸ்ரவேலரசனாகிய யோவாசிடத்தில் இதற்குத் தகுந்த நிவர்த்திசெய்யவேண்டுமென்று கேட்டான். அவன் கவனியாததால் போருண்டாயிற்று போர் முடிந்தபின் ஏதோமின் தேவர்களைக் கொண்டுவந்து தலைவணங்கி அவைகளுக்குத் தூபங்காட்டினான். ஒரு தீர்க்கதரிசி வந்து அவனைக் கடிந்துகொள்ள, நீ எனக்கு ஆலோசனைக்காரனா என்று கேட்டான். தீர்க்கதரிசி, இந்த உன் பாவத்திற்காகத் தேவன் உன்னை அழிக்கத் தீர்மானித்திருக்கிறார் என்றான். இப்படிக் கடிந்துகொண்டும் அவன் அதைக் கவனிக்கவில்லை.

அப்போது அமசியா யோவாசிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பி 'நம்முடைய சாமர்த்தியத்தைப் பார்ப்போம் வா' என்று சொல்லச்சொன்னான். இது மிகுந்த மூடத்தனம். யூதாவைவிட இஸ்ரவேல் ராட்சியம் வல்லமையுள்ளதாயிருந்தது. சீரியாவினால் இரண்டு ராட்சியங்களும் மோசப்படுவதால், ஐக்யபேதமல்ல, ஐக்யமே கையாடவேண்டிய அரசமுறையென்று உணர்ந்து நவீனமான விகடாலங்காரத்துடன் 'பின்வருமாறு சொன்னான். 'லீபனோனிலுள்ள முட்செடியானது கேதுருமரத்தை நோக்கி, நீ உன் மகளை என் மகனுக்கு மனைவியாக விவாகஞ்செய்துகொடு என்று சொல்லச் சொல்லிற்று. ஆனால் லீபனோனிலுள்ள ஒரு காட்டு மிருகம் அந்த வழிபோகையில் ஓடி அந்த முட்செடியை மிதித்துப்போட்டது. நீ ஏதோமியரை முறிய அடித்ததினால் உன் இருதயம் உன்னைக் கர்வம் கொள்ளப்பண்ணினது; நீ பெருமை பாராட்டிக்கொண்டு உன் வீட்டிலே இரு; நீயும் உன்னோடேகூட யூதாவும் விழும்படிக்குப் பொல்லாப்பைத் தேடிக்கொள்வானேன்' என்றான். (2நாளா. xxv. 18–19). அமசியா இந்த விவேகமான புத்திமதியை அலக்ஷியம் செய்தான். ஏதோமின் தேவர்களைத் தேடினதினிமித்தம் கர்த்தர் அவனைத் தண்டிக்கத் தீர்மானித்தார். ஆகவே இரண்டு அரசர்களும் தங்கள் சாமர்த்தியத்தைப் பார்த்தார்கள். யூதா முறியடிக்கப்பட்டது. யோவாஸ் அமசியாவைச் சிறையாக்கி எருசலேமுக்குக் கொண்டுவந்தான். எருசலேமின் அலங்கத்தில் திறப்புண்டாக்கி, ஓபேத்வசம் இருந்த தேவனுடைய ஆலயத்து பொன் வெள்ளிப் பாத்திரங்களைக் கைப்பற்றிக்கொண்டு அமசியாவை, தன் மூடத்தனத்தைத் தியானிக்கும்படி அவனுடைய வீட்டில் இருத்திவிட்டு சமாரியாவுக்குத் திரும்பினான். போகுமுன் யூதா மனுஷர் நன்னடக்கையாக நடந்துகொள்ளத்தக்கதாக தகுந்த பிணையாளிகளையும் பிடித்துக்கொண்டு போனான். பிணையாளிகள் பிடித்துக்கொண்டுபோனதைப்பற்றி இப்போதுதான் முதல்தடவையாக வாசிக்கிறோம். இந்த அவமானத்திற்குப்பின் அமசியா பதினைந்து வருஷமிருந்தான். கடைசியாக சிலமனுஷர் அவனுக்குவிரோதமாய் சதி ஆலோசனை பண்ணினதை அறிந்து லாகீசுக்கு ஓடிப்போக, அவர்கள் அங்கும் அவனைப் பின்தொடர்ந்து கொன்றுபோட்டார்கள். தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களோடு அடக்கம்பண்ணப்பட்டான்.

அவனுடைய குமாரன் உசியாவை (அசரியா மறுபேர்) அவன் ஸ்தானத்தில் அரசனாகத் தெரிந்துகொண்டார்கள். அவன் பதினாறு வயசாயிருந்தான்.

223489 ... 600 008.

உசியா. (2 ராஜா. xv. 1–7; 2 நாளா. xxvi. 1–23).

அசரியா பதினாறு வயசாயிருந்து தன் தகப்பன் அமத்சியாவுக்குப் பின் பட்டத்திற்கு வந்தான். உசியா என்பது அவனுக்கு இன்னொருபேர். அசரியாவுக்கு எகோவாவின் உதவி என்றர்த்தம்; 'உசியாவுக்கு எகோவாவின் வல்லமை' என்றர்த்தம். அவன் சாதாரணமாய்ப் பிந்தின பேரால் அழைக்கப்பட்டான். விசேஷமாய் நாளாகமத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் அப்படி அழைக்கப்பட்டிருக்கிறான். தன் தகப்பனைப்போல சத்துவமும் காரியங்களை ஒழுங்குபடுத்துவதில் அவனைவிட வல்லவனுமிருந்தான். இளவயசில் அவனுக்கு ஆசிரியனாயிருந்தது சகரியா. 'இவனைப்பற்றி வேறு யாதொன்றும் தெரியவில்லை. இவன் கர்த்தரைப் பற்றிய பயத்தில் அவனுக்குப் போதனை செய்தான்.' இந்த ஞானமான ஆசிரியனுடைய போதனையைப் பின்பற்றின நாளெல்லாம் அரசன் வெகுவாய்த் தழைத்து ஞானம் நிறைந்த அதிகாரியாயிருந்தான். அவன் தகப்பன் ஏதோமை முறியடித்துக் கீழ்ப்படுத்தியிருந்தான். என்றாலும் இன்னும் விசேஷித்த காரியங்கள் செய்ய வேண்டியிருந்தது. ஆகையால் அவன் முதலாவது செய்தது, அகாபாகுடாவிலிருந்த ஏலாத்தைப்பிடித்து அதை அரண்படுத்தினான். இது அன்னிய தேசத்து வர்த்தகத்துக்கும் வியாபாரங்களுக்கும் மிக அனுகூலமாயிருந்தது. இதற்காக வியாபாரக் கப்பல்களையும் செய்தான். இது ஜாதியாரின் செல்வத்தை அதிகரித்தது. (ஏசா. ii. 7–16). ஆனால் இது ஜனங்கள் கூட்டுறவு செய்யும் விஷயத்தில் இடுக்கணை விளைத்தது. ஐசுவரியவான்கள் ஏழைகளை ஒடுக்க இடம்பண்ணினது. (ஏசா. v. 8; ஓசி. xii. 7; மீகா. ii. 2).

ஓயாமல் தொந்தரவு கொடுக்கும் பெலிஸ்தியரை அவன் தண்டித்து அவர்கள் கோட்டைகளை இடித்துத் தரையோடு தரையாக்கினான். அப்புறம் அவர்கள் நாட்டில் எபிரேயரைக் குடியேற்றி இப்படியாக தங்கள் புராதன விரோதிகள் தலையெடுக்காதபடிச் செய்தான். ஆகவே காரியாதிகளை யோசபாத் காலத்தில் இருந்த பிரகாரம் புதுப்பித்தான். (2 நாளா. xvii. 11). அப்புறம் அவன் கீழ்ப்படுத்தினது அரபியருடைய கோத்திரங்கள். இவர்களுக்குப் பெலிஸ்தியர் உதவிசெய்தார்கள். யோராம் அரசனை முறியடித்து தேவாலயத்தையும் அரமனையையும் கொள்ளையடித்தவர்கள். (2 நாளா. xxi. 16, 17). இவர்களைக் கீழ்ப்படுத்தினது மிக அவசியமாயிருந்தது. இதனால்தான் ஏலாத் துறைமுகப்பட்டணத்திற்கு சுகபத்ரமாய்ப் போய்வரலாம். அப்புறம் தேசத்திற்குக் கிழக்கேயுள்ள காரியாதிகளைக் கவனித்து அங்குள்ள ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி அவர்களைக் கப்பம் கட்டுகிறவர்களாக்கினான். (2 நாளா. xxvi. 8; ஏசா. xvi. 1). அந்த நாடுகள் தன் மந்தைகள்போய் மேயத்தக்க தழைத்த புல் தலங்கள் உள்ளதாயுமிருந்தது. ஆகவே, எப்பக்கத்திலும் யூதாவின் சத்ருக்கள் கீழ்ப்படுத்தப்பட்டார்கள். எகிப்தின் எல்லைகள் வரை உசியாவின் பேர் பிரஸ்தாபமாயிற்று. அவன் எருசலேமின் மதில்களை பழுதுபார்த்து, அவைகளின் வாசல்களின் மேலும் மூலைகள் மேலும் கோபுரங்களைக் கட்டினான். இவைகளில் ஆயுதங்களும் போர்க்கவசமும் தரித்த சேவகர் காவலிருந்தார்கள். அவர்களிடத்தில் உண்டி வேலும் மற்றும் யந்திரங்களுமிருந்தது. அவன் தேசத்திற்குரிய நாட்டுப்புறங்களை நெகிழவிடவில்லை. அங்கும் கோபுரங்களைக் கட்டினான். பயிரிடுகிறவர்களுக்காகவும் மந்தை மேய்க்கிறவர்களுக்காகவும் அநேக கிணறுகளை வெட்டினான். ஈராயிரத்து அறுநூறு மனுஷரான

பராக்ரமசாலிகளை தன் சேனையாக ஸ்தாபித்தான். இது தாவீதின் பேர்போன அறுநூறு பராக்ரமசாலிகள் உள்ள சேனையைப் புதுப்பித்தலே தவிரவேறல்ல. அவன் நாடுகளை ஜெயித்தான், ராணுவ விஷயத்தில் வல்லவனானன். ஜனங்கள் சுகபத்ரமாய் வாழ்ந்தார்கள். அவர்கள் மந்தைகளுக்குத் திரளான புல் தலங்களிருந்தது. அரசனும் வேளாண்மைப் பிரியனாயிருந்தான். அரசன் தன் கீர்த்திப்பிரதாபத்தால் பெருமை கொண்டபோது அவனுக்குப் பெரிய இடுக்கண் வந்துநேரிட்டது. பொன் பலிப்பீடத்தில் தூபங்காட்டும் நோக்கமாய் ஆலயத்திற்குள் பிரவேசித்தான். பிரதான ஆசாரியனாகிய அசரியா அதைத் தடுத்தான். அரசன் கோபமடைந்து ஒரு தூபகலசத்தை யெடுத்து தூபங்காட்டத் தொடங்கினான். அப்போது, ஜொசீபஸ் சொல்லுகிறபடி, ஒரு பூமி அதிர்ச்சி பட்டணத்தை அதிரச்செய்து ஆலயத்தின் கூரையிலும் ஒரு பிளப்பை உண்டாக்கிற்று. அரசன்மேலே நோக்கிப் பார்த்தபோது அவனுடைய நெற்றியில் குஷ்டத்தின் அடையாளம் தோன்றினது. அரசன் ஆலயத்தை விட்டு வெளியேறி சாகும்வரையில் மற்ற மனுஷரை விட்டு விலகி தனிவீட்டில் குடியிருந்தான். அவன் ராஜகல்லறைகளில் அல்ல பக்கத்து வயல்வெளியில் அடக்கம்பண்ணப்பட்டான். 'அவன் குஷ்டரோகி' என்று ஜனங்கள் சொன்னார்கள்.

இப்போது நாம் கவனிக்கவேண்டியது யூதாவின் பெரிய தீர்க்கத்தரிசிகளின் காலத்தைப்பற்றி. அவர்களில் யோவேல் முதலாவது; அதற்குப்பின் ஏசாயாவும் மீகாவும் தொடர்ந்துவருகிறார்கள். தீர்க்கத்தரிசிகள் எழுதினவை ராஜாக்களுக்கும் நாளாகமத்துக்கும் அவசியமான அனுபந்தமாயிருக்கிறது. இரண்டையும் சம்பந்தப்படுத்தி வாசித்தால் ராஜாங்கத்திற்கும் வேதமார்க்கத்திற்குமுரிய முழுச்சரித்திரமும் தெளிவாய் விளங்கும். யோவேலின் வார்த்தைகள், ஜாதியாரின் ஸ்திதியின் பேரிலும் அவர்களுடைய பாவங்களின் மேலும் ஒரு மந்தரமான வெளிச்சம் காட்டுகிறது. கர்த்தர் தண்டனையாக அனுப்பின வெட்டுக்கிளிகளின் வாதையையும்[1] நீர்வரட்சியையும் தீர்க்கத்தரிசி விவரிக்கிறான். மனந்திரும்புதலுக்கு ஏவுகிற பயங்கரமான தண்டனை. அது, மனசைக்கவரத்தக்க வார்த்தைகளால் விவரிக்கப்பட்டிருக்கிறது. (யோவேல் i. 2–20). மலைகளின் மேலுள்ள அடர்த்தியான மேகங்கள் வெளிச்சத்தை மறைக்கிறதுபோல திடீரென்று கிழக்கே ஆகாயத்தின் வெளிச்சம் இருண்டது. வெட்டுக்கிளிகள் ஒரு பெரிய சேனைபோல புறப்பட்டது. கட்டளையின் ஒரே வார்த்தையால் ஏகமனசாய் ஏவப்பட்டுப் புறப்பட்டது போல் தோன்றினது. (யோவேல் ii. 7). குதிரை ரதங்களில் மலையிலிருந்து மலைமேல் பறந்து குதித்ததுபோலிருந்தது. வரிசை பிசகாமல் பட்டணங்களின் மதில்கள் மேலேறி வீடுகளின் ஜன்னல்கள் வழியாய்ப் பிரவேசித்தது. இந்திர நீலமான திராட்சச்செடி, பச்சையான அத்திமரம், வெளிறின ஒலிவமரம், சிவப்பான மாதளை, பொன்னிறமான தானியம், அசைவாடும் பேரிச்சம், பரிமளிக்கிற கொடிமாதளை இவையெல்லாம் அவைகளுக்குமுன் இல்லாமற் போயிற்று. (யோவேல் i. 12). அவைகளுக்கு முன்னாக தேசம் ஏதேன் தோட்டத்தைப் போலவும் அவைகளுக்குப் பின்னாகப் பாழான வனாந்தரத்

[1] இது சத்ருவின் சேனைபடையெடுத்தலைச் சுட்டுகிற ஒரு ஒட்டுவமை என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியானாலது சரியான சத்துவத்துடன் மனந்திரும்புதலுக்கு ஏவியிராது. அது உண்மையாய் வெட்டுக்கிளிவாதை என்பதே சரி.

தைப் போலவும் இருக்கும். அப்புறம் மனந்திரும்புதலுக்கு ஏவப்படுகிறூர் கள்: கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிப்பவன் யார்? 'நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல' [1]உங்கள் இருதயத் தைக் கிழித்து உங்கள் தேவனுகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும் மனஉருக்கமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறூர். (யோவேல் ii 13). இந்த எழுப்புத லும் ஞானமுமான ஆலோசனையைக் கேட்டு திரளான ஜனங்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புப் பெற்றுக்கொள்ள கூடிவந்தார்கள். எவரும் வராமலிருக்கவில்லை. பெரியோரும் சிறியோரும், மாப்பிள்ளையும் பெண்ணும் கர்த்தருடைய பணிவிடைக்காரராகிய ஆசாரியரும் பக்திவினய மான உபவாசத்தால் தங்கள் மனந்திரும்புதலைக் காட்டினூர்கள். மனந்திரும் புதலில்லாவிட்டால் தபசுவீண். அப்புறம் கர்த்தர் சீயோனில் வாசமாயிருப் பதால் மகா க்ஷேமமுண்டாகும் என்ற உறுதியான செய்திபிறந்தது.

உசியா அரசன் மரித்த வருஷத்தில் ஏசாயா தீர்க்கதரிசனம் சொல்ல அழைக்கப்பட்டான். அவனுடைய புஸ்தகத்தின் முந்தின அதிகாரங்கள் இந் தக் காலத்தைப்பற்றியது.

யோதாம். (2 ராஜா xv.32–8; 2 நாளா.xxvii. 1–9).

உசியாவின் குமாரன் யோதாம் அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந் தான். அவன் பதினூறுவருஷம் அரசாண்டான். இதில் சில வருஷங் களில் தகப்பன் குஷ்டரோகியாயிருந்ததால் அவனுடைய பிரதிநிதியா யிருந்து அரசாண்டான். 'அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையான தைச் செய்தான்; தன் தகப்பனுகிய உசியா செய்தபடியெல்லாம் செய் தான்'. ஆனுல் தன்தகப்பன் செய்ததுபோல் ஆசாரிய உத்யோகத்தில் தலை யிடவில்லை.

ராட்சியத்தின் புறக்காரியங்கள் விஷயத்தில் யோதாம் அம்மோனியரை முறியடித்து அவர்களைத் திரளான கப்பங்கட்டப்பண்ணினூன். இஸ்ரவே லின் அரசனும் சீரியாவினரசனும் அவனுக்கு விரோதமாய்ச்செய்த கட்டுப் பாட்டினுல் லபித்தவைகள் அடுத்த அரசாட்சிக்குரியது.

அரசன் கட்டடவிஷயங்களில் வெகு சிரத்தையெடுத்தான். ஆலயத் தின் வடக்கேயுள்ள உயர்ந்த வாசலைக்கட்டினூன். ஆலயம் கட்டப்பட்டி ருந்த மலையின் தென்பக்கத்தில் அனேகக் கட்டடங்களைக் கட்டினூன். அப் புறம் தன் ஜனங்களின் பாதுகாப்புக்காக தான் கட்டின புதுப்பட்ட ணங்களில் கோட்டைகளைக் கட்டினூன். தேசம் வெளிப்பார்வைக்குச் செழிப்பும் செல்வமுமாயிருந்தது. ஆனுல் ஜனங்கள் துன்மார்க்கமும் அவ பக்தியுமுள்ளவர்களாயிருந்தார்கள். 'ஜனங்கள் இன்னும் தங்களைக் கெடுத் துக்கொண்டிருந்தார்கள்' (2 நாளா.xxvii.2). என்றும் 'மேடைகள் அகற்றப் படவில்லை. ஜனங்கள் இன்னும் மேடைகளின்மேல் பலியிட்டு தூபங் காட்டிவந்தார்கள்'. (2 ராஜா xv.35). என்றும் சொல்லியிருக்கிறது. மேல் வகுப்பு ஜனங்களும் முக்கியமாய் எருசலேமிலுள்ள ஸ்திரீகளும் பெரும்

[1] கிழிக்கப்பட்ட வஸ்திரம் முன்னடையாளமான அர்த்தமுள்ளது. ஆனுல் தேவனுக்கேற்கும் இருதயம் நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான ஆவி. கர்த்தர் அதைப் புறக்கணியார். (சங். 1 i. 17). கர்த்தர் 'பெரிய காரியங்களைச்' செய்வார். (யோவேல் ii. 21).

போகநுகர்ச்சிக்கு இடம்கொடுத்து அந்நியருடைய பழக்க ஒழுக்கங்களையும் தேவர்களையும் பின்பற்றினர்கள். 'அவர்கள் தேசம் விக்ரகங்களால் நிறைந்திருக்கிறது' என்று ஏசாயா சொல்லுகிருன். (ஏசா.ii.8). தேசம் இப்படிப் பட்ட தீமையான ஸ்திதியிலிருக்கும்போது அரசன் மரித்தான். அவனை எருசலேமில் அவன் பிதாக்களோடு அடக்கம்பண்ணினர்கள்.

ஆகாஸ். (2 ராஜா.xvi.1–20; 2 நாளா.xxviii.1–27).

ஆகாஸ் பட்டத்திற்குவந்தபோது இருபது வயசாயிருந்து பதினறுவருஷம் அரசாண்டான். அவன் புத்தியற்று சத்துவங்கெட்ட அவபக்தியுள்ள அரசன். பிரஜைகளின் யோகக்ஷேமத்தைப்பற்றிக் கவையற்றவன். ஜனங்களுடைய தீயவழிகளை அடக்க அவனல் ஏலாமற்போயிற்று. தேசம் விக்ராராதனையால் நிறைந்திருந்தது. பிலிஸ்தியாவிலிருந்து திரளான மாந்திரிகரும் குறிகாரரும் வந்தார்கள். 'தேசத்தில் அறிவாளிகள், ராஜதர்ம சாஸ்திரமறிந்தவர்கள், மனேசக்தியுள்ளவர்கள் இல்லை என்று ஏசாயா சொல்வதால் தெரிகிறது. எளியவர்கள் ஒருபக்கத்திலும் இன்னெருபக்கத்தில் எதிரிடை செய்கிறவர்களுமிருந்தார்கள். தேசம் ஏற்கெனவே அழிவுநிறைந்ததாயிருந்தது. அதற்குமேல் இன்னும் வரக்காத்திருந்த அழிவை விலக்குவதற்கு எந்தவிதப் பிரயத்தனமும்பண்ண எவ்விதமான மனுஷனுமில்லை. அப்படிப்பட்ட நம்பிக்கையற்ற ஏக்கம் தேசத்தில் நிறைந்திருந்தது'. அரசன் விக்ரகத்தொழும்பரான கூட்டத்தாரின் செல்வாக்குக்குள் அகப்பட்டுக் கொண்டு தானும் மேடைகளிலும் மரங்களின்கீழும் பலிசெலுத்தினன். பயங்கரமான மோளோக்வணக்கமும் கொண்டுவரப்பட்டது. அரசனும் தன் குமாரனை அதில் அக்கினித்தகனம்பண்ணினன். ஜனங்கள் வானசேனைகளுக்கும் பொன் வெள்ளி விக்ரங்களுக்கும் ஆராதனைசெய்தார்கள். அரசன் சாலமோனுடைய பலிப்பீடம் நின்ற இடத்திலே ஒரு அஞ்ஞான பலிப்பீடத்தைக்கட்டி ஆலயத்தின் கதவுகளைப்பூட்டி ஏகோவா வணக்கத்தை நிறுத்திப்போட்டான். (2 நாளா.xxviii.24). அவன் சீரியரால் முறியடிக்கப்பட்டபோது சீரியராஜாக்களின் தெய்வங்கள் அவர்களுக்குத் துணைசெய்கிறபடியால் அவர்கள் எனக்கும் துணைசெய்ய அவர்களுக்குப் பலியிடுவேன் என்றான்'. (2 நாளா.xxviii.23).

அரசன் பட்டத்திற்கு வந்தவுடனே சீரியா இஸ்ரவேல் அரசர்கள் அசிரியாவுக்கு விரோதமாய்ப் பண்ணும் கட்டுப்பாட்டிலே சேர்ந்துகொள்ள அவனையும் கேட்டுக்கொண்டார்கள். அவன் விருப்பமற்று மறுத்துவிட்டதால் அந்த இரண்டு அரசரும் யூதாவின்மேல் படையெடுத்தார்கள். ரேத்சீன் ஏலாத்தென்னும் துறைமுகத்தைப் பிடித்துக்கொண்டான். எருசலேமும் முற்றிகையிடப்பட்டது. ஆகாசை நீக்கி அவன் ஸ்தானத்தில் வேருெருவனை அரசனுக்க அந்த இரண்டு அரசரும் நோக்கங்கொண்டிருந்தார்கள். பெக்கா யூதாவை முறியடித்து இருநூறுயிரம் புருஷர், ஸ்திரிகள், பிள்ளைகளைச் சிறைபிடித்துச் சமாரியாவுக்குக் கொண்டுபோனன் ஆனல் அங்கிருந்த ஓதேத் என்னும் ஒரு தீர்க்கதரிசி அவர்களுக்காகப் பரிந்துபேச, அவர்களை எவ்விதத்திலும் பட்சமாய் நடத்தி எரிகோமட்டும் கொண்டுபோய்விட்டார்கள். அங்கிருந்து அவர்கள் தங்கள் வீடுகளுக்குப் போனர்கள். இந்தக்காரியம் ஆதிகாலத்து உருக்கமான பரிதாபத்தைக் காட்டுவதுமன்றி இஸ்ரவேலிலும்

ஒரு தீர்க்கதரிசியின் வார்த்தை சத்துவமுள்ளதாயிருந்ததென்று காட்டுகிறது. 2 நாளா. xxviii. 9–15–ல் இதைப்பற்றி மனசை இளக்கத்தக்கதாய்ச் சொல்லியிருக்கிறது. ஏதோமியர் தென்பாகத்தில் படையெடுத்து அநேக ஊர்களைப் பிடித்துக்கொண்டார்கள். இதைப்பற்றி மகா துயரமாய் ஏசாயா சொல்லுகிறான், 'உங்கள் தேசம் பாழாயிருக்கிறது: உங்கள் பட்டணங்கள் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது: உங்கள் நாட்டை அந்நியர் உங்கள் கண்களுக்கு முன்பாக பட்சிக்கிறார்கள். அது அந்நியரால் கவிழ்க்கப்பட்ட பாழுந்தேசம்போலிருக்கிறது. சீயோன் குமாரத்தி திராட்சததோட்டத்திலுள்ள ஒரு குச்சுபோலவும், வெள்ளரித்தோட்டத்திலுள்ள ஒரு குடிசைபோலவும் முற்றிக்கைபோடப்பட்ட ஒருபட்டணம் போலவும் மீந்திருக்கிறாள்.' (ஏசா. i. 7. 8). இப்படியிருக்க, 'ராஜாவின் இருதயமும் அவன் ஜனத்தின் இருதயமும் காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறதுபோல அசைந்தது' (ஏசா. vii. 2). ஆச்சரியமல்ல.

அரசன் இவ்விதமாய்க் கலக்கமடைந்து, அசிரியாவின் அரசனாகிய திக்லாத்பிலேசருடைய உதவியை நாடினான். ஏசாயா அரசனின் நோக்கத்தை அறிந்து சேயீர்யாசூப் என்ற தன் சிறு புத்ரனையும் இட்டுக்கொண்டு பட்டணத்திற்கு வெளியே அரசனைச் சந்தித்து அவனுடைய சத்துருக்கள் கீழ்ப்படுத்தப்படுவார்கள், ஆகையால் 'நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப்பார்' என்றும், 'நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெறமாட்டீர்கள்' என்றும் எச்சரித்தான். (ஏசா. vii. 3–9). இதற்கு அரசன் செவிகொடுத்தானில்லை. அக்காலத்தில் எருசலேமில் இரண்டு பிரிவார் இருந்தார்கள். ஒருபக்கம் எகிப்தின் உதவியையும் மற்றப்பக்கம் அசிரியாவின் உதவியையும் நாடினது. அரசன் பிந்தின ஆலோசனைக்கு இசைந்து அசிரிய அரசனுடைய துணையைக் கேட்டு 'நானுமதடியானும் உமது குமாரனுமாயிருக்கிறேன்; நீர் வந்து, எனக்கு விரோதமாயெழும்பின சீரியாராஜாவின் கைக்கும் இஸ்ரவேலராஜாவின் கைக்கும் என்னை நீங்கலாக்கிவிடும்' என்றான். (2 ராஜா xvi. 7). ஆலயத்திலும் அரமனையிலுமிருந்து மிகுந்த திரவியமெடுத்து ஸ்தானாபதிகள் வசம் அவனுக்கு வெகுமதியாய் அனுப்பப்பட்டது. அப்போது திக்லாத்பிலேசர் சீரியாவுக்கு விரோதமாய்வந்து அதன் அரசன் ரேத்சீனைக்கொன்று அநேகரைச் சிறையாகக்கொண்டுபோனான். அப்போது அசிரிய அரசனுடைய உத்தரவுப்பிரகாரம் பிடிக்கப்பட்ட தமஸ்குப்பட்டணத்திற்குப்போய் அங்கே ஒரு பலிப்பீடத்தைக்கண்டு சந்தோஷத்துடன் பிரமித்தான்.

அவனுடைய லக்ஷணம் வெகுதாழ்வாயிருந்தபடியால் இந்தப்புது உடபடிக்கையால் வரக்கூடிய மோசங்களை கிரகிக்கக்கூடாதவனாயிருந்தான். தன் பிரயாணத்தில் தான்கண்ட மார்க்கவினோதங்களினாலும் சித்திரவினோதங்களினாலும் தன் சிரசு நிறைந்தவனாய் எருசலேமுக்குத் திரும்பினான். தான் கண்ட ஒரு பலிப்பீடத்தின் மாதிரியை பிரதான ஆசாரியனாகிய உரியாவுக்கனுப்பி அதைப்போல ஒன்று ஆலயத்துக்கு உண்டுபண்ணும்படி உத்தரவுபண்ணினான்.

1. சேயீர் யாசூப் என்ற பேரினர்த்தம் 'மீந்த ஒரு சொற்பம் திரும்பும்.' அது ஒரு முன்னடையாளம். ஆபத்துக்கடந்துபோனபின் மீந்த நீதியான ஒரு சொற்பம் ரட்சிக்கப்படும். அரசனுக்கு எழுப்புதலுண்டாகும்படி இவனுடைய சமுகம் அவனுக்குக் கடாட்சிக்கப்பட்டது.

வெண்கலப் பலிப்பீடம் அதன் ஸ்தானத்திலிருந்து கடத்தப்பட்டு அதன் ஸ்தானத்தில் புதிய பலிப்பீடத்தை ஸ்தாபித்து அதன்மேல் பலவகை பலிகளையும் செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரசன்தானுமே அதில் பலிசெலுத்தினன். பிரதான ஆசாரியன் இப்படி இணங்கிப்போனது மிகதுயரமான காரியம். ஆசாரியத்துவம் எவ்வளவாய்த் தாழ்ந்து குன்றிபபோனது என்பதை இது காட்டுகிறது. அவன் ஆலயத்திற்கு ஒரு புது வாசலையும் உண்டுபண்ணினன். அது மாட்சிமையில் முந்தினதைவிடக் குறைவானது. திக்லாத்பிலேசருடைய ஸ்தானதிபதிகளின் ஆசையை எழுப்பிவிடாதபடி இப்படிச்செய்தான். 'அசிரியா ராஜாவினிமித்தம்' இப்படிச்செய்தான் என்று சொல்லியிருக்கிறது. அரசன் ஆலயத்தின் பணிமுட்டுகளை எடுத்து நகரத்தின் பல இடங்களில் பலிப்பீடங்களைச் செய்தான். அவைகளிலெல்லாம் அஞ்ஞானத்தேவர்களுக்குத் தூபங்காட்டப்பட்டது. நாட்கள் வரவர இருளடைய, வரவேண்டிய அழிவு சமீபித்தது. ஆனல் ஆகாஸ் மிகுந்த அற்பனும் மருட்பேயனுமாயிருந்தபடியால் ஒன்றையும் ஆய்ந்து கவனிக்கக்கூடியவனல்ல. இப்படிப்பட்ட ஸ்திதியில் ஆகாஸ் மடிந்தான். அவனை அவனுடைய பிதாக்களின் கல்லறையில் அடக்கம் பண்ணமல் தாவீதின் நகரத்தில் தன் பிதாக்களோடு அடக்கப்பண்ணப்பட்டான். (2நாளா.xxviii.27. 2ராஜா.xvi 20).

யூதஜாதியின் நிலைமையைப்பற்றி தீர்க்கதரிசிகள் சொல்லியிருப்பதையும் ஏசாயாவுக்கும் அகசியாவுக்குமிருந்த சம்பந்தத்தைப்பற்றியும் கவனிபபது அவசியம்.

தீர்க்கதரிசிகளெல்லாரிலும் ஏசாயா பெரியவன். யூதராட்சிய சரித்திரத்தின் மோசமான தருவாயில் தன் மாட்சிமையான லக்ஷணத்தினலும், துரைத்தனவிஷயமாய்ச் சொன்ன ஞானமான ஆலோசனையினலும் தன் திருப்பணிவிடையில் காட்டின ஊக்கத்தினலும் தன் தேசத்திற்கு மேன்மையான பணிவிடைசெய்தான்.

ஏசாயா சஞ்சரித்த இடம் எருசலேம். மேல்வகுப்பினர் வம்சங்களோடு சம்பந்தப்பட்டவன். அவனுடைய இஷ்டர்களுக்குள் அரசரும் பிரபுக்களுமுண்டு. ராஜசபை நடபடிக்கைகளையும் துரைத்தனவிஷயங்களையும் நன்ருய் அறிந்திருந்தான். 'தீர்க்கத்தரிசனம் ராஜாங்கத்திற்கு விரோதமானதல்ல; ராஜாங்கம் தன் கடமைகளை உண்மையாய்ச் செய்யும்படி போதிப்பதற்கான திவ்ய ஏற்பாடாம்'. ஆமோசும் ஓசியாவும் இஸ்ரவேல் ராட்சியத்தில் செய்த சிரேஷ்டமான வேலையை ஏசாயா நன்ருய் அறிந்திருந்தான். வேதமார்க்கம், சன்மார்க்கம், ஜனசாரக்கூட்டுறவு முதலிய விஷயங்களிலெல்லாம் ஏசாயாவின் அபிப்பிராயம் ஆமோஸ், ஓசியாத்தீர்க்கதரிசிகளின் எண்ணங்களுக்கு ஒத்ததாயிருந்தது. 'அக்காலத்திற்கு, விசேஷமாய் யூதராட்சியத்திற்கு ஆவிக்குரிய ஆசாரியத்வம், ஏசாயாவில் பரிசுத்தமாயும் பரிபூரணமாயும் விளங்கினது. அதன் சத்வமும் வாசக நடையும் மகாவல்லமையும் மாட்சிமைபொருந்தியதாயுமிருந்தது. அவனுடைய வார்த்தைகள், எல்லா ஸ்திதியிலுமுள்ள முரட்டாட்டக்காரர் பேரிலும், அரசரானலும், பிரபுக்களானலும் சாமானியரானலும் தருணங்கொண்டொழுகும் ஆசாரியரானலும் சகலர் பேரிலும் இடிபோல முழங்கினது: மனுஷிகராஜாங்கத்தை, மிகவாய் பிசகினபோதிலும், தாவீதின் ராஜாங்கத்தை அழிக்க அவன் விரும்பவில்லை;

ஆவியினால் ஏவப்பட்ட அவனுடைய நோக்கு மனுஷீகத்திற்குரிய சகலமும் பரிபூரணமடையும்போது, தேவனுடைய மாட்சிமையான ராட்சியத்திற்கும் மெய்யான அரசனுக்கும் தவருமல் வந்து சேரவேண்டுமென்பதே'. என்று பெரிய சரித்திரக்காரனுகிய ஈவால்ற் ஏசாயாவைப்பற்றிச் சொல்லுகிருன்.

உசியா அரசன் மரித்தவருஷத்தில் ஏசாயா அழைக்கப்பட்டது மிகவும் கவனிக்கத்தக்க சம்பவம். ஒருநாள் அவன் தேவாலயத்திலிருக்கும்போது ஆலயம் அவனுடைய கண்ணுக்கு மங்க அதன் ஸ்தானத்தில் அதன் பொருளான உன்னத தேவாலயம் அவன் கண்ணுக்குத் தோன்றிற்று. மகாபரிசுத்த ஸ்தலத்தின் திரை ஒருபக்கம் இழுத்துவைக்கப்பட்டிருந்தது. தேவனுடைய சமுகத்திற்கடையாளமாகிய உடன்படிக்கைப் பெட்டிக்குப் பதிலாக ஒரு உன்னத சிம்மாசனத்தையும் அதன்மேல் கர்த்தர் உட்காரந்திருப்பதையும் அவன் கண்டான். அவருடைய மகிமை பூமியை நிரப்புகிறது போல அவருடைய வஸ்திரத்தின் தொங்கல் பரம ஆலயத்தை நிரப்பிற்று. சேராபின்கள்.

> சேனைகளின் தேவனுகிய கர்த்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்:
> பூமிமுழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது.

என்று பாடினுர்கள்.

இந்தக்காட்சியில் தான் விடுவிக்கவேண்டிய செய்தியின் மூலாதாரத்தொனியை அறிந்துகொண்டான்: அதாவது: கர்த்தர் எல்லார் பேரிலும், தீர்க்கதரிசியின் தேசத்திலும், அதன் ஜனங்கள் பேரிலும் அரசாளுகிருர் என்பதே.

தான் அபாத்ரன் என்ற எண்ணம் தீர்க்கதரிசியைக் கலங்கப்பண்ண தன் நியமுகத்தில் பிரவேசிக்கப் பயந்து 'நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்.' என்ருன். அப்போது ஒரு சேராபீன் பலிப்பீடத்தின் ஒரு நெருப்புத்தழலால் அவன் உதடுகளைத்தொட்டு 'இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினுல், உன் அக்ரமம் நீங்கி, உன் பாவம் நிவர்த்தியானது.' என்ருன். (ஏசா.vi.7). இப்படியாக ஏசாயா தன் பெரிய ஊழியத்திற்கு ஆயத்தம்பண்ணப்பட்டான்.

யூத ஜாதியாரின் ஜீவனை அனேக மோசங்கள் பயமுறுத்திக்கொண்டிருந்தது; தேவனுல்மாத்திரம் விடுதலையுண்டாகும் சகல வேதமார்க்கத்திற்கும் அஸ்திபாரம் இதுவே என்பதை ஏசாயா தெளிவாய்க்காட்டி 'நீங்கள் விசுவாசியாவிட்டால், ஸ்திரப்படமாட்டீர்கள்.' என்கிருன். 'தேவனையும் கண்ணுக்குப் புலப்படாத அவருடைய ஆவியின் வல்லமையையும் நன்மையையும் நம்புகிறவன்மாத்திரம், கண்ணுக்குப் புலப்படும் சத்துவங்களெல்லாம் அவனுக்கு விரோதமாய் அணிவகுக்கும்போது உறுதியாய் நிற்கக்கூடும்.' மீதியானவர்களாகிய சிலர் மாத்திரம் அப்படிச் செய்வார்கள். ஆனுல் பாவமான தலைமுறைகடந்தபின், ஒரு புதிய சந்ததி தோன்றும். 'அதன் மத்யஸ்தரும் அதிபதியும் தாவீதின் வம்சத்தின் மேசியாவே அவரின் கீழ் ரட்சண்ய காலம்வரும்; நீதியும் நியாயமும் பூமியின்மேல் ஸ்திரப்படும், மனுஷனுக்கும் ஜீவப்பிராணிகளுக்கும் இருக்கும் திவ்ய சமாதானம், யேகோவா திரும்பவும் தமது ஜனங்கள்மேல் கிருபாகடாட்சம் வைத்திருக்கிருர் என்பதைக் கூறியறிவிக்கும்.' (ஏசா ix. பி. வ; xi 1 பி. வ).

இந்தக் காலத்திற்குரிய இன்னொரு பெரிய தீர்க்கதரிசி மொரேசா ஊரானாகிய மீகா. அவனைப்பற்றி இவ்விடத்தில் சுருக்கமாய்க் கவனிப்பது தகுதியாயிருக்கும். அவன் சாமானிய ஜனங்களிடத்தில் வசித்த ஒரு சாமானியன். ஏசாயா மேலான வம்சத்தைச் சேர்ந்தவனாயிருந்தபோதிலும் இருவருடைய நோக்கமும் ஒன்றே அது யூதா தேசத்தாரின் புதுப்பிறப்பே. மீகா எருசலேமின் காரியங்களைக் கண்டபோது அவனுடைய மனசு பொங்கினது. தன்மேல் வஸ்திரத்தை உரிந்து எருசலேம் தெருக்களெங்கும் போய் கசந்து உரத்த சத்தத்தால் தன் தீர்க்கதரிசனத்தை உறைத்தான். எருசலேம் அழிக்கப்படும் என்று கூறினான். இது விரோதிகளை எழுப்பிற்று; ஆனால் எசேக்கியா ஞானமாய் அவனுக்குச் செவிகொடுத்தான். (யெரே. xxvi. 19). இப்படியாக மீகா சீர்திருத்தத்திற்கு ஆயத்தம்பண்ணினான். அவன் ஜனங்கள்நடுவே வாசம்பண்ணி, ஐசுவரியவான்கள் அவர்களை ஒடுக்குவதைக் கண்டு மனங்கொதித்தான். (மீகா. iii. 1–4). தோஷம் நிறைந்த ஜாதியின் நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது என்று சொன்னான்; என்றாலும் உபத்ரவங்கள் மூலமாய் மீட்புண்டாகும் என்றும் விவரித்தான். இது அவனுடைய ஆறுதலின் வசனம். (மீகா iv. 5). சீயோன் ஒரு புது மகிமையால் சூட்டப்பட்டிருக்கிறது. அது பூமி முழுவதுக்கும் ஆவிக்குரிய தலைநகரமாகும். அதைத் தரிசிப்பதற்கு யாத்திரிகர் புறப்பட்டுவருவார்கள். (மீகா iv. 1–2).

இக்காலத்துப் பெரிய தீர்க்கதரிசிகளைப்பற்றி 'அவர்கள் ஜாதியின் சீரழிவுக்கு விரோதமாய் நியாயத்தீர்ப்பைக்கூறி அறிவித்தார்கள், என்றாலும் ஜாதியின் புதுப்பிறப்பைப்பற்றி நம்பிக்கையோடிருந்தார்கள். ஜாதியானைச் சூழ்ந்த மந்தாரம் அவர்களையும் சூழ்ந்தபோதிலும் தங்களுக்கு முன்தூரத்தில் தோன்றின வெளிச்சத்தையும் நம்பிக்கையையும் விவரித்தார்கள்.' என்று சொல்லியிருக்கிறது. துரைத்தனம், சன்மார்க்கம், ஜனஐக்யக் கூட்டுறவு முதலிய பெரிய காரியங்களில் உரிமைபாராட்டி இவைகளைப்பற்றித் தங்களுடைய புத்தியும் விவேகமும் ஞானமுமான ஆலோசனையைப் பின்வைத்துப் போனார்கள். அவைகள் சதாகாலங்களிலும் இருக்கும். அவர்கள் நோக்கம் உன்னதமானது, அவர்கள் ஆவியின் சத்துவம் வல்லமையுள்ளது. அவர்கள் போதனையின் பொருளடக்கம் தேவனுக்கும் மனுஷனுக்கும் இருக்கப்பட்ட சம்பந்தம் எவ்வளவு சிரேஷ்டமாய் இதை விவரித்திருக்கிறார்கள். இந்திய குருமார் அவர்கள் போதனையையும் அவர்கள் பிரமாணத்தையும் ஆராய்ந்தால் அவர்கள் திருப்பணிவிடையைக் கர்த்தர் திரளாய் ஆசீர்வதிப்பார்.

## எசேக்கியா.

(2 ராஜா. xviii. 1–xx. 21; 2 நாளா. xxix. i–xxxii. 33 ஏசா. xxxvi–xxxix).

எசேக்கியா தன் தகப்பனாகிய ஆகாசுக்குப் பின்வந்து இருபது வருஷம் அரசாண்டான். ராஜாக்களில், 'அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல்வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப்பின்னும் அவனுக்குமுன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை' என்று சொல்லியிருக்கிறது. (2 ராஜா. xviii. 5). என்றாலும் நாளாகமத்தில்தான் அவனுடைய காரியங்களை விவரமாய்ச் சொல்லி

யிருக்கிறது. தன் அரசாட்சியின் முதல் மாசத்திலே ஆலயத்தைத் திறந்து, அதன் கதவுகளைப் பழுதுபார்த்து, ஆசாரியரையும் லேவியரையும் அழைத் துத் தேவனுடைய வீட்டைச் சுத்திகரித்துப் பரிசுத்தப்படுத்திவித்தான். அர சனும் ஜனங்களும் செய்த மீறுதல்களினிமித்தம் அவர்கள்மேல் பெரிய இடுக்கண்கள் வந்ததென்று அவர்களுக்கு நினைப்பூட்டி கர்த்தருடைய கோபம் நீங்கத்தக்கதாக இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணவேண்டுமென்ற தன் விருப்பத்தைத் தெரிவித்து, ‘என் குமாரரே, இப்போது அசதியாயிராதேயுங்கள்; நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடை செய் யும்படி அவருக்குமுன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியஞ் செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும், உங்களை அவர் தெரிந்துகொண்டார்’ என்றான். (2 நாளா. xxix. 11).

மனுஷர் ஜாக்ரதையாய் வேலை நடத்தினதால், பதினாறு நாட்களுக்குள் ஆலயம் சுத்திகரிக்கப்பட்டு ஆராதனை நடத்தத் தகுந்ததாயிருந்தது. ஆகாஸ் எடுத்துக்கொண்ட தட்டுமுட்டுகளைக் கண்டுபிடித்துப் பரிசுத்தப்படுத்தி பலிப் பீடத்தின்மேல் திரும்பவைக்கப்பட்டது. ராஜாவும் பிரபுக்களும் அதிகாலை யில் எழுந்து ஜனங்களுக்காக குற்றநிவாரணபலி செலுத்துவதற்கென்று ஆல யத்திற்குப் போனார்கள். அப்புறம் தகனபலி செலுத்தப்பட்டது. இது ஜனங்களெல்லாரும் தங்களைத் திவ்யபணிவிடைக்கென்று ஒப்புக்கொடுத் தார்களென்று காட்டினது. ஆகவே ஜாதியாரனைவரும் தங்களைத் திரும்பவும் தேவனுடைய பணிவிடைக்கென்று பிரதிஷ்டை பண்ணினார்கள். அது ஆச்சரியமான கூட்டம்; எகோவாவை உண்மையாய்ப் பின்பற்றினவர்களெல் லாருடைய இருதயமும் நன்றியறிந்த சந்தோஷத்தால் நிறைந்தது. எக் காளம் ஊதினபோது துதிகளின் சத்தம் உன்னதத்திற்கெழும்ப, ராஜாவும் ஜனங்களும் தலைபணிந்து வணங்கினார்கள். ‘ஒரு மாட்சிமையான அரசாட் சியை அது தகுதியான பிரகாரம் பிரதிஷ்டை செய்தது.’ வெளியரங்க மான சீர்திருத்தம் நன்றாயிருந்தது. என்றாலும் தீர்க்கதரிசிகள் ஆவிக்குரிய மேலான சீர்திருத்தத்தையும் விரும்பினார்கள். தேவகோபம் இருந்தால் திர ளான பலிகள் அதைத்தணிக்கும் என்ற ஜனங்களுடைய சாதாரண எண்ணத் தை ஏசாயா பின்வரும் வசனத்தால் கண்டிக்கிறான். ‘இனி வீண் காணிக் கைகளைக் கொண்டுவரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயி ருக்கிறது; நீங்கள் அக்ரமத்தோடே ஆசரிக்கிற மாசப்பிறப்பையும், ஓய்வு நாளையும் சபைக்கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்.’ (ஏசா. i. 13). பொல்லாப்பைவிட்டு விலகி நன்மையைப் பின்பற்றுவதால் காட்டப் படும் உத்தம மனந்திரும்புதலே அவசியமானது. ‘உங்கள் பாவங்கள் சிவே ரென்றிருந்தாலும் உறைந்த மழைபோல் வெண்மையாகும்; அவைகள் இரத் தாம்பரச் சிவப்பாயிருந்தாலும், பஞ்சைப்போலாகும்.’ (ஏசா. i. 16–18). நடத்தவேண்டிய அடுத்த காரியம் பஸ்காப் பண்டிகையைக் கொண்டாடுவது. ஆலயச் சுத்திகரிப்பினிமித்தம் இதை முதல் மாதத்தில் கொண்டாடுவது கூடாமையினால் அதற்காக இரண்டாவது மாசம் நியமிக்கப்பட்டது.

இஸ்ரவேல் ராட்சியமெங்கும் எசேக்கியா அஞ்சலாட்களை அனுப்பி, பஸ்காவைக் கொண்டாடுவதற்கு ஜனங்களை எருசலேமுக்கு அழைப்பித் தான். கர்த்தருடைய பிரமாணத்தை அலக்ஷயம் செய்யாமல் அவரிடத்தில் வந்தால் அவர்களுடைய சஞ்சலம் நீங்கும் என்று சொல்லி மிகவும் பட்சமும்

உருக்கமுமான செய்தி அனுப்பினன். (2 நாளா. xxix. 6–9). அனேக ஜனங்கள் 'அஞ்சல்காரரை நகைத்துப் பரிகாசம் பண்ணினார்கள்.' ஆனல், ஆசேர், செபுலோன், மனசே கோத்ரங்களிலிருந்து ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி எருசலேமுக்கு வந்து சேர்ந்தார்கள். ஆகவே வெகுதிரளான ஜனக் கூட்டம் வந்துசேர்ந்தது. சகலரும் மிகுந்த வைராக்கியத்தினல் நிரம்பினர்கள். சுத்திகரிப்படைந்த ஆசாரியரும் லேவியரும் தங்கள் தங்கள் இடத்தில் நின்று சுத்திகரிப்பில்லாதவர்களுக்காக பஸ்காவைக் கொன்றார்கள். முக்கியமாய் வடராட்சியத்திலிருந்து வந்தவர்கள் சுத்திகரிப்பில்லாதவர்களாயிருந்தார்கள். சுத்திகரிப்பின் முறையைக் கைக்கொள்ளத்தவறினதை கர்த்தர் அவர்களுக்கு மன்னிக்க வேண்டுமென்று எசேக்கியா அவர்களுக்காக மன்றாடினன். கர்த்தர் ஜெபத்தைக்கேட்டார். ஆசாரியர் லேவியருக்கு கட்டளைப்படி உரிய காணிக்கைகளைப்பற்றி ஒழுங்குசெய்யப்பட்டது. ஏழு நாளுக்குப் பதிலாகப் பண்டிகை பதினுறுநாள் ஆசரிக்கப்பட்டது. எல்லாம் முடிந்தபின், 'லேவியரான ஆசாரியர் எழுந்துநின்று ஜனத்தை ஆசிர்வதித்தார்கள்; அவர்களுடைய சத்தம் கேட்கப்பட்டு, அவர்களுடைய விண்ணப்பம் அவருடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரலோகத்தில் வந்செட்டினது.' (2 நாளா xxx. 27). சாலமோன் நாட்களுக்குப்பின் இப்படிப்பட்ட ஆசரிப்பு எருசலேமில் காணப்படவில்லை.

இந்த ஆசரிப்பில் கவனிக்கத்தக்க சில குறிப்புகளுண்டு. சரியான மாசத்தில் ஆசரிக்கப்படவில்லை, ஏழுநாளுக்கு பதில் பதினலுநாள் கொண்டாடப்பட்டது; சுத்திகரிக்கப்படாத அனேகர் இருந்தார்கள். அவர்கள் கொடுந்தண்டனைக்குப் பாத்திரராயிருந்தார்கள். அவர்களுக்காக, ஆசாரியரல்ல, அரசன் மன்றாடுகிறன். அவசரநிமித்தமாய் அரசன் பண்ணின ஒழுங்கீனங்களுக்கு ஆசாரியர் தடைசெய்யவில்லை. அதீக்ஷதருக்குப் பிரதிநிதியாயிருந்த அரசன் ஆலயத்தின் அதிகாரிகளை அப்பால்வைத்துக் காரியத்தை நடத்தினன். அவசரம் நேரிடும்போது சடங்குப்பிரமாணத்தை அப்பால் வைத்துவிடலாம்; 'மனுஷனுக்காக சடங்கு உண்டாக்கப்பட்டிருக்கிறது மனுஷன் சடங்குக்காக உண்டாக்கப்படவில்லை' என்பது ஆண்டவர் கற்பித்த போதனை.

தங்களைப் புதிதாய் தேவனுக்கென்று பிரதிஷ்டைசெய்த வைராக்கியத்திலே அரசனும் ஜனங்களும் யூதாவின் பட்டணங்களுக்கெல்லாம் போய், மாசெபா ஆசரிம்மோடுகூட சகல விக்ரகங்களையும் எப்ராயீம் மனசேயிலுமுள்ள பலிப்பீடங்களையும் நாசமாக்கினர்கள். வணங்கப்பட்ட வெண்கலச் சர்ப்பத்தையும் துண்டுதுண்டாக்கி 'விசித்திர சிலேஷையாய் அரசன் அதற்கு நெகுஸ்தான் என்று பேரிட்டான்.' தன் ஜனங்களின் சீர்திருத்த விஷயத்தில் அவன் செய்தவைகளுக்கு முடிவுரையாக பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. 'அவன் இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தர் மேல்வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப்பின்னும் அவனுக்குமுன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை.........ஆகையால் கர்த்தர் அவனேடிருந்தார்; அவன் போகிற இடமெங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று.' (2 ராஜா. xviii. 5–7).

ராஜாங்கத்திற்குரிய காரியங்களோ, சத்துவங்கெட்ட நிலைமையிலிருந்தது. 'யூதா எகிப்துக்கும் அசிரியாவுக்கும் நடுவிலிருக்கிறது, எவ்வித உதவி

புரிய எலாதிருந்தும் இரண்டு தேசத்துக்கும் அதை அபகரிக்க ஆசை; அசிரியாவுக்கு அதை அடிமைகொள்வது மெத்த அவசரம்.' எசேக்கியா அசிரியாவுக்கு அடிமை அரசனுயிருந்தான். தன் அரசாட்சியின் தொடக்கத்திலே, தன் பொக்கிஷம் வெறுமையாயிருந்தது, தன் தேசத்து குடித்தனக்காரர் வறுமை நிறைந்தவர்களாயிருந்தார்கள். சேனைகள் யாதொன்றுமில்லை. என்றாலும் எசேக்கியா கலங்கவில்லை. 'அவன் அசிரியா ராஜாவைச் சேவிக்காமல அவன் அதிகாரத்தைத் தள்ளிவிட்டான்' (2 ராஜா. xviii. 7). மேலும் அசிரியாவுக் கடிமையாயிருந்த பெலிஸ்தியாவைத்தாக்கி அதை மடங்கடித்தான். அசீரியர் இஸ்ரவேல் ராட்சியத்தை நாசமாக்கி, எசேக்கியா அரசாட்சியின் பதினாலாம் வருஷத்திலே 'சனகரிப் யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாய்வந்து அவைகளைப் பிடித்தான்.' (2 ராஜா. xviii. 13; எசா. i. 7). தேசத்து ஜனங்கள்மேல் பெரிய ஆபத்து இருண்ட மேகம்போல்கவிய அதற்குத் தப்பித்துக்கொள்ளப் பற்பலவகையான அபிப்பிராயங்களிருந்தது. சிலர் அசிரியருடைய பழிக்குப்பயந்து அவர்களுக்கு அடிமைகளாயிருந்துவிடுவதே நலம் என்றார்கள்; வேறு சிலர், சம்பிரதியாகிய செப்னாவை தலைவனாகக்கொண்டு எகிப்துவுடன் சினேக உடன்படிக்கை நலம் என்று ஆலோசனை சொன்னார்கள். அப்புறம் ஏசாயாவுடன் மீகா தீர்க்கதரிசியும் பக்தத்துடன் பிணைபற்றின மிகுந்த ஜனங்களுமிருந்தார்கள். மிகுந்த மோசமிருந்தபோதிலும் அசிரியா கடைசியாக மிகுந்த தண்டனையடையுமாதலால் அதற்கு அடிமையாகக்கூடாதென்று சாதித்தார்கள். அப்படியே எகிப்தின் சினேகமும் தகாதென்று புறக்கணித்தார்கள். கர்த்தர் ஒருவரே தஞ்சம் என்பது அவர்கள் சாதனை. பலபக்க அபிப்பிராயங்களையும் கேட்டு அரசன் மனம் கலங்கினான். 'அப்படிப்பட்ட கொடிய ஆபத்துகள் (எசா. i. 5. பி. வ.) தீர்க்கதரிசி எதிர்த்துக் கடிந்துணர்த்தின காரியங்களை விட்டுவிடாமலும் அவனுடைய ஆலோசனைக்குச் செவிகொடாமலும் இருந்தபடியால் வந்து சம்பவித்தவைகள், எசேக்கியாவின் கண்கள் திறக்கப்பட்டபோது தன் ராட்சியத்துக்கு எவை நலமானதென்றறிந்து, அதுமுதல் ஏசாயாவைப் பூரணமாய் நம்பி அவனுடைய ஆலோசனைக்கு இணங்கினான்.' இந்த ஞானமுள்ள தீர்க்கதரிசியின் ஆலோசனைக்கு இணங்கினதுபற்றி எசேக்கியாவின் துரைத்தனமும் ஞானமுள்ளதாயிருந்தது. தீர்க்கதரிசியின் எண்ணங்கள் வெகு உன்னதமாயிருந்தபோதிலும் சாதாரண விஷயங்களிலும் அவனுடைய ஆலோசனை அனுகூலமாயிருந்தது.

சனகரிப் எருசலேமைத் தாக்க இருக்கிறான் என்று எசேக்கியா அறிந்தபோது எருசலேமை அரண்படுத்தினான். கண்ணுக்குப் புலப்படாத நிலவறைக் கால்வாய்களையுண்டாக்கி நகரத்திற்கு ஜலாசயம் கட்டினான். இப்படியாக முற்றுகை போடுகிறவர்களுக்குத் தண்ணீர் கிடையாதபடி பண்ணினான். இடிந்த மதில்களைப் பழுதுபார்த்து ஒரு வெளிமதிலையும் கட்டியுத்த ஆயுதங்களைச் சவதரித்து பட்டணத்துக் காப்புச்சேனைக்குத் தளகர்த்தர்களையும் நியமித்தான். எல்லாம் செய்துமுடித்தபின் அரசன் ஜனங்களை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் நம்மோடிருக்கிறார். ஆகையால் பயப்படாமல் தைரியமாயிருங்கள் என்றான். சனகரிபின் நோக்கம் எகிப்துவின் மேலிருந்தபடியால் அவன் லாகீசை முற்றுகைபோட்டுக்கொண்டிருக்க, தார்தானையும் மற்றும் தளகர்த்தர்களையும் எருசலேமை முற்றுகைபோட அனுப்பினான். அவர்கள் வந்துசேரவே, ரப்சாக்கே மதிலிலுள்ள ஜனங்க

ளைப்பார்த்து, தன் எஜமானுடைய வல்லமையை மிகவும் உயரத்தில் பேசி, எசேக்கியாவை நம்பாதிருங்கள். அவனுங்கள மேடைகளை இடித்து உங்கள் தேவாராதனைகளையும் கெடுத்தவனென்று இகழ்ந்தான். எசேக்கியா நகரத்தைத் தகுந்தபிரகாரம் அரண்படுத்தியிருந்தபோதிலும் ஜனங்களுடைய அதைரியத்தை நீக்கமுடியாதிருந்தானென்று 2 ராஜா. xviii. 14–16 னல் தூலங்குகிறது. அவர்கள் கண்ணுக்கு எல்லாம் நாசம்போல தோன்றினது. (எசா. xxix. 2–4). அவர்கள நம்பிக்கையற்றவர்களாய், 'நாளைக்குச் சாவோம்.' என்று விருந்துகொண்டாடினுர்கள். (எசா. xxii. 13). செபனுவும் அவனைச் சேர்ந்தவர்களும் கீட்படிந்துபோவோமென்று ஆலோசனை சொன்னுர்கள். அப்படியே அரசனும் இணங்கி சனகரிபுக்கு கப்பமாக திரண்ட திரவியம் அனுப்பினுன். (2 ராஜா. xviii. 14–16). ஆனுல் முற்றுகை நடந்துகொண்டுவந்தபோது சனகரிப் பயமுறுத்தும் ஒரு நிருபத்தை அரசனுக்கு அனுப்ப, அரசனதை ஆலயத்தில் கார்த்தர் முன்பாக விரித்து மீட்புக்காக மன்ருடினுன். அத்தருணத்தில் எசாயா தோன்றி பயப்படவேண்டாம், எருசலேம் பிடிபடுவதில்லை, அசிரியன் முறியடிக்கப்பட்டு நடுங்கி ஓடி கொடிய மரணமாய்ச் சாவானென்ருன். (எசா xxviii. 5–7). கர்த்தருடைய தூதன் அசிரிய சேனையை அடிக்க, அவர்களெல்லாரும் மடிந்தார்கள். (2 ராஜா. xix. 35; எசா. xxxvii. 36).

இந்த ரட்சிப்பு யூதசரித்திரத்தில் மகாவிசேஷமானது. பெரிய தீர்க்கதரிசிகள் தங்கள் பெரிய வேலையை முடித்துக்கொள்வதற்குச் சமயத்தையும் தருணத்தையும் கொடுத்தது. இதற்குப்பின் கி. மு. 586ல் நெபுகாத்நேசார் எருசலேமை அழித்தான். அந்த காலத்திற்குள்ளாக, யோவேல், ஓசியா, எசாயா, மீகா, எரேமியா முதலிய தீர்க்கதரிசிகளின் போதனையினுலும் செல்வாக்கினுலும், ராட்சியம் அழிக்கப்பட்டபோதிலும், மெய்த்தேவபக்தி ஜனங்களுடைய இருதயத்தில உறுதியாய் நிலைத்துக்கொண்டது.

இதற்குப்பின் எசேக்கியா வியாதிப்பட்டான். இதன்விபரம் 2 ராஜா. xx. 1–11; எசா. xxxviii-ல் கண்டிருக்கிறது. எசாயா, நீ மரிக்கவேண்டியது, அதற்குமுன் உன்வீட்டை ஒழுங்குபண் என்று கர்த்தரிடத்திலிருந்து எசேக்கியாவுக்குச் செய்திகொண்டுவந்தான். அரசன் தன்முகத்தைச் சுவர்முகமாய்த் திருப்பி கர்த்தர் தன்னை நினைத்துக்கொள்ளும்படி மன்ருடினுன். அவனுடைய விண்ணப்பம் கேட்கப்பட்டது. எசாயா நகரத்தின் மத்தியில் சேருமுன் நீ அரசனிடத்தில் போய் இன்னும் நீ பதினைந்து வருஷம் உயிரோடிருப்பாய் என்று சொல் என்று கட்டளைபெற்ருன். இது நடக்குமென்ற ஒரு அடையாளம் அரசன் கேட்க சூரியகடியாரத்தில் பத்துப்பாகை பின்னுலே சென்றது.

எசேக்கியாவின் நன்றியறிந்த ஸ்தோத்ர சங்கீதம், சரித்திர ஆகமங்களிலல்ல, எசாயாவில் கண்டிருக்கிறது. (எசா. xxxviii. 10–20) அது அவனுடைய உருக்கமான லக்ஷணத்தையும் நன்றியுணர்ந்த சுபாவத்தையும் காட்டுகிறது. மரணம் சமீபித்ததென்று கண்டபோது வியாகுல தொனியால் தன் சஞ்சலத்தைத் தெரிவிக்கிருன். தான் சொஸ்தமடையவே வெகு சந்தோஷத்துடன் தேவனைத் துதிக்கிருன். இந்த அனுபோகம் அவனுக்குப் பெரிய ஆசீர்வாதமாயிற்று. 'அவன் தேவபக்தியுள்ளவன், தேவாலய ஆராதனைகளில் வைராக்யமுள்ளவன், தேவனேடு ஐக்யமாயிருந்த தீர்க்கதரிசி

யைத் தன் வாழ்நாளெல்லாம் சிநேகிதனாகக் கொண்டவன்; என்றாலும் கர்த்தர் அவனிடத்தில் வந்தது இந்த ஏதுக்களினாலல்ல; அவன் வியாதிப் பட்டு சுவர்பக்கமாய்த் திரும்புமட்டும் அது நடக்கவில்லை. அப்போது தான், 'நான் என்ன சொல்வேன்? அவர் என்னோடு பேசி அவரே அதைச்செய் தார்,' என்று சொல்லக்கூடும்.

பாபிலோன் அரசனும் அசிரியாவின் கொடிய சத்ருவுமாகிய மெரோ தாக்பாலதின், எசேக்கியா வியாதியாயிருந்ததைக் கேள்விப்பட்டு, ஸ்தானா பதிகளை வெகுமதியுடன் அனுப்பி அவனுடைய சுகத்தை விசாரிக்கச் சொன் னான். அக்காலத்தில் பாபிலோனின் வல்லமை பெருகியும் அசிரிய வல் லமை குறுகியும் வந்தது. மெரோதாக்பாலதின் யூதாவை சிநேகமாக்கிக் கொள்ள விரும்பினான். கி.மு. 729-ல் திக்லாத்பிலேசர் அவனை முறி யடித்த போதிலும் அசிரியர் பாபிலோனைத் தங்களடிமை நாடாகவைத்துக் கொள்ளக் கூடாமற்போயிற்று. ஏனென்றால், கி.மு. 705-ல் சார்கன் மரித்தபின் மெரோதாக்பாலதின் திரும்பச் சத்துவமடைந்து எசேக்கியாவின் சிநேகத்தை நாடினான். எசேக்கியா தன்னைப்பார்க்க வந்தவர்களை சந் தோஷமாய் ஏற்றுக்கொண்டு வல்லமையில் அதிகரிக்கும் ஒரு அதிகாரியைப் பிரியப்படுத்தும் நோக்கமாய், அவர்களுக்குத் தன பொக்கிஷங்களையும் ஆயு தங்களையும் காட்டினான். அஞ்ஞான துரைத்தனங்களுடன் புழங்குவது மிகத் தகாதகாரியம். அது யெகோவாவுக்கு விரோதமான பாவம். ஏசாயா அர சனை மிகக்கடிந்துகொண்டு தான் பெருமையுடன் காட்டின பொக்கிஷங்கள் கொள்ளையிடப்பட்டு தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் (2 ராஜா.xx.18.) பாபிலோனுக்குச் சிறையாய்க் கொண்டுபோகப் படுவார்களென்றறிவித்தான். தண்டனை பிந்திவருவதை இரக்கமாக நினைத்து 'நீர் பேசின தேவனுடைய வார்த்தை நல்லதுதான்; என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே என்றான்.' (ஏசா.xxxix.8) இது அரசனுடைய ஜீவகாலத்தின் கடைசிக் கிளைச்சங்கதி. இதற்குப்பின் அரசன் மரணமடைய, அவனைக் கண்யத்துடன் எருசலேமில் அடக்கம் பண்ணினார்கள்.

எசேக்கியாவின் அரசாட்சி மகா தொல்லைகள் நிறைந்ததாயிருந்தது. அத்தொல்லைகள் நடுவிலும் சமாதானக்கிரியைகளைச் செய்யப் பிரியப்பட் டான். நமது வேதாகமத்தில் ஒருபாகம் அவன் எழுதிவைத்தது. அது நீதி மொழி xxvம். அதிகாரம்.

## மனசே.

(2 ராஜா xxi-ம்.1-18; 2 நாளா.xxxiii.1-20).

மனசே என்பது பெரிய பிரிவினையில் சம்பந்தப்பட்டதும் யூதாவுக்கு வெறுப்பைக் கொடுக்கத்தக்கதுமான ஒரு கோத்திரத்தின் பேர். இந்தப் பேரை எசேக்கியா தன் குமாரனுக்குக் கொடுப்பானேன். அதனர்த்தம் 'மறந்துவிடுதல்.' எசேக்கியா பெரிய பஸ்காவைக் கொண்டாடினபோது மனசேக் கோத்திரத்தாரும் அதைக் கொண்டாடுவதற்கு எருசலேமுக்கு வந் ததுமன்றி மகா வைராக்யத்துடன் தங்கள் நாட்டிலுள்ள சகல விக்ரகங்களை யும் தகர்த்துப்போட்டார்கள். பழைய பகை மறந்துபோனால் நல்லதே என்ற தன் விருப்பத்தையும் பட்சத்தையும் காட்டுவதற்கு தன் புத்ரனுக்கு அந்தப் பேரிட்டான்.

மனுசேயின் தீமையான கிரியைகள் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. தன் தகப்பன் இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டி பாகாலுக்குப் பலிப்பீடங்களை எடுப்பித்து ஆகாப் செய்ததுபோல விக்ரகத்தோப்பை உண்டாக்கி வானசேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு சேவித்தான். கர்த்தருடைய ஆலயத்தில் பலிப்பீடத்தைக்கட்டி, மோளோக்கையும் பணிந்துகொண்டு தன் குமாரனையும் தீமிதிக்கப்பண்ணினான். அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்துக் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினான். 'கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த ஜாதிகள்செய்த பொல்லாப்பைப்பார்க்கிலும் அதிகமாய்ச் செய்ய மனுசே அவர்களை ஏவிவிட்டான்.' (2 ராஜா. xxi. 9.)

திடீரென்று இப்படிப்பட்ட மாறுதல் வருவானேன்? எருசலேமில் மேல்வகுப்புகளுக்குள் ஒரு பலத்தக்கூட்டத்தார் இருந்தார்கள். எசேக்கியாவின் சீர்திருத்தங்கள் அவர்களுக்குப் பொருந்தவில்லை. யேகோவா இஸ்ரவேலுக்கும் யூதாவுக்குமாத்திரம் தேவனென்றும், மற்றஜாதியாருடைய தேவர்கள் மேலான வல்லமையுள்ளவர்கள், ஆகையால் அவர்களைத் தொழுதுகொள்வதால் மோசம் யாதொன்றுமில்லையென்றும் எண்ணினார்கள். தீர்க்கதரிசிகள் இதை இடித்துரைப்பானேன்? சாலமோன் இதற்கிடங்கொடுக்கவில்லையா? என்றார்கள். இதுதவிர மேடைகளில் பணிவிடைசெய்த அனேக ஆசாரியர் உத்யோகமற்றவர்களாயிருந்து அவைகள் திரும்ப ஸ்தாபிக்கப்பட்டால் தங்களுக்குச் சேமம் என்றிருக்கலாம். மேலும் சாதாரண ஜனங்கள் மேடைகளில் நடக்கும் கொண்டாட்டத்தையும் வேடிக்கைகளையும் விரும்புகிறவர்கள். மூப்பர்கள் ஏசாயா மீகா தீர்க்கதரிசிகளை இகழ்ந்து அவர்கள் சொன்ன மேசியாவின் ராட்சியம் எங்கே என்றார்கள். கர்த்தர் தங்களுக்குச் செய்தவைகளையெல்லாம் மறந்து யாதொரு நம்பிக்கையுமில்லாதவர்களாய் 'கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை, கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார்' என்றார்கள். (எசேக் viii. 12) தாங்கள் வானராக்கினியை வணங்காததினால் இந்த ஆபத்தெல்லாம் வந்ததென்றார்கள். இப்படியெல்லாம் சொல்ல இளமையான அரசனுடைய மனம் குழம்பினது. இத்தருணத்தில் ராஜாக்களிலும் நாளாகமத்திலும் ஏசாயாவைப்பற்றி யாதொன்றும் சொல்லாததால் தீர்க்கதரிசி மரணமடைந்திருக்கவேண்டும். ஆகவே அரசனுக்கு அந்த ஞானமான ஆலோசனைக்காரனுடைய உதவி அற்றுப்போயிற்று.

தீர்க்கதரிசிகளின் சத்தத்தைக் கேட்பாரில்லை. என்றாலும் அவர்கள் சோம்பலாயிருக்கவில்லை 'சத்தம் அடக்கப்பட்டாலும், அவர்கள் பென்னையெடுத்து தங்கள் போதனையை எழுதிவைத்தார்கள். அது நிலைத்திருக்கிறதாயும் சகலரும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடியதாயுமிருந்தது. உபாகமத்தின் மிச்சமான பாகம் (v–xxvi; xxviii) புது சீர்திருத்தத்திற்குரிய நற்பலன். பழைய பிரமாணங்கள் அனேகம் அதில் சேர்க்கப்பட்டது. ஆனலது போதிக்கிற மிச்சமான காரியங்கள் இந்தகாலத்திற்குரியவைகள்'. இந்த நூல் மோசமாகிப்போகாதபடி யொசியா அரசன்காலமட்டும் அது வெளிப்படவில்லை. பழைய அஞ்ஞானமார்க்கம் நிலையாயிருந்ததுபோல தோன்றினாலும் யூதாவில் தெய்வபக்தியுள்ளவர்கள் இருந்தார்கள். தீர்க்கதரிசிகள் விதைத்த நல்லவிதை அழிந்துபோகாமல் தகுந்தகாலத்தில் நற்பலனைத் தந்தது.

ராஜாக்களின் புஸ்தகத்தில் எருசலேமுக்குவரும் கொடுந்தண்டனையைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆனால் மனாசேயின் சிறையிருப்பையும் மனந்திரும்புதலையும்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. இது நாளாகமத்தில் கண்டிருக்கிறது. (2 நாளா xxxiii.11–3) கையில் விலங்கிட்டு, உதடுகள் ஊடுருவகொளுவிமாட்டி, மனாசே பாபிலோனுக்குச் சிறையாய்க் கொண்டுபோகப்பட்டான். அப்போது மனாசே தன்னைத்தாழ்த்தி ஜெபம் பண்ணினான். அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது. நினிவேயைப் பிடித்தவர்கள் நினைத்தவேளை கொடுமைபண்ணி, நினைத்தவேளை தயவுகாட்டுவார்கள். ஆகவே, மனாசே விடுதலையடைந்து எருசலேமுக்கு அனுப்பப்பட்டான். அப்போது, 'கர்த்தர், அவரே தேவன் என்று அவனறிந்தான்.' மன்னிப்பின் சந்தோஷத்தை மனுஷர் உணரும்போது அவர்கள் தேவனை அறியத்தொடங்குகிறார்கள். அவன் ஜெபித்தான் என்று சொல்லியிருக்கிறது. அதன்விபரம் சொல்லப்படவில்லை, அனேக நூற்றாண்டுகளுக்குப் பின் ஒருஜெபம் அவன் பண்ணினதென்று தள்ளுபடி ஆகமத்தில் கண்டிருக்கிறது. ஆனாலது தள்ளுபடியென்றே சொல்லவேண்டும். என்றாலும் அது மனசைக்கவரத்தக்க நூலே. இந்தப் பரம்பரையான சங்கதிகளை ராஜாக்களில் கண்ட கலப்பற்ற நேர்மையான சரித்திரத்தோடு ஒற்றுமைப்படுத்துவது கஷ்டம், என்றாலும் 'ஏற்கனவே நன்றாயறியப்பட்ட உபதேசத்தை நாடோடிய விஷயங்கள்சம்பந்தமாய் விளக்கிக்காட்டுவதற்கு அவைகள் மகா பிரயோஜனமுள்ளது. அதாவது, தேவனுடைய இரக்கம் தேவனுடைய பழிவாங்குதலைவிட மிகவும் மிஞ்சினது, கொடிய ஆக்கினைத்தீர்ப்பின்கீழ் இருந்தபோதிலும், மனுஷனுடைய சுயசித்தமும் தேவனுடைய கிருபையும் விடுதலையைக் கொண்டுவரலாம். மனாசே விடுதலையடையக்கூடுமானால், மனந்திரும்புதலும் விடுதலையுமாகிய கதவை வேறெவருக்கும் திறவாமல் பூட்டமுடியாது'.

அரசன் எருசலேமுக்குத் திரும்பினபின், விக்ரகவணக்கத்தை நாசமாக்கி, கர்த்தருடைய பலிப்பீடத்தைப் பழுதுபார்த்து அதில் பலிகளைச் செலுத்தி கர்த்தர் ஒருவரையே ஆராதிக்கும்படி ஜனங்களுக்குக் கட்டளையிட்டான். எருசலேமின் மதில்களைச் சீர்ப்படுத்தி சகல அரணான பட்டணங்களிலும் ராணுவவீரரை ஏற்படுத்தி இப்படியாகத் தன் மனந்திரும்புதலுக்குப் பின் மிகவும் சுதேசப்பிரியனாக விளங்கினான். ஐம்பத்தைந்துவருஷம் நீண்ட அரசாட்சிக்குப்பின் அவன் மரித்தான். அவனுடைய வீட்டின் தோட்டத்தில் அவனை அடக்கம்பண்ணினார்கள்.

## ஆமோன்.

(2ராஜா.xxi.19–26; 2 நாளா.xxxiii.21–25).

ஆமோன் இரண்டுவருஷமாத்திரம் அரசாண்டான். அவனைப்பற்றிச் சொல்லியிருப்பது வெகுசுருக்கம். அவன் மிகவும் பொல்லாதவன். மனாசேயின் கடைசிக்காலத்தில்செய்த சீர்திருத்தங்களையெல்லாம் நாசம்பண்ணி முந்தின விக்கிரகாராதனைகளையெல்லாம் திரும்ப ஸ்தாபித்தான். ஆமோன் காலத்திலும் யோசியா அரசாட்சியின் தொடக்கத்திலும் ராட்சியத்தின்ஸ்திதி மகா துயரமானதாயிருந்தது. எரேமியா, செப்பனியா இருவரும் அதை விவரிக்கிறார்கள். பின்வருவது செப்பனியாவில் கண்டிருக்கிறது:—

அழுக்கும் ஊத்தையுமாய் இடுக்கண்செய்கிற நகரத்துக்கு ஐயோ! அது சத்தத்துக்குச் செவி கொடுக்கவில்லை; கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை; அது கர்த்தரை நம்பவில்லை; தன் தேவனிடத்தில் சேரவில்லை; அதற்குள் இருக்கும் அதன் அதிபதிகள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள், அதன் நியாயாதிபதிகள் சாயங்காலத்தில் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பையும் மீதியாக வைக்காததுமான ஓநாய்கள். அதன் தீர்க்கதரிசிகள் வீண்பெருமையும் வஞ்சகமுமுள்ளவர்கள்; அதன் ஆசாரியர்கள் பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்த குலைச்சலாக்கி, வேதத்துக்கு அநியாயஞ் செய்தார்கள்.

விக்ரகாராதனைக்காரரையும், சோம்பேறிகளும் மிக அற்பருமான ஆசாரியர்களையும்; கர்த்தர்பேரில் பக்தமுள்ளவர்கள்போல அவர்பேரில் ஆணையிடுகிறவர்களையும் அதேநேரத்தில் தாங்கள் அரசனாய் எண்ணின பாகால்பேரில் ஆணையிடுகிறவர்களையும் இடித்துரைக்கிறான். ஆமோன் மரித்தபின் பன்னிரண்டு வருஷமட்டும்தொடர்ந்த தேசத்தின் நிர்ப்பந்தமான ஸ்திதியை எரேமியாவும் (ii–vi) விவரிக்கிறான்.

அமசியாவையும் யோவகாசையும்போல, ஆமோனும் துர்மரணமாய் மரித்தான். அவனுடைய வேலைக்காரர் அவனுக்குவிரோதமாய்க் கட்டுப்பாடுபண்ணி அவனைக் கொன்றார்கள். பழிகாரரை ஜனங்கள் உடனே கொன்று அவன் குமாரன் யோசியாவைத் தங்களரசனாகத் தெரிந்துகொண்டார்கள். அவன் தகப்பனை அடக்கம்பண்ணியிருந்த ஊசாவின் தோட்டத்தில் ஆமோனை அடக்கம்பண்ணினார்கள். இது யூதராஜாக்களை அடக்கம்பண்ணும் புதிய கல்லறைத்தோட்டம். இப்படியாக யூதராஜாக்களிலெல்லாம் மகா பொல்லாத அரசன் கடந்துபோனான்.

யோசியா. (2 ராஜா.xxii–xxiii.20; 2 நாளா.xxxiv–xxxv.27).

யோசியா பட்டத்திற்குவந்தபோது எட்டுவயசாயிருந்தான். அவன் தாயின்பேர் எதிதாள் (நேசிக்கப்பட்டவள்). தன் இளவயசிலேயே தாயினிடத்திலிருந்து தேவபக்திக்குரிய போதனையைக் கற்றுக்கொண்டான். ஆகவே அவன் வளர்ந்தபோது 'தன் தகப்பனாகிய தாவீதின்வழியிலெல்லாம் வலது இடதுபுறம்விலகாமல் நடந்தான்'. (2 ராஜா.xxii 2) யோசியா தெய்வபக்தியுள்ளவனாயிருந்தபடியினால் பிரமாணப்புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டு பெரிய சீர்திருத்தங்கள் தொடங்குவதற்குப் பத்து வருஷத்துக்குமுன்னேயே தானாய்ச் சீர்திருத்தத்தைத் தொடங்கிவிட்டான் என்று நாளாகமக்காரன் விளக்கிக்காட்டுகிறார். அவன் மேடைகளையும் பாகால் பலிப்பீடங்களையும் அவைகளுக்குமேலிருந்த சூரியசிலைகளையும் நாசமாக்கி, சிலைகளைத்தூளாக்கி அவைகளை வணங்கினவர்களின் கல்லறைகளின்மேல் தூவினான். விக்ரகங்களின் ஆசாரியருடைய எலும்புகளை எடுத்து தகனித்து அதன்சாம்பலை விக்ரகங்களின் பலிப்பீடங்கள்மேல் தூவினான். (2 ராஜா.xxiii.16–20). மனாசே எப்பிராயீமிலும் இந்த சீர்திருத்தங்களை நடத்தினான். அசீரியாவின் வல்லமை குன்றிப்போனபடியினால் நாசமாய்ப்போன வடராட்சியத்திலும் யோசியா தன் அதிகாரத்தைச் செலுத்தக் கூடியவனாயிருந்தான்.

எரேமியா செப்பனியா தீர்க்கதரிசிகளும் தெய்வபக்தியுள்ள சாபான் சம்பிரதியும் மகாசையாவும் அரசனுக்கு உதவிசெய்தார்கள். அவர்கள் முதலாவது கையிட்டுக்கொண்டது ஆலயப் பழுதுபார்க்கும்வேலை. சேகரிக்கப்பட்ட பணங்களை அவர்கள் பிரதான ஆசாரியனாகிய இல்கியாவிடத்தில் கொடுக்க அவன் அதை வேலையாட்களுக்கும் உத்திரங்களுக்காகவும் சிற்பிக்

கப்பட்ட கல்லுகளுக்காகவும் செலவிட்டான். பழுதுபார்த்தல் நடந்துகொண்டிருக்கும்போதுதான் மிகவும் விசேஷித்தகாரியம் சம்பவித்தது. அதாவது இல்கியா நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டெடுத்து அதை சாபான் மூலமாய் அரசனுக்கு அனுப்பினான். அரசனதில் சிலபாகங்களை வாசித்தான். உபாகமம் xxviii. 15 முதல் வாசிக்கும்போது அதில் பிரமாணத்தின் கட்டளைப்பிரகாரம் செய்யாதவர்கள்மேல் இடித்துரைத்திருக்கும் சாபங்களை அறிந்து மிகவும்பயந்து தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு இல்கியாவையும் மற்றும் உத்யோகஸ்தரையும் தருவித்து பின்வருமாறு கேட்டுக்கொண்டான். 'கண்டெடுக்கப்பட்ட இந்த புஸ்தகத்தின் வார்த்தைகளினிமித்தம் நீங்கள்போய் எனக்காகவும் இஸ்ரவேலிலும் யூதாவிலும் மீதியானவர்களுக்காகவும் கர்த்தரிடத்தில் விசாரியுங்கள்; இந்த புஸ்தகத்தில் எழுதியிருக்கிற எல்லாவற்றின்படியும் செய்யும்படிக்கு கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதே போனபடியால், நம்மேல்மூண்ட உக்கிரம் பெரிது என்றான். (2 நாளா. xxxiv. 21). அந்த உத்யோகஸ்தர் உடனே உல்தாள் என்னும் தீர்க்கதரிசியினிடத்தில் போய் கர்த்தருடைய சித்தம் என்னவென்று விசாரிக்க அவள், தேவனுடைய கோபம் எருசலேமின்மேலும் அதன் குடிகள்மேலும் மெய்யாகவே வரும், என்றாலும் இந்தப் பொல்லாப்பெல்லாம் நடப்பதற்குமுன் அரசன் தன்னுடைய தெய்வபக்தியினிமித்தம் சமாதானமாய் மரணமடைவான் என்றாள். (2 நாளா. xxxiv. 28).

இப்படியாக உபாகமம் மிக அவசியமான சமயத்தில் தோன்றினது. 'அது நூலாசிரியனுடைய காலத்திற்கு ஏற்றதாக இருந்தது. அதில் சந்தேகமின்றி மோசே கொண்டுசெலுத்தினதும் தனது நீதிநியாயங்கள் தான் என்று ஒப்புக்கொள்ளத்தக்கதுமான காரியங்களை நூலாசிரியன் மகா நீக்கத்துடன் வற்புறுத்திக்காட்டுகிறான்.' 'சீனாயில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதும், இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் புதிய தேசத்திலும் இல்வாழ்க்கையிலும் தங்கள் ஜீவநாட்களை எப்படிச் சீர்ப்படுத்துவதென்று மோசே போதித்ததுமான பக்திவினயமான காலத்தைச் சிந்திக்கும்படி ஜனங்களுடைய மனசை வெகுசமர்த்துடன் நூலாசிரியன் ஏவுகிறான்'. (உபா. xiii. 31–2). யொசியா தொடங்கின சீர்திருத்தங்களெல்லாம் இப்போது கண்டுபிடிக்கப்பட்ட நியாயப்பிரமாணத்திற்கிசைய அதிற்கண்ட சட்டதிட்டப்பிரகாரம் நடத்தப்பட்டது. உபாகமம் நியாயப்பிரமாணத்திற்கு ஒரு அதிகாரம்பெற்ற வியாக்கியானம். சிலவிஷயங்களில் அதற்கு அநுபந்தமாயிருக்கிறது.

உல்தாளின் செய்தியை அறிந்தவுடனே அரசன் தன் பிரயத்தனங்களைத் தொடங்கினான். புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட புஸ்தகத்தை வாசிக்கக் கேட்பதற்கு சகல ஜனங்களையும் அரசன் ஆலயத்திற்குத் தருவித்தான். முழு இருதயத்தோடும் கர்த்தருடைய பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கு, ஜனங்கள் நின்றுகொண்டிருக்க, அரசனும் ஜனங்களும் உடன்படிக்கை பண்ணினார்கள். 'இஸ்ரவேல் புத்ரரைச்சேர்ந்த சகலநாடுகளிலுமுள்ள அருவருப்புகளையெல்லாம்' நாசமாக்கி இந்தக் கீட்படிதலைக்காட்டினார்கள். இப்படியாக நாளாகமக்காரன் சகலத்தையும் அடக்கத்தக்கதாய்க் குறித்துக்காட்டுகிறான். 2 ராஜா. xxiii. 4-20–ல் வரித்துச் சொல்லியிருக்கிறது. விக்ரகாராதனையில் பிரயோகிக்கப்பட்ட தட்டுமுட்டுகள் சகலமும் சுட்டெரிக்கப்பட்டது. மேடைகளின் பலிபீடங்கள் தீட்டுப்படுத்தப்பட்டு அதன் பூசாரிகள்

நீக்கப்பட்டார்கள். ஆஷெராக்களுக்குத் தொங்கலாடைசெய்த சோதோமிய ஸ்திரீகளின் வீடுகள் நாசமாக்கப்பட்டது. சூரிய விக்ரகாராதனை நிறுத்தப்பட்டு அதன் பவனி ரதங்களின் குதிரைகள் அகற்றப்பட்டது. அசீரியாவின் வல்லமை குன்றிப்போனபடியால் அதற்கடிமைப்பட்ட சமாரியாவிலும் இந்த சீர்திருத்தங்கள் நடத்தப்பட்டது. பேத்தேலில் யெரொபொவாம் உண்டாக்கியிருந்த மேடைகளின் பலிபீடத்தின்மேல் அதற்குரிய பூசாரிகளின் எலும்பைச் சுட்டெரித்து அதன் சாம்பலைத்தெளித்து அப்புறம் அவைகளை நாசம் பண்ணினான். இவைகளெல்லாம் முடிந்தபின் அரசன் எருசலேமுக்குத் திரும்பினான்.

மனாசேயின் கொடுமையான உபத்ரவங்களினிமித்தம் யோசியா கொடுமையாய்ப் பழிவாங்கினான். என்றாலும் அவன் இப்படிக் கொடுமையாய் நடந்துகொண்டது தகுதியல்ல. கொடிய ஏதுக்கள் மனந்திரும்புதலைக் கொண்டுவராது. அப்படிச்செய்வது கொடுமைமாத்திரமல்ல அது விவேகக் குறைவுங்கூட, அஞ்ஞானமார்க்கமாய்ச்சார்ந்த கூட்டத்தார் யோசியாவின் மரணத்திற்குப்பின் அவன் செய்தவைகளுக்கெல்லாம் எதிரிடைசெய்யத் தொடங்கினார்கள். (எரே. xi. 9–13). யோசியாவின் சீர்திருத்தங்கள் மகாபெரியவை, என்றாலும், அவைகள் யூதாவை ரட்சிக்கவில்லை. யோசபாத் அறிவீனம் நிறைந்த சகல ஜனங்களையும் போதித்து அவர்களை சீர்திருத்தினான். யோசியா அப்படி யாதொன்றும் செய்யவில்லை. கட்டாயம்பண்ணி வெகு தீவிரமாய் சீர்திருத்தங்களை நடத்த அரசன் பிரயத்தனம் பண்ணினான். அவன் தன் தேசத்தைச் சுத்திகரிக்கலாம். ஜனங்களுடைய மனச்சாட்சியைச் சுத்திகரிக்கமுடியாது. தீர்க்கதரிசிகள் சொல்லுகிறபடி இது கர்த்தருடைய கிரியை (எரே. x. 1–6). வேதமார்க்க முறைமைகள் புதுப்பிக்கப்பட்டது. ஜனங்களுடைய ஆவிக்குரிய ஜீவியம் புதுப்பிக்கப்படவில்லை. ஆலயமும் அதன் வெளியான முறைமைகளைக் கொண்டாடுவதும் மேலான சலாக்கியமென்று ஜனங்கள் மேன்மைபாராட்டினார்கள். அதற்காக எரேமியா அவர்களை மிகவும் கடிந்துரைக்கிறான். 'கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்றுசொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக் கொள்ளாதிருங்கள். இதோ, ஒன்றுக்கும் உதவாத பொய்வார்த்தைகளை நீங்கள் நம்புகிறீர்கள்.' (எரே. vii. 4, 8). 'விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கும் யோசியாவின் சீர்திருத்தத்தில், எரேமியா ஒரு உதவியும் செய்யவில்லை. அது வெளியானதிருத்தம் என்றும், இருதயத்திலிருக்கும் உள்ளான தீமைகளை அது சீர்திருத்தவில்லையென்றும் ஓயாமல் இடித்துரைத்துக்கொண்டிருந்தான்.' நமது காலத்தில் இருக்கும் ஒரு ஞானி சொல்லுகிறார்: 'சகல எண்ணங்களுக்கும் அஸ்திபாரமான ஆவிக்குரிய நோக்கங்களும் விருப்பங்களும் சீர்திருந்தினாலொழிய, ஒரு ஜனசங்கத்தாரின் நிலையான சீர்திருத்தம் நடக்க முடியாது'.

தன் அரசாட்சியின் பதினெட்டாம் வருஷத்தில் பஸ்காவைக்கொண்டாடுவதற்கு அரசன் ஜனங்களை அழைத்தான் என்று ராஜாக்களின் சரித்திரத்தில் சொல்லியிருக்கிறது. 'இந்த உடபடிக்கையின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறபடி, நியாயாதிபதிகளின் நாள்தொடங்கி, இந்த பஸ்காவைப்போல் பஸ்கா ஆசரிக்கப்படவில்லை. (2 ராஜா. xxiii. 22). 'திரள்கூட்டம் அதை ஆசரிக்கவந்ததினாலும்; (2) அதை ஆசரித்ததில் நியாயப்பிரமாணத்தின் சகல

நியமங்களும் பூரணமாய்க் கைக்கொள்ளப்பட்டதினாலும் அதன் சிரேஷ்டம் விளங்கினது.' இதன் பின்னுள்ள வருஷங்களில் அவனுடைய அரசாட்சி சமாதானமும் க்ஷேமமுமாயிருந்தது. 1 எஸ்திராசில் சொல்லியபடி, அவனுடைய கிரியைகள் 'கர்த்தருக்கு முன்பாக நேர்மையாயும் அவனுடைய இருதயம் தெய்வபக்தியுள்ளதாயுமிருந்தது.' (i. 23.)

அரசனுடைய மரணத்தைக் கொண்டுவந்த யுத்தத்திற்கு போனதற்கு அவனுக்கு என்னகாரணங்கள் இருந்ததென்றறியவேண்டுமானால் யூதாவைச் சூழஇருந்த உலகராட்சியங்களைப்பற்றி சுருக்கமாய் விசாரித்தறிவது அவசியம். வடபாகங்களிலிருந்து பயங்கரமான ஒரு மிலேச்சசாதியான சிதியர் தெற்கே நோக்கிவந்தார்கள். யொசியாவின் அரசாட்சியின் மத்தியிலே அவர்கள் சீரியாவுக்குள் பிரவேசித்தார்கள். இதைப்பற்றி சரித்திரப் புஸ்தகங்களில் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் இந்த பயங்கரமான சத்துருவைப்பற்றி தீர்க்கதரிசிகளில் சில பல குறிப்புகள் கண்டிருக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டுதான் செப்பனியா 'கர்த்தருடைய நாளை'ப்பற்றி வெகுவாய் விவரிக்கிறான்.

வல்லமையுள்ள அசீரியாராட்சியம் தன் வீழ்தலுக்குத் தட்டித்தடுமாறிக் கொண்டிருந்தது. இஸ்ரவேல் மாத்திரமல்ல, சூழஇருந்த ஜாதியாரும் அசிரியாவின் கொடுமையினால் பல இடுக்கண்கள் அடைந்தார்கள். ஒடுக்கின ராட்சியத்தின்மேல் நாகூம் தீர்க்கதரிசி தேவனுடைய தண்டனையைக் கூறி அறிவிக்கிறான். நினிவேயின் வீழ்தலைக்கண்ணோக்கி தீர்க்கதரிசி சந்தோஷிக்கிறான். இந்த மகிழ்ச்சியில் யாதொரு பரிதாபமும் கலப்பில்லை. தங்கள் புராதன சத்துருவின் தண்டனைவந்ததென்று தீர்க்கதரிசி செய்தி கொண்டுவந்தபோது யூதாமனுஷர், களிப்புடன் பெருமூச்சுவிட்டு, ஒரு தூதன் நற்செய்தியுடன் மலைகள்மேல் வருகிறதைக்கண்டு பின்வரும் மகிழ்ச்சியான வார்த்தைகளையும் செவியுற்றுக் களிகூர்ந்தார்கள். 'சமாதானத்தைக் கூறி நற்செய்திகளை அறிவிக்கிறவனுடைய பாதங்கள் மலைகள்மேல் எவ்வளவு அழகாயிருக்கிறது.' இந்த சத்துரு இனிமேலில்லை. ஆனால் அதைப் போலொத்த குரோதமும் மோசமும் நிறைந்த இன்னொரு பெரிய ஜாதி முந்தின சத்துருவின் அழிவின்மேல் வல்லமையாய் எழும்பிற்று.

அது பாபிலோனிய ராட்சியம். அதன் அதிபதியாகிய நெபோபொலாசர் கி. மு. 607ல் நினிவேயைப் பிடித்தான். ஆபகூக் தீர்க்கதரிசி இந்த கல்தேயர் வருகையை விவரிக்கிறான். மகா பெரிதும் பயங்கரமுமான ஜனங்கள். அவர்கள் தேசத்தில் புகுந்து கொள்ளையிட்டு நாசம்பண்ணுவார்கள். (ஆப. i. 9–10, 17). இது சம்பந்தமாய் இந்த ஆகமம் முழுவதும் வாசிப்பது அவசியம். யொசியா அரசாட்சியின் பின்பாகத்தில் உலகத்தின் ராட்சியங்கள் இருந்த ஸ்திதி இதுவே.

இந்த காலத்தில் பார்வோன்நேகோ என்று பேர்தரித்த ஒரு வல்லமையும் பேராசையுமுள்ள அரசன் எகிப்தின் அதிபதியாயிருந்தான். வீழ்ந்துபோன அசிரியா ராட்சியத்தில் தன் ஆதிக்கத்தைச் செலுத்த ஆசித்தான். ஆகவே, எகிப்தின் ராஜாவாகிய நேகோ ஐப்பிராத்து நதியோரமான கர்கேமிஸ் பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணவந்தான். அப்பொழுது யொசியா அவனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப் புறப்பட்டான். (2நாளா. xxxv. 20). யொசியா அசிரியா ராட்சியத்தின் வல்லமை குன்றின சமயம்

பார்த்து அதற்கு அடிமையாயிருந்த சமாரியாவின்மேல் அதிகாரஞ்செலுத்தினுன். எகிப்து மேலான வல்லமையுள்ள ராட்சியம் ஆகிப்போனுல் தன் சுயாதீனம் மோசமாகும் என்று பயந்தான். நேகோவுக்கு சிறு யூதராட்சியத்துடன் போர்செய்யப் பிரியமில்லாமல் பின்வருமாறு செய்தி அனுப்பினுன். 'யூதாவின் ராஜாவே, எனக்கும் உமக்கும் என்ன? நான் இப்போது உமக்கு விரோதமாய் அல்ல, என்னேடு யுத்தம்பண்ணுகிற ஒருவனுக்கு விரோதமாய்ப்போகிறேன்; நான் தீவிரிக்கவேண்டுமென்று தேவன் சொன்னுர்; தேவன் என்னேடிருக்கிருர்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதைவிட்டுவிடும்.' (2 நாளா. xxxv. 21). யொசியா அதற்குச் செவிகொடாமல் நெகோவுக்கு விரோதமாய்ப் புறப்பட்டு மெகிதோவில் நடந்த சண்டையில் பலமாய்க் காயப்பட்டான். அவனை அரசனுடைய ரதத்தில் வைத்து எருசலேமுக்குக்கொண்டுவர அவன் காயத்தினுல் செத்துப்போனுன். அவனுடைய பிதாக்களோடு அவனை அடக்கம்பண்ணினுர்கள். 'யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யாவரும் யொசியாவுக்காக துக்கம் கொண்டாடினுர்கள். எரேமியா யொசியாவின்மேல் புலம்பல் பாடினுன்; சகல பாடகர் பாடகிகளும் இந்நாள்வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யொசியாவின்மேல் பாடுகிருர்கள்'. அவைகள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கிவருகிறது. (2 நாளா. xxxv. 25). பின்வருவது எரேமியாவின் புலம்பல்:—'கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவனும் எங்கள் நாசியின் சுவாசமாயிருந்தவனும் அவர்களுடைய படுகுழியிலகப்பட்டான்; அவனுடைய நிழலில் ஜாதிகளுக்குள் பிழைத்திருப்போமென்று அவனைக்குறித்துச் சொல்லியிருந்தோமே.' (புலம். iv. 20). யூதா சிறையிலிருந்து திரும்பியபின் யொசியாவைப்பற்றிய புலம்பல் ஜாதிக்குரிய ஏற்பாடாக கொண்டாடப்பட்டது. (1 எஸ்திராஸ். i. 32).

சகரியா தீர்க்கதரிசி, ஒரு ஜாதிக்கு நேரிடத்தக்க மகாகொடிதான இடுக்கண் எருசலேமுக்கு நேரிடும் என்பதைக் கண்ணுற்று அதன் புலம்பல் மெகிதோ பள்ளத்தாக்கிலுள்ள ஆதாத்ரிம்மோன் புலம்பலைப்போலிருக்கும் என்று சொல்லுகிருன். (சகரியா. xii. 11–14). அப்படியே வெளிப்படுத்தலிலும், 'கர்த்தராகிய ஆண்டவருடைய மகாநாளின் யுத்தம் மெகிதோ மலையிலுள்ள ஆர்மகெதோனில்' நடக்கும் என்றிருக்கிறது. (xvi. 14–16). அரசனுடைய மரணம் அவனுடைய சீர்திருத்தங்களுக்கும் அவனுடைய சகல நம்பிக்கைகளுக்கும் முடிவுண்டாக்கிற்று. யொசியா யூதாவின் பெரிய அரசர்களில் கடைசி அரசன். 'அவனுக்குப்பின் அவனைப்போன்ற ஒரு அரசனும் எழும்பினதில்லை.' (2 ராஜா. xxiii. 25). அநேக வருஷங்களுக்குப்பின் சீராக்கின் குமாரன் பேர்போன மனுஷனைத் துதிக்கும்போது சொல்லுகிறதாவது:—'யொசியாவின் ஞாபகம் ஔஷதம் செய்வோன் தன் வித்தையால் செய்த பரிமளதைலத்தின் கூட்டுவர்க்கம்போலிருக்கிறது; அது சகலருடைய வாய்களிலும் தேனைப்போல் மதுரமாயும் திராட்சரசப்பண்டிகையின் சங்கீதம்போலவும் இருக்கும்' எக்லிசியாஸ்ற்றிக்கஸ் (xlix. 1).

யோவாகாஸ். (2 ராஜா. xxiii. 31–5; 2 நாளா. xxxvi. 1–4).

இந்த அரசனைப்பற்றிச் சரித்திரப் புஸ்தகங்களில் சுருக்கியும் எரேமியா எசேக்கியேலில் விரித்தும் சொல்லியிருக்கிறது. அவனுடைய பிதாக்கள் செய்ததுபோல அவன் கர்த்தருடைய பார்வையில் பொல்லாப்பான

தைச் செய்தான். அவன் யோசியாவின் இரண்டாவது குமாரன். தன் தகப்பனைப்போல எகிப்துக்கு விரோதமாய் அசிரியாவுடன் சினேகம்பண்ணிக்கொள்வானென்று எண்ணி, தமயன் இருக்கத் தம்பியை ஜனங்கள் விரும்பித் தெரிந்துகொண்டு சிங்காசனத்திற்கு சரியான உரிமைக்காரன் அல்லாததுபற்றி அவனை அபிஷேகமும் பண்ணினார்கள். ஜனங்களுக்கு அவனைப்பற்றி மேலான நம்பிக்கையிருந்தது. அவன் தைரியசாலியாயிருந்தான். எசேக்கியேல் அவனைப்பற்றிய புலம்பலில் பின்வருமாறு பாடுகிறான். (xix. 1–9).

அது பாலசிங்கமாகி இரைதேடப் பழகி, மனுஷரைப் பட்சித்தது.
புறஜாதிகளும் அதின் செய்தியைக் கேட்டார்கள்.
அது அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டது.
அதைச் சங்கிலிகளினால் கட்டி எகிப்து தேசத்திற்குக் கொண்டுபோனார்கள்.

தன்னுடைய ஆலோசனையின்றி அவனை அரசனாக்கினதினிமித்தம் பார்வோன் நேகோ அவனை ரிப்லாவுக்குத் தருவித்து அவனை அரசிழக்கப் பண்ணி அவனை எகிப்துக்கு அனுப்பினான். அவனங்கே சிறையாக மரித்தான். ஜனங்கள் அவனுக்காக வெகுவாய் துக்கித்தார்கள். 'மரித்தவனுக்காக அழவேண்டாம், அவனுக்காகப் பரிதபிக்கவும்வேண்டாம், சிறைபட்டுப் போனவனுக்காகவே அழுங்கள்; அவன் இனித் திரும்ப வருவதுமில்லை, தன் ஜனனபூமியைக் காண்பதுமில்லை..........சல்லூமைக்குறித்து: அவன் இனி இங்கே திரும்பவராமல், தான் கொண்டுபோகப்பட்ட ஸ்தலத்திலே மரிப்பான்; இந்த தேசத்தை அவன் இனிக் காண்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.' (எரே. xxii. 10–12). அரசனுக்கு முந்தினபேர் சல்லூம். அரசனானபோது யோவாகாஸ் என்று மாற்றிவைத்துக்கொண்டான்.

இக்காலத்தில்தான் எரேமியா தனது விசேஷித்த ஊழியத்தைத் தொடங்கினான். அப்போது ஜாதியாரின் சன்மார்க்க ஸ்திதி வெகு தாழ்வாயிருந்தது. சிலர் வெகு பக்தத்துடன் தீர்க்கதரிசியைப் பின்பற்றினார்கள். என்றாலும் அவனுக்கு விரோதமான சத்ராதிகள் அனேகரும் பலத்தவர்களுமாயிருந்தார்கள். அவன் ஆசாரியனும் தீர்க்கதரிசியுமாயிருந்தான். இந்த இரண்டு வகுப்பிலும் ஈனமானவர்கள் அவனுக்கு விரோதிகளாயிருந்தார்கள். 'திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்துவருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருக்கிறது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்னசெய்வீர்கள்!' (எரே. v. 30, 31). இக்காலத்தின் ஸ்திதி ஏசாயாவின் காலத்தைவிட்டு மாறினதாயிருந்தது. ஏசாயாவின் விஸ்வாசம் எருசலேம் வெல்லக்கூடாத வல்லமையுள்ளது என்பது. எரேமியாவுக்கு அந்த நம்பிக்கை அற்றுப்போயிற்று. இரண்டு தீர்க்கதரிசிகளும் தேவதீர்மானத்தின் மகத்வத்தையும் யூதஜாதி பரிசுத்தமாய் ஸ்தாபிக்கப்படும் என்றும் போதித்தார்கள். ஏசாயாவின் நம்பிக்கை முழுஜாதியையும் பற்றியதல்ல, ஜனங்களில் மீந்ததைப்பற்றியதாயிருந்தது; என்றாலும் இதற்கு யூததுரைத்தனம் இருக்கவேண்டியதவசியம். அவனுக்குப்பின் எரேமியா தோன்றி காலத்தின் மாறுதலினிமித்தம் தேவன் இஸ்ரவேலுக்குப்பண்ணின கிருபையுள்ள வாக்குத்தத்தங்கள் மகிமையாய் நிறைவேறுவதற்கு, அவர்கள் ஒரு ஜாதியாராய் நிலைத்திருப்பது நிறுத்தப்பட்டு பட்டணங்கள் பாழாகி சிறையிருப்பும் வரவேண்டும். அப்புறம் ஆண்டவர் தமது ஜனங்களை ஒன்

ருய்க்கூட்டுவோர். ஏசாயாவுக்கு யூதமார்க்கமும் யூததுரைத்தன சுயாதீனமும் ஒன்றாயிருக்கும். எரேமியாவுக்கு துரைத்தனம் சிதைந்துபோனபின்தான் மார்க்கம் நிலைத்திருக்கக்கூடும். அவரவர் தோன்றின காலமாறுதலுக்குத் தக்கபடி அவரவர் போதித்தவைகளும் சரியே. அந்தந்த மாறுதல்களில் தேவனுடைய தீர்மானங்களும் நிறைவேறிற்று.

'ஆமோஸ் நீதியைப்பற்றியும், ஓசியா அன்பைப்பற்றியும், ஏசாயா விஸ்வாசத்தைப்பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள், எரேமியாவோ தனித்தனியாய் ஒவ்வொருவனையும் குறித்த தெய்வபக்தியைப் போதித்தான். இருதயத்தின் பக்தத்தைப் போதித்தான். ஒவ்வொரு மனுஷனும் தேவனுடைய பார்வையில் மதிக்கப்படாத விலையுள்ளவன் என்று காட்டினான். இம்மட்டும் தீர்க்கதரிசன போதனைகளின் நற்பலன் என்ன? ஒரு ஜாதியாருடைய தேவனுக்குப்பதிலாக உலகமுழுதுக்கும் உலகசரித்திரமுழுதிலும் ஒரே தேவன் வெளிப்படுத்தப்பட்டார்; யூதமார்க்க சம்பந்தமாய்மாத்திரம் தொழுது கொள்ளக்கூடிய கடவுளுக்குப்பதிலாக பிரமாணத்தையும் சன்மார்க்கத்தையும் ஸ்தாபித்த கடவுளாய் வெளிப்படுத்தப்பட்டார். மோசேயால் ஸ்தாபிக்கப்பட்ட தெய்வபக்தியின் அஸ்திபாரம் நிலைகொண்டு மேன்மையடைந்தது.'

யோயாக்கீம். (2ராஜா.xxiii.36—xxiv.6;2நாளா.xxxvi.58).

எகிப்தின் அரசன் யோவாகாசை அரசிழக்கப்பண்ணினபின் அவனுடைய சகோதரன் எலியாக்கீமை அரசனாக்கி அவனுடைய பேரையும் யோயாக்கீம் என்று மாற்றினான். அவன் கர்த்தருடைய பார்வையில் பொல்லாங்கானதைச் செய்ததால் பாபிலோன் அரசன் நேபுகாத்நேசார் அவனுக்கு விரோதமாய் படையெடுத்துவர இவன் அவனுக்கு அடிமை அரசனானான். மூன்று வருஷத்திற்குப்பின் எகிப்தின் துணையைநம்பி (எசேக். xvii. 13–21). பாபிலோனரசனுக்குத் தான்கொடுத்த ஆணையைமீறி அவனுக்குத் துரோகம் பண்ணினான். நேபுகாத்நேசார் யூதாவுக்கு விரோதமாய்ப் படையெடுத்து தேசத்தை நாசமாக்கினான். இது கர்த்தரிடத்திலிருந்துவந்த தண்டனை. அம்மோனியரும் ஏதோமியரும் அப்படியே தேசத்தில் புகுந்தார்கள். (எரே. xlix. 1; எசேக். xxv. 2–14). யோயாக்கீமின் முடிவைப்பற்றி வெவ்வேறுவிதமாய்ச் சொல்லியிருக்கிறது. ராஜாக்களில் அவன் தன் பிதாக்களோடே நித்திரைசெய்தான் என்றிருக்கிறது: நாளாகமக்காரன் அவன் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டான் என்று சொல்லுகிறான். எரேமியா (xxii.19; xxvi.30) 'அவன் ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான்......அவனுடைய பிரேதம் பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்துவிடப்பட்டுக் கிடக்கும்'. நேபுகாத்நேசார் எருசலேமுக்கு விரோதமாய்ச் சேனைகளை அனுப்ப, அவர்கள் அவனை நேபுகாத்நேசார் சமுகத்தில் சிறையாகக் கொண்டுபோய்விட்டார்கள். அவன் அவனைத் திரும்ப எருசலேமுக்கு அனுப்பி அங்கே அவனைக் கொல்லுவித்தான். அவனுடைய பிரேதத்தை அவமானமாய் நடத்தினார்கள்.

எகிப்துக்கு இப்போது யூதாவின்மேல் யாதொரு அதிகாரமுமில்லை. (2ராஜா.xxiv.27.) எகிப்தினரசன், கி. மு. 605 ல் நேபுகாத்நேசாரால் கார்கேமிஸ் சண்டையில் முறியடிக்கப்பட்டான். (எரே.xlvi.1–12). ஆக

வே பாபிலோனின் அதிகாரம் எகிப்தின் எல்லைமட்டும் செல்ல யூதாவினரசன் பாபிலோனுக்கு அடிமை அரசனானான். 'எகிப்தின் ராஜா அப்புறம் இந்த தேசத்திற்குப் புறப்பட்டுவரவில்லை'. (2ராஜா.xxiv.7). இதுமுதல் பாபிலோன் தான் யூதாவின் சரித்திரத்தில் சம்பந்தப்பட்டது. எல்நாத்தானுடைய குமாரத்தி நெகுஸ்தாள் அரசனுக்கு மனைவியாயிருந்தாள். எல்நாத்தான் அஞ்ஞானக்கூட்டத்திற்கு ஒரு மூப்பன். அரசன்மேல் நெகுஸ்தாளின் செல்வாக்குப் பொல்லாப்பானதாயிருந்தது. எஸ்த்ராஸ் அவனை 'அசுசியுள்ளவனும் துன்மார்க்கனுமாயிருந்தான்' என்று சொல்லி (1எஸ்த்ராஸ்.i.42) அவனுடைய மிதமிஞ்சிய ஆடம்பரத்தையும் இடித்துரைக்கிறான். நேகோ ராட்சியத்தின்மேல் விதித்த 40,000 பவுனையும் அரசன் ஜனங்கள் மேல் வரிப்போட்டு வசூலித்தான். தரித்திரதசையிலிருந்த ஏழை ஜனங்களுக்கு அது மிகுந்த பாரமாயிருந்தது. அப்படியிருந்தாலும் அரசன் தனக்கென்று ஒரு பெரிய அரமனையைக்கட்டி அதை 'கேதுரு மரங்களால் மச்சுப்பாவி, ரத்தாம்பரச்சிவப்பால் வர்ணம்பூசினான்'. இதற்காகவும் அவனுடைய பேராசை இடுக்கண்கொடுமைக்காகவும் அவனுக்கு இடித்துரைத்து, அவனுடைய முடிவு ஈனமானதாயிருக்கும், எவரும் அவனுக்காகப் புலம்பமாட்டார்களென்றுகூறி அறிவித்தான். (எரே.xxii.13, 18). அரசன் அஞ்ஞானத்திற்குரிய சகல அருவருப்புகளையும் கைக்கொள்ள ஜனங்களும் அவனைப் பின்பற்றினார்கள். 'எருசலேமைப் பிடிக்க ஒருவராலும் முடியாதென்று ஏசாயா சொன்னதை ஜனங்கள் கோட்பாடாகக் கொண்டார்கள். இந்தப் போதனைக்கு அஸ்திபாரமான நிபந்தனைகளையோ அலக்ஷியம்செய்தார்கள். சன்மார்க்கத்திற்குப் பதிலாக வெளியானமுறைமைகள் யூதமார்க்கத்திற்கு இன்றியமையாத விஷயங்கள் என்றெண்ணப்பட்டது'. ஜனங்களுடைய செய்கைகள் பொல்லாதவைகளாயிருக்கும்போது இந்த வெளியானமுறைமைகளில் பிரயோஜனமில்லையென்று எரேமியா கடிந்துணர்த்தினான். (எரே.vii.1–15).

எரேமியாவின் சீஷனான உரியா என்னுமோர் தீர்க்கதரிசி, யூதாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாக அந்தப் பெரிய தீர்க்கதரிசி உரைத்தவைகளைத் திரும்பவும்கூறி அறிவித்தான். அரசனும் பிரபுக்களும் அவன்மேல் மிகுந்த கோபங்கொள்ளவே, அவன் ஜீவன் தப்ப எகிப்திற்கு ஓடினான். அவனைத் திரும்ப அனுப்பிவிக்கவேண்டுமென்று யோயாக்கீம் எகிப்துதுரைத்தனத்தைக் கேட்டுக்கொள்ள அவன் வந்தபோது அவனைக் கொன்றுபோட்டான். அப்படியே எரேமியாவின் ஜீவனுக்கும் மிகுந்த அபாயம் நேரிட இருந்தது. கர்த்தர் அவனை ஆலயத்தின் பிரகாரத்தில் நின்று சகல ஜனங்களும் மனந்திரும்பினாலொழிய அவர்களுடைய நகரம் அழிக்கப்படும் என்று கூறும்படி கட்டளைகொடுத்தார். அதைக்கேட்ட ஆசாரியரும் தீர்க்கதரிசிகளும் வெகுண்டு 'நீ மெய்யாகவே சாகவேண்டும்' என்று தீர்மானிக்க, அதிகூதரான ஜனங்கள் அதற்கு உத்தரவு எதிர்த்தபடியால் அவர்கள் அவனைக் கொல்லமுடியாமற் போயிற்று. (எரே.xxvi.1–19,24). தன் எச்சரிப்புகளைத் தெளிவிப்பதற்கு எரேமியா வேளாவேளைகளில், முன்னடையாளமான செய்கைகளைப் பிரயோகித்தான். ரேகாபியர் முன் அவன் திராட்சரசத்தை வைத்தபோது அவர்கள் குடிக்கமாட்டோம் என்றார்கள். இது கர்த்தருடைய கட்டளைகளுக்கு ஜனங்களுடைய கீழ்ப்படியாமையை வெகு தெளிவாய் உணர்த்திக்காட்டினது: மனந்திரும்புவதற்கு இன்னொருதருணம் யோயாக்

கிமுக்குக் கொடுக்கப்பட்டது. பேசப்பட்ட வார்த்தைகளுக்கு அவன் செவி கொடாவிட்டால் எழுதப்பட்ட வார்த்தைகளைக் கவனிப்பானுக்கும். ஆகவே எல்லாவற்றையும் ஒரு சுருளில் எழுதும்படி ஆண்டவர் எரேமியாவுக்குக் கட்டளையிட்டார். எரேமியாவுக்கு உண்மையான சினேகிதனும் காரியதரிசியுமான பாரூக் அதை ஆலயத்தில் ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் வாசித்தான். அரசன் அதை வாசிக்கக்கேட்குமுன் எரேமியாவும் பாரூக்கும் மறைந்து கொள்ளவேண்டுமென்று ஜனங்கள் கேட்டுக்கொண்டார்கள். அரசன் சுருளை வாசிக்கக்கேட்டபோது அதைத் துண்டுதுண்டாக்கி நெருப்பில் போட்டான். அவைகள் அக்கினியில் படபடவென்று வெடித்து, அப்படியே அவனுடைய வீடும் நகரமும் தேசமும் நாசமாகும் என்று முன்குறித்துக் காட்டினது. உடனே எரேமியாவையும் பாரூக்கையும் பிடித்துத் தன்னிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்கள் தென்படவில்லை. ஆண்டவர் அவர்களை மறைத்துக்கொண்டார். (எரே. xxxvi. 1–32). இப்படியாக தன் மூப்பான இந்த அரசன் தன் தேசத்தை ரட்சிக்கத்தக்க கடைசி நற்றருணத்தையும் புறக்கணித்தான். அசீரியாவுக்குப் படிந்துபோகும்படி எரேமியா காலமெல்லாம் ஆலோசனை சொன்னுன். என்றாலும் இப்போது நேரும் தண்டனைகளெல்லாம் நீங்கி மகிழ்ச்சியான நாட்கள் வருமென்று எதிர்நோக்கிக்கொண்டிருந்தான்.

### யோயாக்கீன். (2 ராஜா. xxiv. 8–16; 2 நாளா. xxxvi. 9–10).

யோயாக்கீன் பதினெட்டுவயசாயிருந்து தன் தகப்பனுக்குப்பின் பட்டத்துக்குவந்து மூன்று மாசமாத்திரம் அரசாண்டான். எரேமியா அவனுக்கு கோனியா என்ற பேர் சொல்லுகிருன். (எரே. xxii. 24). அவனுடைய மாதா ராணியாகிய நெகுஷ்தாளுடைய தீமையான செல்வாக்கு மேற்கொண்டதால் அவன் தன் தகப்பனுடைய பொல்லாதவழியில் நடந்தான்; எரேமியா முதலிய உண்மையான தீர்க்கதரிசிகள் அவனிடத்தில் விரும்பி நெருங்குவதற்கும் இடமில்லை. அவனைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களில் சில ஒற்றுமைபேதங்கள் இருக்கிறது. அவன் பட்டத்திற்குவந்த போது எட்டு வயசா, பதினெட்டு வயசா? அவன் தன் மூப்பும் கொடுமையுமுள்ளவனு, (எசே. xix. 6) அல்லது ஜொசீபஸ் சொல்லுகிறபடி பட்சமும் சாந்தமுமுள்ளவனு? எரேமியா அவனைப் பிள்ளையற்றவனென்று (xxii. 30) சொல்லியிருக்க, 1 நாளா. iii. 17–18ல், அவனுக்கு எட்டுக் குமாரரிருந்தார்கள், அவர்களில் ஒருவன்பேர் சியால்தியேல் என்று சொல்லியிருக்கிறது. இவர்கள் சுவிகாரப் புத்திரரென்பது சிலருடைய அபிப்பிராயம். ஆனல் எரேமியாவின் வார்த்தைகள் அவனுடைய குமாரரில் எவனும் சிங்காசனம் வகிப்பதில்லை யென்றர்த்தங்கொள்ளலாமே இக்காலத்தில் எரேமியா ஒரு மட்பாத்திரத்தை உடைத்து அரசனுக்கும் ஜனங்களுக்கும் வரப்போகிற அழிவை அடையாளமாகக் காட்டினுன். (எரே. xix. 1). தீர்க்கதரிசியின் செய்கையையும் இடித்துரைப்பையும் கண்டுகேட்டவர்கள் மிகவும் உக்கிரம் கொண்டார்கள். ஆலயத்தின் விசாரணைக்கர்த்தனுகிய பஸ்கூர் தீர்க்கதரிசியை அடித்து காவலில் வைத்தான். (எரே. xx. 1–2). அடுத்தநாள் தீர்க்கதரிசி விடுவிக்கப்பட்டபோது பஸ்கூர் பேரிலும் அரசன் பேரிலும் வரக்காத்திருந்த தேவ கோபாக்கினையைக்கூறி அறிவித்தான். 'யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலதுகையின் முத்திரை மோதிர

மாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிந்துபோடுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். உன் பிராணனை வாங்கத்தேடுகிற பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேசார் கையில் உன்னை ஒப்புக்கொடுப்பேன்.' (எரே. xxii. 24, 25). எருசலேம் முற்றிகை போடப்பட்டு, அரசன், அவனுடைய தாய், பிரதானிகள் பராக்ரமசாலிகள், சிற்பாசாரிகள் முதலியவர்கள் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள். ஏழை ஜனங்கள் மாத்திரம் தேசத்தில் பின்விடப்பட்டார்கள். (2ராஜா. xxiv. 14). அரசன் அநேகவருஷம், நேபுகாத்நேசார் உயிரோடிருக்குமட்டும் காவலில் வைக்கப்பட்டான். ஈவில்மிரோதாக் அரசனானபோது அவனை விடுதலையாக்கி, பட்சமாய்நடத்தி மற்றும் சிறை அரசரைவிட மேலாக உயர்த்தி தன் போஜன மேஜையிலும் அவனுக்கு இடம் கொடுத்தான். பாரூக்கின் ஆகமம் வாசிக்கப்பட்டபோது ஈவில்மிரோதாக்கும் கவனித்துக்கொண்டிருந்தானென்று தள்ளுபடி ஆகமத்தில் கண்டிருக்கிறது. (பாரூக். i. 3). அவன் மகா ஐசுவரியவான். ஒரு அழகான தோட்டத்தில் ஒரு பெரிய அரமனையில் தன் அருமை மனைவி சூசன்னாளுடன் வசித்துக்கொண்டிருந்தான். 'மற்றெல்லாரையும்விட அவன் கனவானாயிருந்தபடியால், யூதர் அவனைச்சார்ந்துகொண்டிருந்தார்கள். (சூசன்னாள். i. 1–4).

எருசலேம் ஜனங்கள் தங்களரசனுக்காகத் துயரப்பட்டபோதிலும் அது அவர்களுக்கு மனந்திரும்புதலைக் கொண்டுவரவில்லை. 'கர்த்தர் நம்மைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார்.' (எசே. viii. 12; ix. 9). என்று தங்கள் விஸ்வாசத்தை இழந்து அந்நிய தேவர்களைக் கும்பிட்டார்கள். (எசே. viii. 5–18). பிரதான மனுஷரெல்லாம் சிறைகொண்டு போகப்பட்டபோதிலும், தேசத்தில் துரைத்தன ஒழுங்கைக்கொண்டு நடத்துவது நேபுகாத்நேசாருக்குத் தகுதியாய்க் காணப்பட்டது. யொசியாவின் மூன்றாவது குமாரனும் சிறைபோன அரசனுக்குச் சிற்றப்பனுமான மத்தனியாவை அரசனாக்கி அவனுடைய பேரையும் சிதேக்கியா என்று மாற்றினான். அதனர்த்தம் 'தேவனுடைய நீதி.'

எரேமியா பின்வரும் துயரமானவார்த்தைகளால் (எரே. xxii. 28–30) யோயாக்கீனுக்கு புலம்பல் பாடுகிறான்.

> கோனியா என்ற இந்த மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையோ?
> ஒருவரும் விரும்பாத பாத்திரமோ?
> அவனும் அவன் சந்ததியும் தள்ளுண்டதும் தாங்களறியாத தேசத்தில் தூரத்திவிடப் பட்டதும் ஏது?
> தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக் கேள்.
> இந்தப் புருஷன் சந்தானமற்றவன்.
> தன் நாட்களில் தழையாதவன் என்று இவனைக்குறித்து எழுதுங்கள்.
> அவன் வித்தில் ஒருவனாகிலும் தழைத்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாவில் அரசாளப்போகிறதில்லை.

இப்படியாக தாவீதின் வீடுமுடிந்தது. பின்வருமாறு எரேமியா சிறைகளோடு பரிதபிக்கிறான்:—ஆலயத்திற்குமுன் இரண்டு கூடைகளைக் கண்டான். ஒன்றில் நல்ல அத்திப்பழங்களும் மற்றதில் கெட்ட அத்திப்பழங்களுமிருந்தது. இனிமேல் சிறைமீள்பவர்கள் நல்ல அத்திப்பழங்கள். சிறைமீளாதவர்கள் கெட்டவைகள். அவர்கள் தேசங்கள்தோறும் நிந்தையுடன் அலைந்து திரிவார்கள். (எரே. xxiv. 1–10).

சிதேக்கியா. (2ராஜா. xxiv. 18–xxv. 7; 2நாளா. xxvi. 11–21).

சிதேக்கியா இருபத்தொருவயசாயிருந்து பதினொரு வருஷம் அரசாண்டான். அவன் நேசிக்கப்படத்தக்க மனுஷன். தெய்வபக்தியுள்ளவன். ஆனால் ஊக்கமற்றவன், தைரியஸ்தனுமல்ல. ஆகையினால் தேசத்தில் பின்விடப்பட்ட சில சத்துவமுள்ள மனுஷர்கையில் ஒரு தூண்டுகோலாயிருந்தான். எசேக்கியேல் அவனைப்பற்றி அவன், 'ஆளுகிற செங்கோலுக்கேற்ற பலத்தகொப்பு அல்ல.' என்று சொல்லுகிறான். (xix. 14). ஆகவே, ஓரபாயமான தறுவாயில், துரைத்தனத்தை நடத்துவது அவனால் கூடியகாரியமல்ல. நேபுகாத்நேசாருக்கு ராஜபக்தமாயிருப்பேனென்று (2நாளா. xxxvi. 13) கர்த்தர்மேல் ஆணையிட்டுக்கொடுத்தான். சிறிதுகாலம் அப்படியே பக்தமாயிருந்தான். அப்புறம் அக்கம்பக்கமிருந்த ஜாதியார் கல்தேயருக்கு விரோதமாய்ப்பண்ணின கட்டுப்பாட்டில் இவனும் சேர்ந்துகொண்டான். எசேக்கியேல் அதற்காக அவனை மிகவுங்கடிந்து கொண்டான். 'இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ? (xvii. 15).

இந்தக் கட்டுப்பாட்டுக்கு அனுகூலமான ஒரு கூட்டத்தார் எருசலேமிலிருந்தார்கள். அவர்கள் சுயாதீனம் தீவிரமாய்வரும், பாபிலோனுக்குக் கொண்டுபோகப்பட்ட ஆலயத்தின் தட்டுமுட்டுகள் இரண்டு வருஷத்திற்குள் திரும்பும், எகோனியாவும் மற்றும்சிறைகளும் திரும்புவார்கள், அப்போது பாபிலோனின்நுகம் உடைந்துபோம் என்றார்கள். (எரே. xxvii. 16; xxviii. 1–4). இது ஆனனியா கூறினவார்த்தைகள். இதனாலுண்டாகும் மோசத்தை எரேமியா அறிந்து அடிமைத்தனத்துக்கடையாளமாக தன் கழுத்தில் ஒரு பட்டிகையைப் போட்டுக்கொண்டு, ஜனங்களெல்லாரும் அப்படியே நுகத்துக்குள்ளாகவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குச் செவிகொடுக்கலாகாது என்று புத்திசொன்னான். (எரே. xxvii. 12-17). ஆனனியா வெகுண்டு எரேமியா கழுத்திலிருந்த பட்டிகையைத் துண்டுதுண்டாய் ஒடித்து 'இந்தப்பிரகாரமாக இரண்டு வருஷகாலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேசாருடைய நுகத்தை சகல ஜாதிகளின் கழுத்திலுமிருந்து உடைத்துப்போடுவேனென்று கர்த்தர் சொல்லுகிறார்' என்றான். (எரே. xxviii. 11). ஆனனியாவின் ஆக்கினை கூறப்பட்டு அவன் சீக்கிரம் மரித்தான். எரேமியா சஞ்சலம் நிறைந்தவனாய் ஆலயத்தைவிட்டுப்புறப்பட்டான். அப்புறம் அதற்குள் அவன் வரவேயில்லை ஆனனியாவும் அவனைச் சேர்ந்தவர்களும் பாபிலோனரசனுக்கு அடிமைகளாகக்கூடாதென்க, எரேமியா பாபிலோனரசனுக்கு அடங்கி இருங்கள், அப்போது உயிரோடிருப்பீர்கள் என்றான். சிதேக்கியா அபாயமான ஆலோசனைக்கு இணங்கினதுமன்றி எகிப்திலிருந்து உதவியும் தேடினான். (எசேக். xvii. 15–21).

ஆகவே, நேபுகாத்நேசார் சிதேக்கியாவுக்கு விரோதமாய்ப் புறப்பட்டு எருசலேமை முற்றிகைபோட்டான். பதினெட்டுமாசம் முற்றிகை நடந்தது. எகிப்து பாபிலோனைத் தாக்குவதாகப் பயமுறுத்த முற்றிகைபோட்ட சேனைகள் சிறிதுகாலம் விலகவேண்டி நேரிட்டது. எருசலேமின் அதிகாரிகள் இதன்பேரில் ஆனனியா சொன்னபிரகாரம் ரட்சிப்புண்டாயிற்றென்று ஆர்ப்பரித்தார்கள். ஆனால் கல்தேயர் எகிப்தின் சேனையை முறியடித்து எருசலேமைத்திரும்பவும் முற்றிகையிட்டார்கள்.

223489